# பொருளியல் நோக்கு

பெப்ரவரி 1990

## இலங்கையும் உலகமும்
## 1980 கள் - 1990 கள்


சமூக நீதி
பிதா திஸ்ஸ பாலசூரிய

மறுசீரமைப்பு
பிரட்மன் வீரக்கோன்

புதிய கட்டம்
தயான் ஜயதிலக

சிந்தனை மாற்றம்
கொட்பிரே குணதிலக

ஊக்குவிப்புக்கள்
ஏ. எஸ். ஜயவர்தன

மூன்றாவது மண்டல நிலை
காமனி கொரயா

தெரிவு நமதே
ஆர். பாஸ்கரலிங்கம்

தேசத்தை கட்டியெழுப்பும் பணி
ஹெக்டர் அபேவர்தன

கல்வித்துறை மாற்றங்கள்
ஸ்வர்ணா ஜயவீர

புனரமைப்பு
சுசில் சிரிவர்தன


மக்கள் வங்கி வெளியீடு

# கண்ணோட்டம்

## தொண்ணூறுகள்

## மாறுதல்களின் தசாப்தம்

வாழ்க்கையின் புதிய அத்தியாயம் ஒவ்வொன்றையும் மிகுந்த ஆவலுடன் துவக்குகிறோம். கடந்து போன நாட்களை ஏக்கத்துடன் நினைவு கூர்கிறோம். இன்று இரு தசாப்தங்களின் சந்தியில் நின்றிருக்கும் நாம் இதே மன நிலையிலேயே இருக்கிறோம். படிப்பினைகளை பெறுவதற்காக கடந்து போன எண்பதுகளை மீண்டும் ஒரு முறை திருப்பிப்பார்க்கிறோம். அதே நேரத்தில் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்குகிறோம். 'இன்று புதிதாய் பிறந்தோம்' என்றெண்ணி வாழ்க்கையை மீண்டும் துவக்குகிறோம்.

கொந்தளிப்பும், துன்பமும் சூழ்ந்த தசாப்தமொன்றில் வாழ்ந்து அதனைக் கடந்து வந்திருக்கிறோம். இலங்கையைப் பொறுத்தவரையில் ஒன்றன் பின் ஒன்றாக நெருக்கடிகள் வந்த காலகட்டம் அது. முதலரைப் பாகத்தில் வடக்கிலும் கிழக்கிலும் இனப்போராட்டம்; பின்னரைப்பகுதியிலோ தென்னிலங்கையில் கலவரங்கள்.

இந்த நிகழ்வுகள் எடுத்துவந்த பின்விளைவுகள் பல. பொருளாதாரம், வெளிநாட்டு உறவுகள், அரசின் இயல்பு, அரசுக்கும் மக்களுக்கும் இடையேயான தொடர்பு போன்ற பல்வேறு தளங்களில் இத்தகு பின்விளைவுகள் தோன்றின. இந்த அனுபவங்களிலிருந்து, எமக்குரிய விடைகளை காண்பதற்கும், இந்நிலை தோன்றுவதற்கான மூல காரணங்களை ஆராய்வதற்கும் முயன்றோம். இந்நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் வழியைத் தேடுவதில் ஆர்வம் கொண்டோம்.

முனைப்புமிகு நமது தேடலில் தேசத்தின் முன்னணி கருத்து தலைவர்களை அணுகினோம். எண்பதுகளின் படிப்பினைகள், வளர்ச்சிகண்டுள்ள நாடுகளின் வளர்ந்துவரும் முதன்மைத்துவம், வளர்முக நாடுகளுக்கான தெரிவுகள் மற்றும் வரும் பத்தாண்டுகளின் வரலாற்று முக்கியத்துவம் என்பன குறித்து விரிவான ஒரு கலந்துரையாடலாக 'பொருளியல் நோக்கின்' இந்த இதழ் அமைகிறது. உலக அமைவில் வைத்து இலங்கை நிலையை அலசி ஆராய்கிறது.

மாறிவரும் ஓர் உலகில், வாய்ப்புக்களும், சாத்தியங்களும் பல்கிப் பெருகி வரும் ஒரு சூழ்நிலையில், 'எமது தெரிவு எது?' என்ற முக்கியமான கேள்வியை எழுப்புகிறார் ஆர். பாஸ்கரலிங்கம். தேசியப்பெருவாழ்விலிருந்து முற்றிலும் ஒதுங்கிப்போயிருக்கிறது ஒரு புதிய தலைமுறை. இந்த இளம் சந்ததியினருக்கு புனர்வாழ்வளிப்பது வரும் தசாப்தத்தில் நாம் எதிர்நோக்கும் முக்கிய பணி. அது குறித்து சுசில் சிறிவர்தன எழுதுகிறார்.

எமது நெருக்கடி இளைஞர்களின் நெருக்கடி: கல்வித்துறையின் குறைபாடுகள் அல்லது பலவீனங்கள் இதற்கு எந்தளவுக்கு பங்களிப்புச் செய்திருக்கிறது? சிந்தனையைத் தூண்டும் பல உண்மைகளை முன்வைக்கிறார் பேராசிரியை சுவர்ணா ஜயவீர.

எண்பதுகள் எமது வெளிநாட்டு உறவுகளில் புதிய சிந்தனையை வேண்டி நின்ற காலகட்டம். சர்வதேச அமைவில் இலங்கையை வைத்து கண்ணோட்டமிடுபவர் பிரட்மன் வீரக்கோன்.

பிறிதொரு தளத்தில், இரண்டு முன்னணி இடதுசாரி சிந்தனையாளர்கள் இங்கு எழுதுகிறார்கள். பழைய தலைமுறை ட்ரொஸ்கிவாதியான ஹெக்டர் அபேவர்தன 'தேசியம்', 'அரசு' போன்ற பிரச்சினைகளை எழுப்புகிறார். புதிய தலைமுறையைச்சேர்ந்த தயான் ஜயதிலக, இன்று சோஷலிச உலகெங்கணும் எழுந்து வரும் புதிய அலைகளைப்பற்றி நுணுக்கமாக ஆராய்கிறார். 'பொருளியல் நோக்குக்கு' அளித்த விரிவான பேட்டியொன்றில், கம்யூனிசத்தின் நெருக்கடி மற்றும் சோஷலிசத்தின் எதிர்காலம் என்பன குறித்த சிந்தனையைத்தூண்டும் பல கருத்துக்களை அவர் முன் வைக்கிறார். அண்மைய வருடங்களில் உலக சோஷலிசத்தில் எழுச்சியடைந்து வந்த புதிய மாற்றங்களின் பின்புலத்தில் நின்று இலங்கையின் இன்றைய நெருக்கடிகள் சூழ்ந்த அரசியல் – பொருளாதார அமைப்பினை நோட்டமிடுகிறார். 'இன்றைய சூழலில் எமது தெரிவு எது' என்ற கேள்விக்கும் பதிலளிக்கிறார். கருத்தூன்றிப் படிக்க வேண்டிய கட்டுரை.

காமனி கொரயா, கொட்பிரே குணதிலக ஆகியோர் இன்றைய சூழலுக்கு நன்கு பொருந்தக்கூடிய பெறுமதிமிக்க கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள். துரித வளர்ச்சியும், அபிவிருத்தி வேகமும் 1990 களில் இடையீடின்றி முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமெனக் கூறும் பிதா திஸ்ஸ பாலசூரிய, இந்தப் பயணத்தில் சமூக நீதிக்கும் மனித உரிமைகளுக்கும் உரிய மதிப்பளிக்க வேண்டும் என்பதனை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்.

தென்னரைக் கோளத்தைப் பொறுத்த வரையில் எண்பதுகள் வாய்ப்புக்களை கோட்டை விட்ட ஒரு தசாப்தம் என்று பொதுவாக வர்ணிக்கப்படுகிறது. இலங்கையின் விஷயத்தில், பிறிதொரு அர்த்தத்தில், இது உண்மையாக இருக்கிறது. அதனால், இழந்த அனைத்தையும் வென்றெடுக்க வேண்டிய தருணம் இப்பொழுது வந்திருக்கிறது. தொண்ணூறுகளை நம்பிக்கையின் தசாப்தமாக, பெரு மாற்றங்களின் தசாப்தமாக, வளர்ச்சியின் தசாப்தமாக வார்த்தெடுக்கும் மகத்தான பணி நம்முன் இருக்கிறது.

# பொருளியல் நோக்கு

மலர் 15 இதழ் 11 பெப்ரவரி 1990

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## உள்ளே


| | | |
|---|---|---|
| ஆரிய அபேசிங்க | 32 | உர மானியமும் அரசி இறக்குமதிகளும் |
| நிகழ்ச்சிக்குறிப்பேடு | 37 | ஜனவரி 1990 |
| விசேஷ அறிக்கை | 2 | தொண்ணூறுகள்: அறைகூவல்களின் தசாப்தம் |
| காமனி கொரயா | 2 | தெற்கு - தெற்கு ஒத்துழைப்பு |
| ஏ. எஸ். ஜயவர்தன | 5 | கைத்தொழில் அபிவிருத்தி |
| ஆர். பாஸ்கரலிங்கம் | 6 | நெருக்கடி அல்லது சுபிட்சம்: தெரிவு நம் கைகளில் |
| ஸ்வர்ணா ஜயவீர | 9 | கல்வி: கொள்கைகளும் வாய்ப்புக்களும் |
| பிதா திஸ்ஸ பாலசூரிய | 13 | சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி |
| தயான் ஜயதிலக | 15 | கம்யூனிசமும் சோஷலிஸமும் |
| கொட்பிரே குணதிலக | 22 | ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் மயமாக்கல் |
| பிரட்மன் வீரக்கோன் | 27 | நட்புறவு பாலங்கள் |
| ஹெக்டர் அபேவர்தன | 29 | தேசத்தை கட்டியெழுப்பும் பணி |


JAFFNA

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களை பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## அடுத்த இதழ்

★ இலங்கையின் நெருக்கடிகள் சூழ்ந்த தமிழ் மாகாணம்: வடக்கு - கிழக்கு அபிவிருத்தி குறித்த ஓர் ஆராய்ச்சிப் பரிசீலனை

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

**வாசகர் கவனத்துக்கு**

சமீபத்தில் காகிதாதிகள் மற்றும் அச்சுக்கூலி என்பவற்றின் செலவில் கடும் ஏற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ள ஒரு சூழ்நிலையில் 'பொருளியல் நோக்கின்' தயாரிப்புச் செலவு இடையறாது உயர்ந்து சென்றிருக்கிறது. அதனால், இந்த மாதம் தொடக்கம் இதழ் விலையை ரூ. 10 ஆக உயர்த்துவது என்ற கடினமான – ஆனால் தவிர்க்க முடியாத – தீர்மானத்தை எடுத்துள்ளோம். இன்னமும் கூட, ஒரு பிரதிக்கான நம் அடக்கச் செலவு புதிய விலையைப் பார்க்கிலும் உயர்ந்தது என்பதனையும், மக்கள் வங்கி, ஒரு சமூகப்பணித்திட்டமாக இவ்வெளியீட்டினை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதனையும் வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# 1990 களின் தசாப்தம்

## வளர்முக நாடுகளிடையே ஒத்துழைப்பு: புதிய தசாப்தத்தின் தேவை

காமனி கொரயா

வியாபாரம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஐ.நா. (அங்டாட்) அமைப்பின் முன்னைநாள் செயலாளர் நாயகமும், கொள்கை கற்கைகள் நிறுவனத்தின் தற்போதைய தலைவருமான கலாநிதி காமனி கொரயா, தெற்கு ஆணைக்குழுவின் குறிக்கோள்களின் பின்புலத்தில் நின்று '90 களின் தசாப்தம் குறித்த தனது கண்ணோட்டத்தை செலுத்துகிறார்.

தெற்கு ஆணைக்குழு, இரண்டு வருடங்களுக்கு முன்னர், மூன்றாவது உலக உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சுதந்திர ஆணைக்குழுவாக நியமனஞ் செய்யப்பட்டது. ஆசிய, ஆபிரிக்க, இலத்தின் அமெரிக்க பிராந்தியங்களைச் சேர்ந்த சுமார் 298 உறுப்பினர்கள் இதில் கௌரவ அடிப்படையில் உழைத்து வருகிறார்கள். தான்சானியாவின் முன்னைய ஜனாதிபதி ஜூலியஸ் நியரேரா இந்த ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு கேட்கப்பட்டுள்ளார். இந்த ஆணைக்குழு அரசாங்க பிரதிநிதிகள் எவரையும் கொண்டிருக்கவில்லை. அதனால் உறுப்பினர்கள் சுதந்திரமாக பணிபுரிந்து, தமது கருத்துக்களை தெரிவிக்க முடியும். இதற்கான நிதி தெற்கிலிருந்து - பெரும்பாலும் அரசாங்கங்களிலிருந்து - கிடைக்கிறது. அதன் வழமையான செலவுகளுக்கு மூன்றாவது உலக நாடுகளுக்கு வெளியேயிருந்து நிதிகளைப் பெறுவதில்லை என்று ஆரம்பத்திலேயே ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும், கருத்தரங்குகள் போன்ற கூட்டு நடவடிக்கைகளுக்காக அது வெளிக்கொடையாளிகளிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளும்.

சர்வதேச ஸ்தாபனங்கள் அருகில் அமைந்திருப்பதனாலும் மற்றும் வசதிகளைக் கருதியும் இதற்கு ஜெனீவாவில் செயலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வளர்முக நாடுகள் தம்மை சுயவிமர்சனம் செய்து கொள்வதனை ஊக்குவிப்பதற்கு இந்த ஆணைக்குழு முதலில் முயற்சிக்க வேண்டுமென்று ஒரு கருத்து நிலவியது. படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முதலில் தென் மண்டல நாடுகளின் அபிவிருத்தி அனுபவங்களை கவனமாக ஆராய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. ஆணைக்குழுவின் ஆரம்ப கால முயற்சிகள் இவ்விஷயத்திலேயே பிரதானமாக மையம் கொண்டிருந்தன.

இதன் விளைவாக, பொருளாதார வளர்ச்சி மாதிரிகளை தேட வேண்டிய அவசியம் எழவில்லை. மாறாக, மக்களை அடிப்படையாக கொண்ட அபிவிருத்தியுடன் வளர்ச்சியை எடுத்து வந்த மாதிரிகளை தொடர வேண்டிய தேவையே எழுந்தது. இந்த மாதிரிகள் சமூகத்தின் பெரும்பாலான மக்களை சென்றடைந்தன.

வளர்முக நாடுகளுக்கிடையிலான, அதாவது தெற்கு - தெற்கு ஒத்துழைப்பு குறித்த பிரச்சினையில் ஆணைக்குழு கவனத்தை செலுத்தியது. ஒரு வகையில் இதுவே அதன் முக்கிய குறிக்கோளாகவும் இருந்தது. கடந்த சில தசாப்தங்களில் பெறப்பட்ட தெற்கு - தெற்கு ஒத்துழைப்பின் அனுபவங்களை ஆணைக்குழு பரிசிலனை செய்தது. வளர்முக நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கென கடந்த காலத்தில் '77 குழு, அணி சேரா இயக்கம், ஆபிரிக்க ஒருமைப்பாட்டுக்கான தாபனம் போன்ற அமைப்புக்களும் வேறும் பல பிராந்திய குழுக்களும் அமைக்கப்பட்டிருந்தன. இவையனைத்தும் உற்சாக மூட்டும் புது நிகழ்வுகள். எனினும், வளர்முக நாடுகளிடையே தொடர்புகளைப்பலப் படுத்தும் படிமுறை மிக மெதுவாகவே இடம் பெற்று வந்தது. எழுபதுகளில் உலக பொருளாதாரம் விரிவடைந்து வந்தபோது இந்நிகழ்வு கொஞ்சம் வேகமாக இடம்பெற்றது. எனினும், '80 களின் மந்தத்தின் போது தெற்கு - தெற்கு வர்த்தகமும், தொடர்புகளும் பிற்தங்கிய நிலையிலேயே இருந்தன. இறக்குமதிகளை தடை செய்தல் மற்றும் வடக்கின் பொருள் உற்பத்தியாளர்களுடன் போட்டியிட முடியாதிருந்தமை போன்ற தெற்கின் பலவீனங்களே இந்நிலைக்கு ஓரளவுக்கு காரணமாக இருந்தன.

### உலக சூழல்

வளர்முக நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்புக்கான குறிப்பான பல சாத்தியப்பாடுகளை தெற்கு ஆணைக்குழு பரிசீலித்தது. இவற்றில் பல ஏற்கனவே இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவை இன்னமும் அமுல் செய்யப்படவில்லை. தெற்கு - தெற்கு ஒத்துழைப்பு குறித்த குறிக்கோளை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு

முக்கியமான சில முன்னுரிமைகளை சிபார்சுசெய்யஆணைக்குழு விரும்பியது. எதிர்வரும் இரண்டு தசாப்தங்களுக்குமான போக்குகளையும், எறியங்களையும் நோக்கும் போது வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வடக்கிலிருந்து ஓர் உந்துசக்தி வருமென்று வளர்முக நாடுகள் எதிர்பார்க்க முடியாது என்ற கசப்பான உண்மை இப்பொழுது தெரிய வந்திருக்கிறது. இந்த உந்துவிசை இப்பொழுது அதன் வேகத்தினையும், துடிப்பினையும் இழந்து கொண்டு வருகிறது. எனவே, தனது சொந்தக்காலில் தங்கியிருக்கும் ஆற்றலை தெற்கு இனி வளர்த்துக் கொள்ள வேண்டும். வடக்கிலிருந்து வரும் உந்து சக்திக்கு குறைநிரப்புச் செய்யும் பொருட்டு தன் உள்ளார்ந்த ஆற்றல்களை அது இனங்கண்டு, வளர்த்தெடுப்பதற்கு இப்பொழுது காலம் வந்திருக்கிறது. இதனை உடனடியாக அடைந்து விட முடியாது. தெற்குக்கிடையிலான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், ஏற்பாடுகள், உடன்படிக்கைகள், பேச்சு வார்த்தைகள் என்பவற்றுக் கூடாக இதனைப் படிப்படியாக அடைய முயற்சிக்க வேண்டும். எனவே தெற்கு - தெற்கு ஒத்துழைப்பு தெற்கு ஆணைக்குழுவின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றாக இருக்கிறது.

வடக்கினதும் வடக்கின் கட்டுப்பாட்டில் இயங்கும் பல நிறுவனங்களினதும் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் உலக பொருளாதார அமைப்பின் பின்புலத்தில் நின்றே வடக்கு - தெற்கு உறவுகள் குறித்த பிரச்சினையை நாம் நோக்குதல் வேண்டும். இந்த நிறுவனங்களில் தெற்கு பங்கு பற்றிய போதிலும் அதன் செல்வாக்கு பலவீனமானதாகவே இருக்கிறது. வளர்முக நாடுகள் தமக்குள்ளே எத்துணை கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், இத்தகு அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் உலக பொருளாதார சூழலொன்று தொடர்ந்தும் இந்நாடுகளுக்கு தேவையாக இருக்கும். தமது சொந்த சேமிப்புக்களை திரட்டுவதற்கும், வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கும் வளர்முக நாடுகள் எத்தகு முயற்சிகளை மேற்கொண்டாலும், அந்நாடுகள் விற்பனை செய்யும் பொருட்களின் விலைகள் வெளி உலகில் வீழ்ச்சியடைந்தால், புதிய முதலீடுகளுக்குத் தேவையான மூல வளங்களைப் பெறுவது கடினமாக இருந்தால், வெளி நிதிக் கொடுப்பனவுகளின் பெரும் பகுதியை கடன் தீர்ப்பனவுகள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால், பாதுகாப்பு முறை மற்றும் ஏனைய தடைகள் காரணமாக அவை சந்தைகளைச் சென்றடைய முடியாதிருந்தால் இந்த முயற்சிகள் யாவும் தோல்வியையே தழுவிக் கொள்ளும். ஆகவே, விரிவடைந்துவரும் வலுவான உலகளாவிய சூழலொன்றுக்குள் தெற்கின் அபிவிருத்தி மிக அவசரமான ஒரு தேவையாக இருக்கிறது. வளர்ச்சியடைந்த நாடுகளுடனும், வடக்கில் உள்ள நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளையும், கலந்துரையாடல்களையும் மேற்கொள்வதன் மூலம் மட்டுமே இத்தகு சூழலொன்றை உருவாக்க முடியும். வடக்கு தெற்கு உரையாடலின் பின்னணியிலிருந்த அணுகுமுறை இதுவே. ஆனால், துரதிர்ஷ்டவசமாக சமீப வருடங்களில் இந்த உரையாடல் ஸ்தம்பித நிலையில் இருக்கிறது.

இந்த வடக்கு - தெற்கு உரையாடலை மீளத் தொடங்க வேண்டிய அவசியம் இப்பொழுது எழுந்துள்ளது. அபிவிருத்திப் பிரச்சினைகளின் சர்வதேச பரிமாணங்கள் குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை திருப்புவதற்கும், சர்வதேச பொருளாதார அமைப்பினை அபிவிருத்தி குறிக்கோள்களுடன் ஒத்துப்போகக் கூடியதாக மீளவமைப்பதற்கான படிமுறையொன்றை தொடங்குவதற்கும் இது அவசியமாகின்றது. அண்மைய ஆண்டுகளில் வடக்கு - தெற்கு உரையாடல் ஸ்தம்பித நிலையில் இருந்தபோதிலும் உலக பொருளாதாரத்தில் இப்பொழுது இடம்பெற்றுவரும் பாரிய மாற்றங்கள் '90 களில் ஒரு வித்தியாசமான காட்சி தென்படும் என்பதனை கோடிட்டுக்காட்டுகின்றன. சில நம்பிக்கை கீற்றுக்களும் அதே நேரத்தில் சில அபாய அறிகுறிகளும் தென்படுகின்றன. கெடுபிடி யுத்தம் ஓரளவுக்கு ஓய்ந்திருப்பதனாலும், ஆயுதப்பரிகரணம் மந்தமடைந்திருப்பதனாலும், சர்வதேச பதற்ற நிலை தணிந்திருப்பதனாலும் அபிவிருத்தியில் முழுக்கவனத்தையும் செலுத்தக்கூடிய சந்தர்ப்பமொன்றை உருவாக்க முடியும். அதே வேளையில், வேறு சில மாற்றங்களும் நிகழ்ந்து வருகின்றன. கிழக்கைரோப்பாவில் இடம் பெற்றுவரும் மாற்றங்களின் விளைவாக, வடக்கின் தொழில் வளர்ச்சி கண்ட நாடுகள் அவற்றின் அரசியல் முன்னுரிமைகளை கிழக்கைரோப்பாவை நோக்கி திசை திருப்பும் வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பமொன்றில் தெற்கிலுள்ள நாடுகளுக்கு கிடைக்கும் உதவி மற்றும் மூலவளங்கள் என்பன பாதிப்புறக்கூடும்.

கிழக்கு - மேற்கு தொடர்புகளில் ஏற்படும் முன்னேற்றம் வடக்கு - தெற்கு உறவுகளிலான முன்னேற்றத்துக்கு ஒரு முன்னோடியாக அமைய வாய்ப்பிருக்கிறது. வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய அனைத்துப்பிரிவுகளிலும் பொதுவான அக்கறை காணப்படும் ஒரு பிரச்சினையாக சுற்றுச் சூழல் பிரச்சினை காணப்படுகின்றது. ஆனால், இந்த பொது அக்கறையை தெற்கில் சுற்றுச் சூழல் ஆதார அபிவிருத்திப் படிமுறையொன்றாக எப்படி மாற்றியமைப்பது என்பதே பிரச்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

சினையாகும். தெற்கில் இடம் பெற்றுவரும் அபிவிருத்தியின் வேகத்தை குன்றச்செய்வதற்கு சூழலியல் விவாதத்தை முன்வைப்பது மிக எளிதான காரியம். காடுகளை வெட்டி அழிப்பதும், புதுப்பிக்க முடியாத மூலவளங்களை பாவிப்பதும் மோசமானது என்று இலகுவில் கூறிவிட முடியும். விஞ்ஞானம், தொழில் நுட்பம், பிறப்பியல் பொறிநுட்பம் போன்ற துறைகளில் இப்பொழுது பாரிய முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தெற்கில் உற்பத்தி ஆற்றலின் விரிவாக்கத்துக்கு இவை உதவ முடியும். ஆனால், விஞ்ஞானம், தொழில் நுட்பவியல் என்பவற்றின் நவீன முன்னேற்றப் பாய்ச்சல் காரணமாக தெற்கிலுள்ள நாடுகள் வரலாற்று ரீதியான ஒப்பீட்டு அனுகூலங்களை இழக்கக்கூடும் என்று மறுபுறத்தில் விவாதிக்கப்பட்டு வருகின்றது. மனித உழைப்புக்குப்பதிலாக ரோபோக்களையும், ஏனைய மாற்றீடுகளையும் அதிகரித்தளவில் பயன்படுத்திவரும் ஓர் உலகில் மலிவான ஊழியத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் இருக்க முடியாது. வருங்கால உலகம் பெருமளவில் விஞ்ஞான அறிவையே வேண்டி நிற்கும் என்றும், இந்த விஞ்ஞான அறிவு வளர்ச்சியின் வேகத்துடன் செல்ல முடியாத தெற்கின் நாடுகள் பின்தங்க வேண்டி நேரிடும் என்றும் கூறப்படுகிறது. இந்த வளர்ச்சியின் விளைவாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகள் மூலப்பொருட்களுக்கும் மற்றும் ஆரம்ப உற்பத்திகளுக்கும் கூட வளர்முக நாடுகளில் குறைந்த அளவுக்கே தங்கியிருக்கும் என்று சிலர் கூறி வருகின்றனர்.

இந்த நிகழ்வுப்போக்கின் கூட்டு விளைவாக வளர்முக நாடுகள் புறம் ஒதுக்கப்படக்கூடும். இவ்விதம் நிகழுமேயாயின் அது உலக சமாதானத்துக்கு கடும் அச்சுறுத்தல்களை எடுத்துவருவதாக இருக்கும். பாரிய சனத்தொகையை கொண்ட இந்நாடுகள் இவ்விதம் ஒதுக்கப்படுவதனை விரும்ப மாட்டா. இவ்விதமாக இந்த பொருளாதார, தொழில் நுட்ப, விஞ்ஞான நிகழ்வுப் போக்கு முன்னேற்றப்பாதையில் தொடர்ந்து செல்லுமாயின், தெற்கு புறமொதுக்கப்படுவதனை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத பட்சத்தில் பாரிய அபாயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

வளர்முக நாடுகள் பலம் பொருந்திய ஒரு அமைப்பில் தம்மை ஒற்றுமைப்படுத்தி இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டும். தெற்கு ஆணைக்குழு முக்கியமான பிரச்சினைகளை இனங்கண்டு இந்நாடுகளின் கவனத்துக்கு அவற்றைக் கொண்டு வரும். தெற்கு சுதந்திரமாக செயற்பட வேண்டுமாயின் அதற்கென ஒரு மேடை வேண்டும்; அத்துடன் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப வேண்டும்.

## நிறுவனரீதியான ஆற்றல்

தென் மண்டல நாடுகள் தமக்கென்று ஏதோ ஒரு வகையான ஸ்தாபனத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு வடக்கில் உள்ளது. சோஷலிச நாடுகளும் இத்தகைய அமைப்பொன்றைக் கொண்டுள்ளன. வளர்முக நாடுகளுக்கென எத்தகைய அமைப்புமில்லை. அத்தகைய ஸ்தாபனமொன்றின் உருவாக்கத்துக்கு ஆணைக்குழு சிபார்சு செய்யுமென நான் நம்புகிறேன். கடந்த காலத்தில் வளர்முக நாடுகளுக்கான - அணிசேரா இயக்கத்துக்கும் கூட - செயலகமொன்றை ஸ்தாபித்துக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் கைகூடவில்லை. அத்தகைய அமைப்பொன்றை ஸ்தாபித்துக் கொள்வது மிக எளிதான செயல் என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால், எந்தவிதமான சிக்கல்கள் இருந்த போதிலும் இன்றைய நிலையில் இது ஓர் அத்தியாவசியமான முயற்சியாகும். விழிப்புணர்வை கட்டியெழுப்புவதற்கும், எமது பேச்சுவார்த்தைகளை திட்டமிடுவதற்கும், அரசு சார்ந்த அரசுசாரா நிறுவனங்களுக்கிடையே தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதற்கும் அதே போல் தெற்கில் உள்ள கல்விமான்கள் குழுக்கள், விஞ்ஞானிகள் குழுக்கள், தகவல் தொடர்பு குழுக்கள் என்பவற்றுக்கிடையே தொடர்பினை வலுப்படுத்தி தெற்கு குறித்த விழிப்புணர்வை தூண்டுவதற்கும் இந்த உத்தேச ஸ்தாபனம் '90 களுக்கான நமது முன்னுரிமையாக் இருக்கிறது என்றே நினைக்கின்றேன்.

படு கடன் பிரச்சினையிலும் ஆணைக்குழு அதிக கவனஞ் செலுத்துகிறது. கடன் பிரச்சினைக்கு ஏதாவது தீர்வொன்று காணப்படாவிட்டால் மூன்றாவது உலகில் குறிப்பாக ஆபிரிக்காவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் அமைந்துள்ள பல நாடுகளில் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் எடுத்து வருவது மிகக்கடினமாக இருக்கும் என்று ஆணைக்குழு எண்ணுகின்றது. ஆணைக்குழு ஆரம்பத்திலேயே கடன் பிரச்சினை குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. வளர்முக நாடுகள் தமது கடன் பிரச்சினை குறித்த தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கும், கலந்து பேசுவதற்குமென தமக்கிடையே 'கடன்பட்டோர் பொது மன்றம்' ஒன்றை அமைத்துக்கொள்ள முடியும் என்று அவ்வறிக்கையில் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. ஏனெனில், கடன் கொடுத்த நாடுகள் இவ்விதம் கலந்து பேசி, தகவல்களை பரிமாறி, பொதுப் பிரச்சினைகளை அலசி வருகின்றன. கடன் பெற்றிநர்கும் பல நாடுகள் தமக்குகடன் கொடுத்

தவர்களுடன் வெற்றிகரமாக பேச்சு வார்த்தை நடத்திக் கொள்ள முடியும் என்று நம்புவதனால் மேற்சொன்ன மன்றம் உருவாக முடியவில்லை. கடன் முனையில் முக்கியமான நிவாரணம் எதுவும் வழங்கப்படாத பட்சத்தில் '90 களில் அபிவிருத்திப் படிமுறை எழுச்சி காண்பது கடினமானதாகவே இருக்கும்.

வரும் தசாப்தத்தில் '80 களின் நிகழ்வுகள் மீள இடம்பெறும் அபாயங்களும் உண்டு என்பதனை ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. தெற்கின் நலனுக்காக மட்டுமன்றி அனைத்துலக அரசியல், பொருளாதார உறுதிப்பாட்டுக்காகவும் இந்நிலைமையை மாற்றுவதற்காக சர்வதேச நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என அது வலியுறுத்துகிறது. இது எந்த அளவுக்கு வெற்றியடையும் என்பது வடக்கு காட்டும் பதிற்குறியிலேயே பெருமளவுக்கு தங்கியிருக்கிறது. சர்வதேச அரங்கில் சில சாதகமான அம்சங்கள் காணப்படுவதனை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். ஆனால், எதிர்மறையாக நிகழ்வுகள் இடம்பெறுவதற்கும் வாய்ப்பிருக்கின்றது.

ஆகவே, '90 களில் காட்சிகள் எவ்விதம் அமையும் என்று இப்பொழுதே கூறுவது சிரமமாகும். எனினும், வரும் தசாப்தம் தேக்க நிலை காணப்படும் தசாப்தமாகவன்றி, வீரியமிக்க அபிவிருத்தி இடம் பெறும் ஒரு தசாப்தமாக அமைய வேண்டுமென தெற்கு ஆணைக்குழு வலியுறுத்த வேண்டும். தசாப்தம் தொடங்கியிருக்கும் இவ்வேளையில் சர்வதேச சமூகம் அபிவிருத்தி பிரச்சினையில் 'அனைத்துமடங்கிய கடும் முயற்சியொன்றை எடுப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. ஆனால், கூடிய சீக்கிரத்தில், புவிக்கோளில் சமாதானம் நிலவும் பொருட்டு அபிவிருத்திப் பிரச்சினையில் புத்தார்வம் காட்டப்படும் என்று தெற்கு ஆணைக்குழு நம்புகிறது.

# கைத்தொழில் அபிவிருத்தியின் ஏழு தூண்கள்

ஏ. எஸ்; ஜயவர்தன

ஏ. எஸ். ஜயவர்தன நாட்டின் முன்னணி பொருளியலாளர்களில் ஒருவர். மத்திய வங்கியின் மூத்த துணை ஆளுனர் மற்றும் இலங்கை வங்கியின் தலைவர் போன்ற முக்கிய பதவிகளை வகித்தவர். தற்பொழுது கைத்தொழில் அமைச்சின் செயலாளராக பணிபுரிகிறார்.

இலங்கையில் கைத்தொழில் மயமாக்கலுக்கான புதிய உத்தியொன்றை அமைச்சர் ரனில் விக்கிரமசிங்கா டிசம்பர் 15 ம் திகதி அறிவித்தார். அரசாங்கம் அதனை 27 ம் திகதி ஏற்றுக் கொண்டது. முன்னைய அரச ஆவணங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு கொள்கை ஆவணம் இது. அது மட்டுமன்றி, தனியார் துறையினால் முன்மொழியப்பட்ட முதலாவது அரசாங்க கொள்கை அறிக்கையும் இதுவாகும்.

இலங்கையில் ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் அபிருவித்தியை செழித்தோங்கச் செய்யும் நோக்கில், பதவி ஏற்ற உடனேயே விரிவான கொள்கை வழிமுறைகளை தயாரிக்கும் பொருட்டு, தனியார் துறை தொழில் முயற்சியாளர்களை அமைச்சர் அழைத்தார் ''அடுத்த 6 ஆண்டுகளில், புதிதாக கைத்தொழில் வளர்ச்சிகண்ட நாடுகளின் அந்தஸ்துக்கு இலங்கையையும் எடுத்து வருவதற்கு மிகக் கடுமையான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்'' என்று இந்த ஆவணம் குறிப்பிடுகின்றது. வருகை தந்திருத்தவர்கள் தம்மிடையே பல குழுக்களாக பிரிந்து தமது சிபார்சுகளை உடன் முன்வைத்தனர். இதனையடுத்து அமைச்சுக்கள் திணைக்களங்களுடனும், முன்னணி தொழில் அதிபர்களுடனும் ஆலோசனைக்கலப்பு இடம் பெற்றது. இறுதி விளைவாக ''இலங்கையில் கைத்தொழில் மயமாக்கலுக்கான உத்தி'' என்ற சிறந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது.

நான் காணும் அளவில் இந்த உத்தி, 7 முக்கிய தூண்களை அல்லது நம்பிக்கைகளை ஆதாரமாக கொண்டிருக்கிறது அவை யாவன.

1. பொதுவாக விவேகமான பொருளாதார 'கொள்கைகளை பின்பற்றுதல்.
2. தனியார் துறை அபிவிருத்திக்கு அழுத்தம் கொடுத்தல்.
3. வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல்.
4. ஏற்றுமதி நோக்கிலான அபிவிருத்தி.
5. குறுங்காலத்தில் விசேஷ ஊக்குவிப்புக்களை அளித்தல்.
6. பொது வசதி, மனித வள அபிவிருத்தி.
7. கைத்தொழில்களிடையே தொடர்புகளை ஸ்தாபித்தல்.

புதிதாக தொழில் வளர்ச்சி கண்டிருக்கும் கிழக்காசிய நாடுகள் மேற்கூறிய உத்திகளைப் பின்பற்றியே சமீப ஆண்டுகளில் (உலகளாவிய தேக்க நிலைக்கு மத்தியிலும்) அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டு வந்துள்ளன. வெளிநாட்டு உதவி, மறைமுக அரச மானியம், இறக்குமதிப் போட்டியிலிருந்து பாதுகாப்பு, கவர்ச்சிமிகு வெளிச் சூழல் போன்ற வேறு சில காரணிகளே இந்நாடுகளின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்துள்ளன என்று கூற பக்கச்சார்புள்ள அவதானிகள் முயன்று வந்துள்ளனர். ஆனால், புதிதாக வளர்ச்சி கண்ட இந்நாடுகள் சரியான அளவில் கொள்கைகளைவகுத்து, போட்டிப் பொருளாதாரமொன்றை ஊக்குவித்துச் செயற்பட்டமையாலேயே மக்களுக்கு கவர்ச்சிமிக்க ஊக்குவிப்புக்கள் கிட்டின என்று நடுநிலை விமர்சகர்கள் கூறிவருகின்றனர்.

# 1990 களின் தசாப்தம்

## நெருக்கடி அல்லது சுபிட்சம் தெரிவு எம் கைகளில்

ஆர். பாஸ்கரலிங்கம்

ஆர். பாஸ்கரலிங்கம் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த மூத்த அதிகாரிகளில் ஒருவர். தற்பொழுது நிதி, கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சின் செயலாளராக பணிபுரிகிறார். அரசாங்க அபிவிருத்தி உத்தியை வகுப்பதிலும், செயற்படுத்துவதிலும் முக்கிய பங்கினை வகிக்கிறார்.

1990 கள் என்றுமில்லாதவாறான மாற்றங்களையுடைய யுகத்துக்கு எம்மை இட்டுச்செல்லும். அத்தகைய மாற்றங்கள் சமனற்ற வாய்ப்புகளை கொண்டிருக்கும். வருங்காலம் குறித்து கருத்து வெளியிடும் பேராசிரியர் ஆர்தர் சி. கிளார்க் 1990 கள் தொடர்புச்சாதனங்கள், கணணித் தொழில் நுட்பவியல், விண்வெளி ஆய்வுத்துறைகளில் மாபெரும் மாற்றங்களை எடுத்துவரும் என்று கூறுகிறார். மேலும், கல்வி குறிப்பாக, வளர்ச்சியடைந்த விஸ்தரிக்கப்பட்ட விஞ்ஞான கல்வி 1990 களில் ஒரு முக்கிய இடத்தைப்பெறும் என்றும் அவர் கருதுகிறார்.

இம்முன்னுரைத்தலை நான் நிச்சயம் ஏற்றுக்கொள்வேன். எனினும், அவை நியாய உணர்வுள்ள உலக சமுதாயத்தை அமைக்கும் அவாவின் பாரிய, அதிமுக்கிய திட்டத்தின் ஒரு பகுதிதான் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போக்கு ஏற்கனவே உருப்பெற்றுவிட்டது. 1990 களில் அது நாளாந்தம் அதிகரித்த வேகத்துடன் செயல்படும். முறையான பூகோள - அரசியல் மாற்றங்கள் இப்போக்கின் பெறுபேறாக வரும் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். ஒருவரில் மற்றவர் தங்கியிருக்கும் உணர்வு தேசிய அரசு கோட்பாட்டை படிப்படியாக, ஆனால் உறுதியாக குறைக்கும். இப்போக்கின் இறுதிப்பெறுபேறு அதிகரித்த அமைதியுடன், உலகெங்கும் வாழ்க்கைத்தரத்தின் உயர்வுக்கு வழி செய்வதாயமைய வேண்டும்

ஒரு புதிய போக்கு எழுச்சி கண்டு வருகிறது என்பதற்கு சான்றுகள் பலவுள. நாம் 'கிளாஸ்நோஸ்ட்' 'பெரெஸ்த்ராய்க்கா' என்ற பதங்களை அறிந்துள்ளதோடு, சமீபத்திய மாதங்களில் கிழக்கு ஐரோப்பாவில் இடம்பெறும் தொடர்ச்சியான மாற்றங்களை உன்னிப்பாக அவதானித்து வந்துள்ளோம். இக்கருத்துக்கள் மற்றும் நிகழ்வுகள் மீது பல சம முக்கியத்துவம் வாய்ந்த மாற்ற அளவு மானிகளை பயன்படுத்தலாம். உதாரணமாக, பின்வருவனவறை கூறலாம்.

1. வர்த்தகந் நடைகளை நீக்கி வர்த்தகம் மற்றும் தீர்வைகளுக்கான உடன்படிக்கை (GATT) மூலமாக சர்வதேச வர்த்தகத்தை விருத்தி செய்வதற்கான உலகளவிய அமைப்பு ரீதியான முயற்சிகள்.

2. சூழலை பாதுகாப்பது முதல் சவால் என்ற முன்னுரிமை; அது உலகளாவிய ஒரு சவால் என்பதனை அங்கீகரிப்பதில் ஒருமித்த கருத்து.

3. 1992 ல் ஐரோப்பிய சந்தையை இணைப்பதற்கான திட்டம், 1997 ல் ஹொங்கொங்கை சீனாவுடன் இணைப்பதற்கான திட்டம் இவைகளுடன் வளர்ந்து வரும் பொருளாதாரச்சக்தி ஆசிய நாடுகளில் பரவுதலும், அந்நாடுகள் மீது ஏற்படுத்தும் செல்வாக்கும்.

4. அதிகரித்த தொடர்புகள்; உணர்வுர்வமான பிரச்சினைகளுக்கும், விடயங்களுக்கும் கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் தீர்வுகாணுதல். இவைகளை நோக்கமாகக் கொண்டு பதற்றம், சந்தேகம், எதிர்ப்புணர்வுத் தணிவுகளுக்கான முறையான அணுகு முறைகள்.

### இலங்கை 1990 களில்

சுருக்கமாக, இந்நிகழ்வுகள் உலக சமுதாயத்தில் இடம் பெறும் முழுமையான அமைப்பு முறை மாற்றங்களை தெளிவாகக் காட்டுகின்றன. எனினும், இவை இலங்கைக்கு எவ்வாறு பொருந்தும்; ஏற்கனவே ஏற்பட்டுள்ள மாற்றங்களிலும் இனி வரவிருக்கும் மாற்றங்களிலுமிருந்தும் நாம் எவ்வாறு பயன்பெறப் போகின்றோம்.

இதற்கான பதில் மிக இலகுவாக சுயஉதவி, சுயகட்டுப்பாடு என்பதுதான். இவற்றைத் தெரிவு செய்துகொள்வதும், கைவிடுவதும் முற்றிலும் எம்மைப்பொறுத்தது. மாற்றத்தின் நடைமுறைக்கு பயனுள்ள பங்களிப்பை செய்யக்கூடிய நாம், அதன் பலன்களில் பங்கை கோரலாம். அல்லது பரிணாம நகர்வுக்கு குறைந்த அளவு பங்களிப்பை செய்யும் சாதாரண பார்வையாளராக குறைந்த பங்கை பெறலாம். எமது படிப்பினைகளை

( 36 ம் பக்கம் பார்க்க )

# 1990 களின் தசாப்தம்
# புனரமைப்பிலிருந்து மக்கள் அபிவிருத்தியை நோக்கி

கபில் சிர்வர்தன

> கபில் சிர்வர்தன 1971 கிளர்ச்சியில் பங்கேற்றவர். அதனால் புனருத்தாரணம் குறித்து அவருக்கு நேரடி அநுபவம் உண்டு. இப்பொழுது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராகவும், சனசக்தி ஆணையாளராகவும் பணியாற்றி வருகின்றார். மக்கள் தாமாகவே முன்வந்து கலந்து கொள்ளும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் தேவையை அவர் இங்கு வலியுறுத்துகிறார்.

புனருத்தாரணமே '90 களில் நமது முதல் முன்னுரிமையாக இருக்க வேண்டும். இது பெருந்தொகையான இளைஞர்களை உள்ளடக்கிய ஒரு விஷயம். இளைஞர்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் ஒரு வருடமாக 1990 அமைய வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதனை ஒரு தேசிய முன்னுரிமையாக நாம் கருதும் பட்சத்தில், நிறைவேற்ற வேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன. முதலில் எம்மிடம் தெளிவான ஒரு புனருத்தாரண கொள்கை இருத்தல் வேண்டும். அக்கொள்கை வரும் பத்தாண்டுகளில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் புனருத்தாரண பிரச்சினைகளை இனங்கண்டு, வரைவிலக்கணம் செய்வதாக இருக்கும். இதற்கான உத்தியொன்றை வகுத்துக்காட்டும் கொள்கை ஆவணமொன்று தேவை. அத்துடன் அதற்கான வாக்குப்பணமும் ஒழுங்கு செய்யப்படல் அவசியம். கொள்கை ஆவணமொன்று கிடைக்கக் கூடியதாக இருந்தால் வேறு சில முக்கிய நோக்கங்களுக்கும் அது பயனுள்ளதாக அமையும். புனருத்தாரணம் குறித்து நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகள், சமூக குழுக்கள் மற்றும் கருத்து தலைவர்களிடையே கருத்தொற்றுமையை உருவாக்குவது இந்நோக்கங்களில் ஒன்றாகும். நாடு தற்போதைய நெருக்கடியிலிருந்து 1990 களில் மீண்டு வர வேண்டுமாயின், இத்தகைய கருத்தொருமைப்பாடு அத்தியாவசியமான ஒன்றாகும்.

இரண்டாவதாக, இக்கொள்கை ஆவணம் ஒரு பொதுக்கல்வி ஆவணமாகவும் பயனுள்ளதாக இருக்கும். கொள்கை வகுப்போர் மற்றும் மேட்டுக்குடியினர் என்போரை அடக்கியமட்டத்துக்கு அப்பால் இந்த ஆவணம் சென்று சாதாரண மக்களுக்கு உணர்ச்சியூட்டுவதாகவும், பிரச்சினையின் மூலங்களை அவர்கள் அறிந்துகொள்ள உதவுவதாகவும் இருக்க வேண்டும். தேசிய அபிவிருத்தியில் ஒவ்வொருவருக்கும் இருக்கும் பங்கினை மக்கள் உணர்ந்து கொள்வதற்கும் இது உதவும்.

புனருத்தாரண முகாம்களில் இருக்கும் இளைஞர்கள் அனைவருமே தம்மை ஏதோ ஒரு தொழிலில் ஈடுபடுத்திக்கொள்வதில் அல்லது சுயமாக ஏதேனும் தொழில் செய்வதில் விருப்புடையோராகவே இருப்பார்கள். எனவே அவர்கள் தாம் செய்யவிருக்கும் தொழில்களுக்கு அவசியமான திறன்களில் சரியான பயிற்சிபெற்றவர்களாக இருத்தல் வேண்டும். மக்கள் உள்ளங்களில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு புனருத்தாரண நிகழ்ச்சித்திட்டம் உதவ முடியும்'

சம்பந்தப்பட்ட அனைத்து திறத்தாருடனும் இப்பிரச்சினை குறித்து நாம் கலந்துரையாட வேண்டும். வெவ்வேறு குழுக்களுக்குள்ளும் குழுக்களுக்கிடையேயும் இது குறித்த விவாதங்களும் இடம் பெற வேண்டும். சமூக சேவையாளர்கள், உளவியலாளர் சமூக விஞ்ஞானிகள் மற்றும் புத்திஜீவிகள் போன்றோர் இந்த விவாதங்களில் பங்குகொண்டு அவற்றுக்கு உயிரோட்டத்தை வழங்க 'முடியும்.

அனாதையான சிறுவர்கள் மற்றும் சமீபத்திய போராட்டங்களின்போது பாதிப்படைந்த சிறுவர்கள் குறித்து நாங்கள் விசேட அக்கறை காட்ட வேண்டும். அவர்கள் சேர்ந்த குடும்பம் சமூகம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு. அவர்களுக்கென்று சிறப்பான நிகழ்ச்சித்திட்டங்கள் வகுக்கப்படுதல் அவசியம். ஆனால் இவற்றை மேற்கொள்வதற்கு சரியான, முழுமையான தகவல்கள் கிடைக்க வேண்டும். தகவல் வங்கி போன்ற ஒரு அமைப்பு இங்கு முக்கியம் பெறுகிறது. யுனிசெப் போன்ற அமைப்புக்கள் வெளிக்கள ஆய்வுகளிலும், நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பிலும் உதவ முடியும்.

## சனசக்தி

புனருத்தாரணம் என்பது, வன்செயல்களுக்கான மூலகாரணங்களைத் தேடுவது என்று பொருள் கொள்ளலாம். சனசக்தி இந்த படிமுறையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். இவ்வருடத்தில் மீதி 245 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும்

வாழும் தகைமை பெற்ற குடும்பங்களை அடையாளம் காணும் வேலைகளை பூர்த்தி செய்ய முடியும் என்று நாம் நம்புகிறோம். அபிவிருத்தி செலவினத்தில் 20 –35 சதவீதம் சனசக்தி உதவி பெறும் குடும்பங்களுக்கென்றே ஒதுக்கப்படும்.

கூடற்றொழில், வீடமைப்பு சிறு ஏற்றுமதிப்பயிர்கள் என்பவற்றுக்கூடாக இக்குடும்பங்கள் அபிவிருத்தி நிகழ்வுப்போக்கில் நுழையும். இதன் விளைவாக சனசக்தி உதவி பெறுவதற்கு கியூ வரிசையில் காத்திருப்போரின் எண்ணிக்கையை குறைத்துக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். வீடமைப்பைப் பொறுத்தவரையில் அழிவுற்ற வீடுகளை புனருத்தாரணம் செய்தல், நகர வறியோருக்கான வீடமைப்பு போன்ற பல உப நிகழ்ச்சித்திட்டங்கள் உண்டு வீடற்றோர், 15 இலட்சம் வீடுகளை அமைக்கும் பெருந்திட்டத்தின் கீழ்வரும் பல உப திட்டங்களில் ஏதாவதொன்றிலிருந்து அனுகூலத்தை பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது.

## மாற்றீடுகள்

நாங்கள் பின்பற்றி வந்திருக்கும் பரம்பரிய மாற்றீடுகள் யதார்த்தமான மாற்றீடுகள் என்று நான் நினைக்கவில்லை. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு வழமையான உபாயங்களிலும். பாரம்பரியமான அபிவிருத்திக் கொள்கைகளிலும் நாம் தங்கியிருப்போமேயானால் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பதிலாக மேலும் மேலும் நாம் அதில் சிக்கிக்கொள்ள வேண்டி நேரிடும். வரும் தசாப்தத்தில் புதிய மாற்றீடுகளை தேடுவதே எமக்குள்ள ஒரே நம்பிக்கையாகும். முன்னைய அபிவிருத்தி திட்டங்கள் மக்கள் அபிலாஷைகளை எந்தவகையிலும் நிறைவு செய்யத்தவறிவிட்டன. இந்தப் பின்னணியில் நின்றே தற்போதைய நெருக்கடி தோற்றம் பெற்றது. எமது உற்பத்தித் திறனை வளர்த்தெடுப்பதிலேயே நாங்கள் முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டும். உற்பத்திப் பெருக்கத்தில் மட்டுமே வளர்ச்சி தங்கியிருக்கிறது,

எம்மிடம் பாரிய அளவிலான அனுபவம் குவிந்து கிடக்கிறது. இந்த அனுபவக் குவியல் இதுவரை சரியாக அங்கீகரிக்கப்படவுமில்லை; ஆராயப்படவுமில்லை. அதனைப்பற்றி யாரும் முறையாக எழுதவுமில்லை. நகர, கிராம, பெருந்தோட்டப்பிரிவுகளைச்சேர்ந்த வறிய மக்கள் மேற்கொண்ட முயற்சிகள், போராட்டங்கள், முன்னோடி பிரயத்தனங்கள் மற்றும் கிராம மட்டத்திலான பரஸ்பரமரண உதவிச்சங்கங்கள் மக்களின் முறைசாரா சிறு குழுக்கள், குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் மட்டும் அறியப்பட்ட இளைஞர் அமைப்புக்கள் போன்றவற்றின் முயற்சிகள் குறித்த அனுபவங்கள் குவிந்து கிடக்கின்றன. இந்த முறைசாரா அமைப்புக்களும், தொண்டர் குழுக்களும் தத்தம் பிரதேச, கிராம எல்லைகளுக்குள் பயனுள்ள பல சேவைகளை வழங்கி வந்திருக்கின்றன.

ஆனால் இத்தகு முயற்சிகள் பரவலாக அறியப்படவில்லை. குறிப்பாக், முறைசார் அமைப்புக்கள், அரசு மற்றும் மேட்டுக்குடியினர் போன்ற பிரிவுகளில் இந்த முன்முயற்சிகள் பற்றிய சரியான அறிவு இருக்கவில்லை. முக்கியமாக கொழும்பில் வாழும் மக்களுக்கு இவை குறித்து எதுவும் தெரியாது. இதனால் நாட்டு மக்களிடையே காணப்படும் மூலவளங்கள், திறன்கள், ஆற்றல்கள் என்பவற்றை நாங்கள் சரியாக இனங்கண்டுகொள்ள முடியாது போய்விட்டது. எனது அனுபவத்தின்படி, இலங்கையின் எந்த இடத்திலும் எந்த சமூகத்திலும் நான் வறிய மக்களைக் காணவில்லை. ஆனால், தமக்குள் உள்ளார்ந்த ஆற்றலும் வளமும் மறைந்து கிடக்கும் 'வறியோர்' என்று அழைக்கப்படும் மக்கள் பிரிவினரையே நான் கண்டுள்ளேன்.

'வறியோர்' என்று அழைக்கப்படும் மக்கள் பிரிவினரிடையே இங்ஙனம் திரண்டிருக்கும் உள்ளார்ந்த ஆற்றல்களையும், திறமைகளையும் எமது கொள்கை வகுப்போர், கோட்பாட்டாளர், மேட்டுக்குடியினர் ஆகியோர் இதுவரை சரியாக இனங்கண்டு கொள்ளாததே இங்குள்ள பிரச்சினையாகும். பாரம்பரிய அறிவு மற்றும் இதுவரை நாம் கொண்டிருந்த கண்ணோட்டம், அபிப்பிராயம் என்பவற்றை முற்றாக மறந்து விடுவதற்கு இப்பொழுது தருணம் வந்திருக்கிறது. அடித்தட்டு மக்களின் அதாவது மக்கள் சார்ந்த துறையின் வளமான, சிருஷ்டிபூர்வமான அனுபவம் மற்றும் போராட்டங்கள், முன்முயற்சிகள் என்பவற்றைப்பயன்படுத்தி, அவர்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்களை வகுக்கும் விஷயத்தில் இதுவரை தோல்வியே ஏற்பட்டுள்ளது. இந்த அம்சத்தை கவனத்தில் எடுத்துத்தான் இனிமேல் எந்த திட்டமும் வகுத்து, அமுல் செய்யப்படல் வேண்டும்.

கிராமங்களைப்பற்றி பேசும்போது 30,000 கிராமங்கள் இருக்கின்றன. இந்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அனைவருக்குமான கொள்கைகளை நாங்கள் தீர்மானித்து, வடிவமைத்து உருவாக்க வேண்டியிருக்கின்றது. மக்கள் எல்லாவற்றையும் கேட்டுப்பெற வேண்டிய ஓர் அமைப்பு முறையே இப்பொழுது நிலவி வருகின்றது. தண்ணீர், வீடு, பாலம், கடன் எதுவாக இருந்தாலும் நீங்கள் அதனை கேட்டுத்தான் பெற வேண்டும். அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கும் பல்வேறு முகவரகங்களை மக்கள் ஒவ்வொரு கோரிக்கையுடனும் அணுக வேண்டிய

# 1990 களில் கல்வி ; சில கண்ணோட்டங்களும் கொள்கைகளும்

ஸ்வர்ணா ஜயவீர
( முன்னைநாள் கல்வித்துறை பேராசிரியை,
கொழும்பு பல்கலைக் கழகம் )

இலங்கையின் இன்றைய வேலையில்லா திண்டாட்டம், இளைஞர்அமைதியின்மை, இனப் போராட்டம் போன்ற பெரும்பாலான நெருக்கடிகளுக்கு கல்வி அமைப்பே பரவலாக குறை கூறப்படுகின்றது. கல்வி, சூன்யமான ஒரு நிலையில் இயங்குவதில்லை. அது அரசியல், பொருளாதார, சமூக சூழல்களுடன் இரண்டறக்கலந்தே செயற்படுகிறது. எனவே இத்தகைய கருத்துக்கள் கல்வியின் பங்கு குறித்து உண்மைக்கு புறம்பான கண்ணோட்டங்களை அடிப்படையாக கொண்டு உருவானவையாக தெரிகின்றன.

எண்பதுகளின் பெரும்பான்மையான பரிமாண அபிவிருத்தியும், தரமாற்றமும் வெளிச்சூழல்களினால் ஆக்கப்பட்ட சூழ்நிலையை மேலும் மோசமடையச் செய்தன வெனக் கொள்ளலாம். தசாப்தத்தின் நடுப்பகுதியில் மொ. தே. உற்பத்தியில் கல்விக்காக செய்யப்பட்ட ஒதுக்கீட்டை, அமைப்பு சீராக்கல் கொள்கையின் ஒரு பகுதியாக 2.3 விகிதமாக குறைத்தமை, அரச சார்பற்ற வளங்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பற்ற பாடசாலைகளின் கட்டமைப்பு வசதிகளை பலவீனப் படுத்தியதுடன், தரஉயர்வுத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை தடை செய்தது. வாழ்க்கைச் செலவு உயர்வு ஏற்படுத்திய கஷ்டங்களினதும், வறிய பிள்ளைகளின் கல்வித் தேவைகள் தொடர்பான அதிகாரமட்ட அலட்சிய மனோபவத்தினதும் விளைவாக பாடசாலை செல்லும் வயதுள்ள பிள்ளைகளின் ஒரு பகுதியினர் ஆரம்ப - இடைநிலைப் பாடசாலைகளுக்கு வெளியே நிற்கின்றனர். எனவே, கல்வி முறை வறுமையின் தாக்கத்தை அதிகரிக்கிறது. குறுகிய பரீட்சை முறையினால் நிர்ணயிக்கப்படுவதாக தொடரும் கல்வியின் நோக்கம், சமூகத்தேவைகளைப் புறக்கணித்து, வலுவிழந்த பொருளாதாரத்தினால் அலைக்கழிக்கப்பட்டு, அபிலாஷைகளை தூண்டுவதாயுள்ளது.

அரசியல் சூழலினால் குழப்பியடிக்கப்பட்ட கல்வி நடவடிக்கையின் புரைமைப்புத்தேவைகள் ஒருபுறமிருக்க, எதிர்வரும் தசாப்தத்தில் உறுதியான நடவடிக்கைக்கான சில முன்னுரிமைகள் இனங்காணப்பட்டுள்ளன. இம் முன்னுரிமைகள் அறிவு, தொழிற்திறன் என்பன தனிநபர் மற்றும் தேசிய அபிவிருத்திக்காக பயன்பட வேண்டும். அத்துடன் சமூக பொருளாதார, ஆண்/பெண் பாகுபாடுகளற்ற முறையில் கல்வி வாய்ப்பு நீதியாக பகிர்வு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கங்களின் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

**கல்வி வாய்ப்பு**

இலங்கையில் கல்வி பங்கேற்பும், எழுத்தறிவும் ஏனைய சார்க் பிராந்திய நாடுகளிலும் பார்க்க அதி உயர்ந்ததாகவிருந்தாலும் (மத்திய வங்கி 1981/82, குடிசனமதிப்பீட்டுத் திணைக்களத்தின் தொழிலாளர் சமூக -பொருளாதார மதிப்பீடு) எண்பதுகளில் இந்த விகிதாசாரம் தேக்க நிலையை அடைந்துள்ளது. இலங்கை சர்வமய அடிப்படை கல்வி குறிக்கோளிலிருந்து வெகு தொலைவிலேயே இருக்கின்றது. அண்மைய ஆண்டுகளில் சர்வதேச அளவில் (யுனெஸ்கோ - யுனிசெப்) அடிப்படை கல்வியை சர்வமயமானதாக்குவதிலும், 'அனைவருக்கும் கல்வி' என்பதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் நம் நாட்டில் பொருளாதார வளர்ச்சியடையாத பகுதிகளிலிருந்து 5 க்கும் 14 வயதுக்கிடைப்பட்ட கணிசமான எண்ணிக்கையினரான பிள்ளைகளும், இடைநிலைக்கல்வி வயதுப்பிள்ளைகளில் அரைவாசியானோரும் பள்ளிக்குச் செல்லாதிருக்கிறார்கள் என்பதைபற்றி சிறிதும் அக்கறை காட்டப்படவில்லை. விஞ்ஞான/தொழில்

நிலையே இருக்கிறது. மாறாக, உங்களுக்கான பலவற்றைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டு என்று நாம் மக்களிடம் சொல்லக்கூடியவர்களாக இருக்க வேண்டும். உங்கள் சொந்த தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் உங்களுக்கே அதிக பங்கு இருக்கிறது என்ற உண்மையை மக்களுக்கு புரிய வைக்க வேண்டும். ஆனால், எல்லாத்தேவைகளையும் நீங்களே நிறைவு செய்கொள்ள முடியாது என்ற உண்மையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமக்காக தாமே சிந்திக்கும், செயற்படும் உரிமையை நாங்கள் மக்களுக்கு வழங்க வேண்டும். தனியாகவும், கூட்டாகவும், குடும்பங்களுக்குள்ளும் குடும்பங்களுக்கிடையேயும் தமது விவகாரங்களை தாமே பொறுப்பெடுக்கும் ஒரு முறையை நாங்கள் ஊக்குவிக்க வேண்டும். இந்த உரிமையை நாங்கள் அங்கீகரித்து, அதற்கான வழியைத் திறந்துவிட்டால் நாம் எதிர்பார்க்கும் சிருஷ்டி ஆற்றல் தானாகவே மலர்ந்துவிடும்.

நுட்பக்கல்வி வாய்ப்பில் பிராந்திய ரீதியான இடைவெளி பாரியது; உயர்கல்வி கற்கும் வயதுப் பிள்ளைகளில் 2% மட்டுமே பல்கலைக்கழகங்களில் கற்கின்றார்கள் என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

குடும்பப் பொருளாதார நிலை காரணமாக ஆரம்பப் பாடசாலைகளில் சேரமுடியாதிருக்கும் சிறுவர்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் 1990 களிலாவது முழுமையான அல்லது பகுதிநேர முறைசாரா கல்வி வாய்ப்புக்களை அளிப்பது அவசியமாகும். இலவசக் கல்வி இலவச பாடசாலைப்புத்தகங்கள், உணவு, போன்றன வாயிலாக ஏற்கனவே ஊக்குவிப்புக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, எண்பதுகளில் கல்வி அமைச்சினாலும் யுனிசெப் நிறுவனத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இதர தடைகள் இனங்காணப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்கு வெளியேயுள்ள பிள்ளைகளின் குறைந்த பட்ச தேவைகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய நிலையம், தேவைகள் இனங்காணப்படும் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுதல் வேண்டும்; பள்ளி செல்லாத பிள்ளைகளின் கல்விக்கான ஏக்கம் அதிகார கட்டமைப்பில் இருப்போரின் சமூக உணர்வுக்கு சவாலாயுள்ளது. ஆரம்ப கல்விக்காகவேனும் இந்நாட்டில் கட்டாயக் கல்விச் சட்டம் அறிமுகப்படுத்தவில்லை என்பது பலரும் அறியாததொன்று. அத்துடன் அமுல் நடத்தப்படமுடியாத அத்தகையதொரு சட்டத்தை அறிமுகப்படுத்துவதிலும் பல வருடங்களாக தயக்கம் காட்டப்பட்டு வந்துள்ளது. விசேஷ சூழ்நிலைகளில் பகுதிநேர கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கும், பயிர்ச்செய்கை பருவ சுழற்சிக்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் அட்டவணையொன்றை தயாரிப்பதற்கும் சட்டங்களை உருவாக்குவது தொடர்பான வாய்ப்புக்களை ஆராய்ந்து பார்த்தல் அவசியமாகும்.

இன்றைய இடைநிலைக் கல்வி இரு அம்சங்களை கொண்டுள்ளது. அவை வசதிகளிலும், பாடத்திட்டவமைப்பிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஆகும். உதாரணமாக, எண்பதுகளில் 40 சதவிகிதமான உயர்நிலை பாடசாலைகளிலேயே விஞ்ஞானக் கல்வி வசதிகள் இருந்தன. சில தசாப்தங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மத்திய மகா வித்தியாலய முறையை மீள் அறிமுகப்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும். இத்தகைய கொள்கை சமமான பல்கலைக்கழக கல்வி வாய்ப்பை உறுதிப்படுத்துவதுடன், விரக்தி மனப்பான்மைக்கும், இனமுரண்பாட்டிற்கும் இட்டுச் சென்றுள்ள, பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் முறையை ஒழிக்கவும் வழிசெய்யும்.

உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வயதடைந்து அத்தகைய நிறுவனங்களில் கல்வி வாய்ப்புகளை பெற்றுள்ள மாணவர்களின் விகிதம் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையும் பல நாடுகளை விட இங்கு குறைவாகவேயுள்ளது. மூன்றாம்கட்ட கல்வியை கற்கும் மாணவர் எண்ணிக்கை 100,000 க்கு 295 என அறிவிக்கப்படுகிறது. ஆசிய பிராந்தியத்தின் இதர நாடுகளான பங்களாதேஷ் (269) நேபாளம் (269) இந்தோனேசியா (403) மலேசியா (467) இந்தியா (661) சிங்கப்பூர் (1253) தாய்லாந்து (2181) பிலிப்பைன்ஸ் (2642) ஆகிய நாடுகளின் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடும் போது இது மிகக்குறைந்த ஒரு எண்ணிக்கையாகும்.

பல்கலைக்கழக இடவிஸ்தரிப்பு, விரக்தியையும், திறமை விரயத்தையும் தடுக்க உதவுமெனினும் பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் என்பவை சமீப காலத்தில் இடைநிலைப் பாடசாலைகளிலிருந்து வரும் பெருமளவு கோரிக்கையை நிறைவு செய்ய முடியாத நிலையிலேயே இருக்கும். மூன்றாம் கட்டக் கல்வியில் பன்முகப்பட்ட தன்மை காணப்படாதது கல்வி வாய்ப்புக்கு பெரிய தடையாயமைந்துள்ளது. கொழும்பு சட்டக் கல்லூரியையும், கணக்கியல் தொடர்பான சில நிறுவனங்களையும் தவிர்ந்த ஏனைய கல்லூரிகள் பல்கலைக்கழகக் கல்விக்கு மாற்றீடாக அமைவதாயில்லை. எனவே, தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள் பலப்படுத்தப்படுவதும், மாகாண, மாவட்ட அடிப்படையில் மூன்றாம் கட்ட கல்வி நிறுவனங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதும் அவசியமாகும். இந்நிறுவனங்கள் தேசிய, உள்ளூர் மனிதவளத் தேவைகளை சந்திப்பதுடன் தகைமைத்தொழில், தொழிற் கல்விக்கான மாற்றுவழிகளை உறுதி செய்யும் தரத்தை எட்டக் கூடியதாகவும், பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம் செய்வதாயும் இருக்க வேண்டும். தரங்குறைந்த பல்கலைக்கழககல்லூரிகளை நிறுவுதுதன் மூலம் கல்வியை மேலும் தரங்குறைக்க செய்வதுடன் சமூகக் குறைபாடுகளுக்கும், விரக்திக்கும் வழிசெய்யும் வகையிலான பல்கலைக்கழக கல்விக் கொள்கையைவிட, ஏக கால மாகாண, மாவட்ட அடிப்படைத்திட்டம் ஒன்று நன்மாற்றத்துக்கான கருவூலங்களை கொண்டதாகத் தெரிகின்றது.

### பொதுக்கல்வி

அரச மூலவள ஒதுக்கீட்டில் காட்டப்பட்ட பாரபட்சம், வருமான ஏற்றத்தாழ்வுகள் முதலியவற்றின் விளைவுகளான சமத்துவமற்ற கல்வி வாய்ப்பும், மாணவரின் சமூக பொருளாதாரப் பின்னணியினதும், வசதிகள், செயற்பாடுகளிலுமான

சமத்துவமற்ற நிலையும் இலங்கையின் தொடர் பிரச்சினையாகும். பல வசதிகுறைந்த பாடசாலைகள் யுனிசெப், சீடா (சுவீடன்) போன்ற சர்வதேச இருதரப்பு உதவிகளிலேயே தங்கியுள்ளன. எனினும், ஏறத்தாழ 40% பாடசாலைகள் கட்டிட, உபகரண, மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பொறுத்தவரையில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. எனவே, மக்களின் ஒரு பிரிவினரான வசதி குறைந்தவர்களின் குறைபாட்டை நிவர்த்தி செய்து, அவர்களின் கல்வித்தரத்தை முன்னேற்றுமுகமாக, வறியவர்களுக்கு சாதகமான முறையில் மூலவள ஒதுக்கீட்டு முறையை மாற்றியமைத்தல் அவசியம். கல்வி முகாமைத்துவம் பரவலாக்கப்படுவதுடன் அதிகபட்ச பங்கேற்பையும் நலனையும் பிரதிபலிப்பதாயும் இருத்தல் வேண்டும்.

கல்வி நிறுவனங்களின் வழமையான செயற்பாடுகளில் குறுக்கீடு எதுவும் இல்லாத கைத்தொழில்மயப்படுத்தப்பட்ட நாடுகளைப் போலன்றி, இலங்கையில் கடந்த அரை நூற்றாண்டுகளாக ஆசிரியர் வழங்கலிலும் பங்கீட்டிலும் அரசியல் ஒட்டத்தின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. ஆசிரியர் கல்வித்திட்டங்கள், கொள்கை வகுப்பவர்களினதும், நிர்வாகத்திலுள்ளவர்களினதும் தயவின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. சமீப ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இடைக்கால கொள்கைகளும் திட்டங்களும் ஏற்கனவே இருக்கும் நிறுவனங்களின் மதிப்பை குறைத்துள்ளதுடன், மூலவளங்களின் முழுப்பயன்பாடு, முயற்சிகளின் நகலாக்கம், வசதிகளை அளிப்பதில் ஊழல்கள் என்பனவற்றில் முடிந்துள்ளன. இந்த உருப்படியற்ற நிலை 1990 களிலும் தொடராதிருக்க வேண்டுமெனின், ஆசிரியர் விநியோகம்; தொழிற்றகமைப் பயிற்சி என்பவற்றுடன் பாடசாலை முறையின் தேவைகளைச் சந்திக்கத்தக்க மறுபயிற்சிக்கான முழுமையான உத்தி ஒன்று தேவை.

அறுபது இறுதியிலும், எழுபதுகளிலும் பாடவிதான அபிவிருத்தி கல்வி நிர்வாகத்தில் முக்கிய அம்சமாக இருந்தது. பாடத்திட்டம், வேண்டுமென்றே ஆரம்ப, கனிஷ்ட இடைநிலைக் கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்து முகமாக பாவிக்கப்பட்டது. எனினும், இதனை நடைமுறைப்படுத்துகையில் தேவையற்ற அவசரமும், அதிகாரக் குவிப்பும், சில திட்டங்களைப் பொறுத்தவரையில் செய்ததையே மீண்டும் செய்யும் நிலையும் காணப்பட்டன. அத்தகைய நிலையை மீள மேற்கொண்டு அதை பாடத்திட்டப் புதுப்பித்தலுக்கும், எமது தேவைகளுக்கேற்ற விதத்தில் கையாள்வதற்கும் பயன்படுத்துதல் அவசியமாகும்.

கடந்த சில ஆண்டுகளில் சிறப்புத்திட்டங்களின் அடிப்படையில் சிறு அளவு ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இவைகள் அளவிடு செய்யப்பட்டு நகலாக்கம் செய்யப்படலாம். அடிப்படைத்தொழில்திறன், பாரிய சூழலில் ஒன்றிணைந்த நடவடிக்கை இவைகள் தொடர்பான வெற்றிடம் பாடவிதான அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்களவுள்ளது. கடந்த வருடங்களில், வேகமாக தொழில்நுட்ப வளர்ச்சியினைஅடையும் சமுதாயத்தின் அடிப்படை அறிவான கணிதத்தில் பெரும்பாலான மாணவர்கள் அடைந்துள்ள குறைந்த அளவு சாதனையை க. பொ. த. (சா) பெறுபேறுகள் சுட்டிக்காட்டுகின்றன. விஞ்ஞான அறிவு, திறன்வாய்ப்பு, தொழில்நுட்பவியல், சமூக பொருளாதார சூழலின் மேன்மட்டத்தை எட்டத் தேவையான ஆங்கில அறிவு என்பனவற்றில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. வேகமான தொழில்நுட்பவளர்ச்சியடையும் உலகில் வாழவும், அவசியமான நோக்கினை மாணவர்களிடையே வளர்க்கும் ''வாழ்க்கைத்திறன்கள்'' திட்டம் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பாடசாலைகளிலேயே காணப்படுகின்றது. சமூகப் பின்னணி தொடர்பான புரிந்துணர்வை வளர்ப்பதுடன், பல்லின சமுதாயத்தில் சமாதானத்துடனும் பரஸ்பர மரியாதையுடனும் வாழும்நோக்கினை மக்களிடையில் வளர்ப்பதில் பாடத்திட்டம் இன்னும் போதிய முன்னேற்றங் காணவில்லை. சமயம் உள்ளிட்ட பரீட்சை நோக்குடைய பாடத்திட்டம் மனித மதிப்பு வளர்ச்சியின் மீது மேலாண்மை கொண்டுள்ளது.

எனவே பாடத்திட்டம் அடிப்படைத்தொழிற்திறன், அனைவருக்கும் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுகளைப் பெறும் வாய்ப்பினை அளித்தல், தேசிய அமைதி - சமாதானத்தை வளர்த்தல், சமூக, கலாச்சார விழிப்புணர்ச்சி, மனித வளர்ச்சி இவைகளுக்கு வழி செய்யுமுகமாக புதுப்பிக்கப்படுவது அவசியத் தேவையாகும். இது பரீட்சை முறைமீதான மறுமதிப்பீடு, ஆக்கவியல் மதிப்பு இவைகளுக்கு பாடத்திட்டத்தில் மீண்டும் உரிய இடத்தை அளிக்க உதவும். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சை ஏற்றத்தாழ்வுகளை குறைக்கும் அதன் இலக்கைத் தவறவிட்டு இளம் சிறுவர்கள் மத்தியில் ஆக்க சக்தியை மழுங்கடித்துள்ளது. பல்கலைக்கழக நுழைவை க. பொ. த. (உ/த) பரீட்சையுடன் தொடர்புபடுத்துவதைதவிர்த்து தெரிவு வழிமுறைகளை மீளமைத்தல், இடைநிலை மாணவரின் மீதான பளுவைக் குறைக்கலாம்.

பொதுக்கல்வி முறை நோக்கையும்எதிர்பார்ப்பையும் வளர்க்கலாம் எனினும் பொருளாதாரத்தின் தேவைகளை சந்திக்கும்

தொழில் கல்வி பயிற்சியை அளிக்கவல்லதல்ல என்பது பல நாடுகளின் அனுபவமாகும். எழுபதுகளின் இலங்கை அனுபவம் இடைநிலை பாடசாலைகளிலிருந்து விலகியவர்களையும், பல்கலைக்கழகப் பட்டதாரிகளையும் தொழிலமர்த்தல் குறிப்பிட்ட தொழில் தேவைகளை சந்திக்கும் அளவில் பாடத்திட்டத்தை மாற்றியமைப்பதிலும் பார்க்க பொருளாதாரத்தின் ஊழியத்தை உறிஞ்சும் ஆற்றலியே தங்கியுள்ளது என்பதை காட்டியது; எனினும், அனைத்து நாடுகளிலும் தொழிற் கல்வித்துறை பொதுக்கல்விக்கும் தொழிலாளர் சந்தைக்கும் இடையில் முகவர் அமைப்பாக செயல்படுகின்றது.

இலங்கையில் தொழில் வயதுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கையில், இன்றைய தொழிற் கல்வி வசதிகள் பாடசாலை விட்டகலும், நிர்ப்பந்த நிலையில் இடையில் விலகுபவர்களினதும் தேவைகளை சந்திக்க போதியதாயில்லை. அதேவேளை தொழில்திறன் பற்றாக்குறை, தொழில் நுட்பவியலின் பிரயோகத்தினை தடை செய்கின்றது. தொழிற்கல்வி நிறுவனங்களில் கடைப்பிடிக்கப்படும் தெரிவு முறை தொழிற் சந்தையில் ஆண்/பெண் பிரிவை பிரதிபலிப்பதுடன் பெண்களை அவர்களுக்கே உரியனவைகளாக கருதப்படும் தொழில்களில் மட்டும் பயிற்சி பெறும் நிர்ப்பந்தத்திற்குள்ளாக்குகிறது. இரண்டாம், மூன்றாம் கல்வி மட்டங்களில் மாறுபட்ட தொழிற்திறன்களின், ஒத்த தன்மையை இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. தேசிய மாவட்ட ரீதியான இணைப்பின்மை, நாலாக்கத்திற்கும், அரிதான வளங்களின் விரயத்திற்கும் வழி கோலியுள்ளதுடன் பொருளாதார அபிவிருத்திக்கு மிக முக்கியமான தொழிற்திறன் பற்றாக்குறை தொடர்வதற்கும் காரணமாகியுள்ளது:

மூன்றாம் கட்ட தொழிற்கல்வி ஆணைக்குழு அமைப்பு, வசதியளிப்பு, திட்டமிடல், இணைப்பு கண்காணிப்பு இவைகளுக்கு தேவையான கட்டமைப்பை அளிக்கலாம். தேசியப்பயிற்சி முகவர்கள் நாடளாவிய அடிப்படையில் நடத்தும் பயிற்சி திட்டங்களின் பயனையும் வலுவையும் அளவீடு செய்வதற்கும் தொடர்ச்சியான ஆய்வுகள் அவசியம். அத்துடன் வெறுமனே சந்தைக் கோரிக்கை நிலைமையை நிர்ணயிப்பதற்காகமட்டுமன்றி விவசாய கைத்தொழில் சேவைத் துறைகளின் அபிவிருத்தித்தேவைகள் மீதான அளவீடும் அவசியமாகின்றது. கைத்தொழில்மயமாவதாகக் கூறப்படும் நாட்டில் ஏற்றுமதி நோக்கு கைத்தொழிற் துறையின் தொழில் நுட்பமயம் மிகவும் குறைந்த அளவிலேயே இடம்பெற்றுள்ளது. அத்துடன் முறைசாரா தொழிற்பயிற்சி திட்டங்களின்நவீனமயப்படுத்தலும் மிகவும் குறைவாகவே இடம்பெற்றுள்ளது. இதனால் மிகவும் பாதிப்புக்குள்ளானவர்கள் தொழிற்றிறனை உயர்த்தி வாழ்க்கைக்கான உபாயமொன்றை தேடிக்கொள்ளும் வாய்ப்பின்றி ஏற்றுமதிவலயங்களுக்கு உள்ளும் புறமும் தொழிற்சாலைகளில் குறை வேதன அரைப்பயிற்சித் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள, இரண்டாம் கட்டப்பாடசாலைகளில் 10 – 12 வரை கற்ற இளம் பெணகளாவர். உப நகரங்களில் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களின் தரம், பயிற்சி மற்றும் விஸ்தரிப்பு மூலம் தொழில்நுட்பத்தை நவீனப்படுத்துதல், முறைசாரா நிறுவனங்களின் தொழிற்திறனை உயர்த்துதல் என்பவற்றுக்கு பங்களிப்புச்செய்யக் கூடிய விதத்தில் இல்லை.

மூன்றாம் கட்ட கல்வி நிறுவனங்களின் பற்றாக்குறை தொழிலாளர் சந்தையின் தேவைகளை சந்திப்பதில் பல்கலைக்கழகங்களின் சுமையை அதிகரிக்கிறது. எனினும், பல்கலைக்கழகங்கள் உயர்மட்ட தொழிற்தகமைப்பயிற்சியை அளிப்பதுடன் மட்டுமன்றி, விஞ்ஞான-தொழில் நுட்பவியலின் அனைத்து பிரிவுகளிலும் பயனுள்ள ஆய்வாளர்களை, இலக்கியத்துறை, மனிதவியல், ஆக்கக் கலை வல்லுனர்களை கௌரவிக்கும் மையங்களாகவும் விளங்குகின்றன. பல்கலைக் கழகங்களினதும், இடைநிலை பாடசாலைகளினதும் கலைப்பாடங்களின் தரத்தை குறைத்து, தொழிற்கல்வி நோக்கு திட்டங்களாக மாற்றியமைப்பது அறிவுஜீவிகளையும் நாட்டின் சிருஷ்டியாற்றலையும் பாதிக்கும். முன்னுணரப்பட முடியாத பொருளாதார நிலைகளில் தொழிலாளர் தேவை பற்றிய கணிப்பீடுகள் அர்த்தமற்றதாக்கப்பட்டுள்ள நாட்டில், பட்டப்படிப்பை முடித்தவர்களுக்கு குறுகியகால தொழில் பயிற்சிகளையும், மாகாண, மாவட்ட நிறுவனங்களில் மூன்றாம் கட்ட பயிற்சிகளையும் அளிப்பது, கைத்தொழில் – உற்பத்திதுறைகளுக்கு சாதகமானதாயும் அவைகளின் தேவைகளுக்கேற்ப வளைந்து கொடுப்பதாகவும் அமையும்.

எனவே, இலங்கையின் இன்றைய தேவை கவர்ச்சிகரமான திட்டங்களல்ல; என்பதுகளில் இடம்பெற்ற கருத்தரங்குகளிலும், வேலை முகாம்களிலும், ஆய்வுகளிலும், அறிக்கைகளிலும் இனங்காணப்பட்ட தேவைகள் - தடைகளை சந்திப்பதற்கான ஆக்கபூர்வமானதிட்டங்களே; அத்திட்டங்கள் இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வாகான உதவ வேண்டுமெனின் மறுபங்கீடு, வளர்ச்சி என்ற வரம்புக்குள், தேசிய இணக்கத்தை கருத்திற் கொண்டு வகுக்கப்படவேண்டும்.

## மனித உரிமை மற்றும் சமூக நீதி: முதல் முன்னுரிமைகள்

வண. பிதா திஸ்ஸ பாலசூரிய

கல்வி மற்றும் சமூக விமர்சனத் துறைகளில் ஆர்வத்துடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர் பிதா திஸ்ஸ பாலசூரிய. முன்னர் அக்குய்னாஸ் பல்கலைக்கழக கல்லூரியில் தலைவராக இருந்தவர். இப்பொழுது சமய, சமூக நிறுவனத்தை முன்னின்று நடத்தி வருகிறார். சில சமூகப் பிரச்சினைகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டும், நூல்களை வெளியிட்டும் பயனுள்ள வகையில் பணி புரியும் நிறுவனம் இது

சொத்துக்கள் மீதான கூட்டு உடைமைக்குப்பதிலாக தனியார் மயப்படுத்தல் குறித்த ஒரு மனப்போக்கு இப்பொழுது வளர்ந்து வருகிறது. சோஷலிச முகாமில் கூட இது பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், ஓரளவு முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும் தனியார் தொழில் முயற்சிகளில் பல உள்ளார்ந்த பலவீனங்கள் காணப்படுகின்றன. இலாபத்தை உச்சப்படுத்திக் கொள்ளும் விருப்பு மேலோங்கி நிற்பதே இதற்கான காரணமாகும்.

இலங்கையில் 1977 க்கு பின்னர் பின்பற்றப்பட்டு வந்த திறந்த பொருளாதாரம், இந்த முறையின் பலவீனங்களை வெளிக்காட்டத்தொடங்கியது. இலாபத்துக்கு மட்டும் மதிப்புக் கொடுக்கும் போக்கு வளர்ச்சியை எடுத்துவர முடியும்; ஆனால், அது அதே நேரத்தில், பெரிய அளவில் ஏற்றத்தாழ்வுகளையும் எடுத்து வருகின்றது.

கண்ணியமான ஒரு தொழில் என்று கருதப்படும் வைத்தியத் துறை இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். தனிப்பட்ட வைத்திய சேவைகளுக்கு முழு அளவில் சுதந்திரம் அளிக்கப்பட்டதனையடுத்து அரசாங்க வைத்தியசாலை சேவைகளில் பெருமளவுக்கு சீரழிவு ஏற்பட்டுள்ளது. அரச மருத்துவர்கள், தனிப்பட்ட முறையில் சிகிச்சை அளிப்பதில் அதிகளவு கவனஞ் செலுத்துவதே இதற்குக் காரணம். கல்வித்துறைக்கும் இது பொருந்தும். இதே போல பாதிக்கப்பட்டுள்ள மற்றொரு துறை போக்குவரத்துத்துறையாகும். இலாபம் தராத வழித்தடங்களிலும், சனநெரிசல் இல்லாத நேரங்களிலும் தனியார் பஸ் சேவைகள் இடம் பெறுவதில்லை.

நல்ல இலாபத்துடன் இயங்கும் அரச தாபனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. பெருமளவில் இலாபமீட்டும் வடிசாலைகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றை உதாரணங்களாக காட்ட முடியும். அதே நேரத்தில் நட்டத்தில் இயங்கும் எயார் லங்கா போன்ற நிறுவனங்கள் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு சுமையாக இருந்து வருகின்றன.

சொத்துக்கள் மற்றும் மூலவளங்கள் தனியார் நலனுக்கு பயன்படுத்தப்பட வேண்டுமா? அல்லது சமூகப் பொறுப்புணர்வுடன் தேச நலனுக்காக அவை பயன்படுத்தப்பட வேண்டுமா என்பதில் முதலில் தெளிவான ஒரு கருத்தை நாங்கள் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அதே நேரத்தில், தனிநபர் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும், கடும் உழைப்பு, திறமை என்பவற்றுக்கு ஊக்குவிப்பு வழங்குவதற்கும் தனியார் தொழில் முயற்சி முறையொன்றும் அவசியமாகும்.

கூட்டுச்சொத்து, தனியார் சொத்து என்ற இரண்டையும் கலந்து 'மக்கள் துறை' எனப்படும் துறையை உருவாக்க முடியும், இம்முறையின் கீழ் தொழில் முயற்சிக்கு தொழிலாளர்களே - அதாவது மக்களே- பொறுப்பாக இருப்பார்கள்.

இலாபத்தை உச்சப்படுத்துவதனால் மட்டும் நாங்கள் அபிவிருத்தி காண முடியாது. இந்த வளர்ச்சிப் படிமுறையில் சமத்துவத்துக்கு உரிய இடம் கொடுக்க வேண்டும். ஜனநாயக அமைப்பொன்றில் பலவீனமான குழுவினரைப் பாதுகாப்பதற்கு போதிய ஒழுங்குகள் இருக்க வேண்டியது அவசியமாகும்.

உலகம் ஒரு திறந்த பொருளாதாரமல்ல; பெருமளவுக்கு மூடப்பட்ட ஓர் அமைப்பே நிலவிவருகிறது. நாங்கள் முட்டாள்தனமான; சிந்தனையற்ற முறையில் 'திறந்த' நிலையில் இருக்கிறோம். எமக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் மூலதனம் போன்றவற்றுக்கு நாம் திறந்துவிட்டிருத்தல் வேண்டும். இந்த 'திறப்பு' தெரிவு செய்யப்பட்ட ஒரு முறையில் நடந்திருக்க வேண்டும். உலகுக்கு எம்மை திறந்துவிடும் போது தேசிய நலனையும், மக்கள் நலனையும் முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். 'திறந்த பொருளாதாரம்,' , 'மூடிய பொருளாதாரம்' என்ற கருதுகோள்களை வைத்துக்கொண்டு சண்டை பிடிப்பதில் பிரயோசனமில்லை. நாட்டு நலனுக்கு உகந்தது எதுவோ அந்தக் கருதுகோளே எமக்குத் தேவை.

மக்கள் வெளியே சென்று ...த்து நல்ல வருமானங்

நூலகம்

களைப் பெற முடியுமானால் அதனை நாங்கள் முழு மனதுடன் வரவேற்க வேண்டும். ஆனால், அவர்களது உரிமைகளைப் பாது காக்க அரசாங்கம் முன்வரவேண் டும். அப்படி அவர்களின் உரிமை களுக்கு மதிப்பளியாது, அவர் களது வருமானங்களைக் கொண்டு பொருளாதாரத்தை நடத்திச் செல்வது வெட்கப்பட வேண்டிய ஒரு விஷயம். அடுத்து சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிலாளர் நிலை. இந்த வகையில் எமது பொருளாதாரம் வெளிநாட்டவருக்கு, முதலாளி களுக்கு திறந்ததாக இருக்கும் அதே வேளையில், தொழிலாளர் களைப் பொறுத்தவரையில் இறுக்கமானதாக, அடக்கி ஆள்வதாக தெரிகிறது.

ஒரு குடும்பத்தைப்போல வறு மையின் சுமைகளை நாம் அனை வரும் சமமாக பகிர்ந்து கொண் டால், நீதி நியாயமான சமூக மொன்றைக் கட்டியெழுப்புவதற் கான வாய்ப்பிருக்கிறது. இலங் கையைப் பொறுத்தவரையில் சமூக நலச்சேவைகள் 1931 ல் இருந்தே இடம் பெற்று வந்துள் ளன. அதே கால கட்டத்தில் ஆடம்பர செலவுகளுக்கும், ஊழ லுக்கும் நாங்கள் இடமளியாமல் அபிவிருத்தியை ஊக்குவித்து வந்திருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும். இன்றும் கூட சுகாதாரம், கல்வி, உணவு என்பவற்றில் குறைந்தபட்ச மட்டங்களுக்கு நாங்கள் உத்தர வாதமளிக்க வேண்டும். ஊழல் களும் போர்களும் இல்லாதிருந் தால் இது சாத்தியமாகும்

கடந்த 12 வருடங்களிலும் இடம் பெற்றவைகள் குறித்து நியாயமான விசாரணையொன் றை ஜனாதிபதி அவர்கள் ஆரம் பிக்க வேண்டும். கூட்டுத்தாபனங் கள், பொதுத்துறை மற்றும் மகாவலி திட்டத்தின் நலன்கள் போன்றவை குறித்து நியாய மான விசாரணைகள் இடம் பெற வேண்டும். தீர்மானங்களை எடுத்தவர்கள் தமது சொந்த நலன்களை கருத்தில் கொண்டே நடந்து கொண்டார்கள். ஆட்சி யாளர்களுக்கு பொறுப்புணர் வோ, மக்களுக்கு வகை சொல்ல வேண்டும் என்ற எண்ணமோ இருக்கவில்லை.

எமது நாடு ஒரு செல்வந்த நாடு; ஆனால், மேட்டுக்குடி யினராலும் வெளிநாட்டவரா லும் மற்றும் சோம்பல், ஊழல், திறமைக்குறைவு போன்றவற்றா லும் அது வறுமையாக்கப்பட்டு விட்டது. இந்தப்பின்னணியில் இருந்துதான் வறுமை ஒழிப்பு கருதுகோளை நாங்கள் கவனத் தில் எடுக்க வேண்டும். வெறு மனே பணத்தை மட்டும் கொடுப் பது தீர்வாக முடியாது. அரசாங் கம் சமூக பொது வசதி அமைப் பினை அபிவிருத்தி செய்யும் திட் டங்களுக்கூடாக இளைஞர்கள் அனைவருக்கும் தேசிய சேவை என்ற முறையில் வேலைவாய்ப் பினை வழங்க முடியும். புதிய வறுமை ஒழிப்புத் திட்டத்தில் பல குறைபாடுகள் இருந்த போதிலும், வறிய மக்களுக்கு ஓர் உரித்து இருக்கிறது என் பதனை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருப்பதற்காக அதனைப் பாராட்டியேயாக வேண்டும்.

முதலில், எதிர்க்கட்சி ஆழமான சமூக பொருளாதார பகுப்பாய் வொன்றினை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கமும் இது குறித்த சில ஆராய்ச்சிப்பணி களை நிறைவு செய்தல் அவசியம். இவ்விஷயம் தொடர்பாக எதிர்க் கட்சி ஒன்றும் செய்வதில்லை யென்றே நான் நினைக்கிறேன். வடிசாலைகள் தனியார்வசமாக் கப்பட்டதேன்? பிரிமா ஆலை யின் நிலை என்ன? சில புடவை ஆலைகள் தனியாரிடம் கையளிக் கப்பட்டதேன்? போன்ற சில பிரச்சினைகளை எதிர்க்கட்சி பகுப்பாய்வு செய்ய முடியும். அதன் பின்னர் அரசாங்க கட்சி யும் எதிர்க்கட்சியும் இணைந்து வளர்ச்சி மற்றும் நீதி நியாயம் என்பவற்றுக்கூடாக அபிவிருத்தி இடம் பெற வேண்டிய அளவு மானிகளை தீர்மானிக்க முடியும்.

நாட்டு நலனை முன்னிலைப் படுத்தி, சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்கு எதிர்க்கட்சி அடங்கலாக அரசியல் கட்சிகள் அனைத்தும் உரிய இடத்தைக் கொடுப்பதில்லை. நம் நாட்டில் மட்டுமன்றி உலகின் பல பாகங் களிலும் இந்நிலை காணப்படு கிறது. இதன் காரணமாக பல்வேறு வகையான அரசு சாரா அமைப்புக்களும், மக்கள் இயக் கங்களும் இப்பொழுது கிளை விட்டுப் பரவத்தொடங்கியுள்ளன. ஒரு வகையில், இந்த அமைப் புக்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் நலன்களை பிரதி நிதித்துவப்படுத்துகின்றன. கடந்த 12 - 13 வருடங்களில் காணப்பட்ட இத்தகைய அமைப் புக்களை ஒடுக்கும் மனப்போக்கு இல்லாதொழிக்கப்படல் வேண் டும்.

வரும் தசாப்தங்களில் எமது சமூகத்தில் மனித மதிப்புக்களை பாதுகாப்பதில் மக்கள் இயக்கங் கள் முக்கிய முன்னோடிகளாக செயற்பட முடியும். உலகில் சுதந்திர பொருளாதாரம் என்று ஒன்று இல்லை என்பதனை நாங் கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். காணி, ஊழியம், மூலதனம், தொழில்நுட்பம் என்பன சுதந்திரமாக அங்குமிங் கும் அசைவதில்லை. சுமார் 200 - 300 பிரமாண்டமான கம்பனிகளால் கட்டுப்படுத்தப் படும் ஒரு பொருளாதாரமே இருக்கிறது. இந்த கம்பனிகள் அரசாங்கங்களையும் கூட கட்டுப் படுத்துகின்றன. கட்டற்ற பொருளாதாரம் என்ற கருது கோளை இந்தக் கம்பனிகளே முன் வைக்கின்றன. மறுபுறத் தில், எங்களுக்கு வரையறுக் கப்பட்ட சுதந்திரமே கிடைக்

( 31 ம் பக்கம் பார்க்க )

# கம்யூனிசத்தின் நெருக்கடி, சோஷலிசத்தின் எதிர்காலம்

தயான் ஜயதிலகவுடன் உரையாடியவர்கள்
ஜயந்த சோமசுந்தரம்
நிசரனி குணசேகர

> தயான் ஜயதிலக முன்னணி அரசியல் சிந்தனையாளர்; அரசினை வன்செயல் மூலம் கவிழ்ப்பதற்கு சூழ்ச்சியில் ஈடுபட்டதாக சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பு நீதிமன்றமொன்றில் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. குறுகிய காலம் வட-கிழக்கு மாகாண சபையில் திட்டமிடல் அமைச்சராக இருந்து கொள்கை வேறுபாடுகள் காரணமாக பதவி விலகியவர். கொள்கை கற்கைகள் நிறுவனத்தின்மோதல் ஆய்வுகள் பிரிவின் பணிப்பாளர்; ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் - உதவிச் செயலாளர். அத்துடன் ''லங்கா கார்டியன்'' இதழின் இணை ஆசிரியர்.

பொருளியல் நோக்கு:

எண்பதுகளில் உலகளாவிய பொருளாதார நிலை குறித்த உங்கள் கருத்துக்கள்' என்ன? அத்துடன் '90 களில் வாய்ப்புக்கள் எவ்விதம் அமையும்?

தயான் ஜயதிலக:

நான் ஒரு பொருளியலாளனாக பயிற்றப்படவில்லை. எண்பதுகளின் அரசியல் - பொருளாதார நிலைமைகள் 'குறித்து பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த விமர்சனங்கள் இரண்டுவிதமான குணாம்சங்களை கொண்டிருப்பதனை நான் காண்கிறேன்.

(1) அரசியல் மாற்றங்கள் குறித்த விமர்சனங்களும் பொருளாதார மாற்றங்கள் குறித்த விமர்சனங்களும் பிரிக்கப்பட்டு வெவ்வேறாக இருந்தன.

(2) பொருளாதார போக்குகள் குறித்த பகுப்பாய்வு பொருளியல் சார்ந்ததாகவும், அபிவிருத்தி சார்ந்தாகவும் இருந்தது. மேற்கத்திய பொருளியல் வல்லுனர்களைப்பற்றி மட்டுமன்றி முற்போக்கு சிந்தனை கொண்ட சர்வதேச ரீதியில் அறியப்பட்ட எமது பொருளியலாளர்களைப் பற்றியும் இங்கு நான் குறிப்பிடுகிறேன். அரசியல் பொருளாதாரம் என்பது மார்க்சுக்கு முற்பட்ட காலத்திலும் இருந்தது. ஆகவே உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை அரசியல் பின்புலத்தில் வைத்து விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இல்லாதிருப்பது அல்லது அதற்கான விருப்பின்மையே எனக்கு கவலையளிக்கிறது. அத்துடன் உலக அரசியல் மட்டத்தில் நிகழ்ந்து வரும் அடிப்படை மாற்றங்கள், உலக பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்தும் சரியான விளக்கம் இருப்பதாக தெரியவில்லை. இப்பொழுது முழு உலக அமைப்பும் மீள ஒழுங்கு படுத்தப்பட்டு வருகின்றது. யுத்தத்துக்கு பிற்பட்ட உலகின் வரைபடம் கடந்த ஆண்டில் மீளவரையப்பட்டது. அதில் இனியும் மாற்றங்கள் செய்யப்பட இடமிருக்கிறது. உலக வரலாற்றில் புதியதோர் கால கட்டத்தில் நாங்கள் இப்பொழுது நிற்கிறோம் என்று நான் துணிந்து கூறுவேன்.

அரசியல் பொருளாதாரத்தில் மாற்றங்கள்

உலக அரசியலின் அடித்தள மட்டத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் அதேவிதத்தில் பொருளாதாரத்தையும் வார்த்தெடுக்க வல்லவையாகும். அரசியல் காலனித்துவத்துக்கும் பொருளாதார ஏகாதிபத்தியத்துவத்துக்கும் இடையிலான தொடர்பு பரவலாக அறியப்பட்டதே. இலங்கையில் 1833 ன் அரசியல் சீர்திருத்தங்கள் காலனித்துவ முதலாளித்துவத்தை கட்டியெழுப்பியதில் வகித்த பங்கினை பல மார்க்சிஸ்டுகள் சரியாகவே சுட்டிக்காட்டியுள்ளனர். உலகின் மாறி வரும் அதிகாரச் சமநிலை, மூலதனப்பாய்ச்சல் போன்ற விடயங்களில் உலக பொருளாதார மட்டத்தில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியனவாகும்.

கேள்வி:

கிழக்கைரோப்பாவில் நிகழ்ந்து வரும் சீர்திருத்தங்கள் பற்றி?

பதில்:

எல்லா கிழக்கைரோப்பிய நாடுகளும் ஒரே வழியில் செல்வதாக நான் நினைக்கவில்லை. இந்நாடுகளில் முதலாளித்துவம் மீள ஸ்தாபிக்கப்படுகிறது என்றும் எண்ணவில்லை. சில நாடுகளில் இம்மாற்றங்களின் விளைவாக சீர்திருத்தப்பட்ட, புதுப்பிக்கப்பட்ட ஒரு சோஷலிஸம் எழுச்சியடையலாம். வேறு சில நாடுகளில் நாங்கள் இதுவரை கண்டிராத, பலவற்றையும் கொண்ட ஒரு சேர்க்கை உருவாகும் வாய்ப்பிருக்கிறது. வேறு சில நாடுகள் முதலாளித்துவத்தை நோக்கி நடை போடவும் முடியும்.

உலக முதலாளித்துவத்தின் புதிய ஏகாதிபத்திய மாதிரிகளைப்பற்றியும், சமனற்ற 'அபிவிருத்தி என்ற ஒழுங்குவிதியின் இயக்கம் பற்றியுமே நாம் இப்பொழுது பேசுகிறோம். இந்த சமமற்ற அபிவிருத்தியே மீண்டும் ஐரோப்பாவை உலக அரசியலின் மையத்துக்குத்

தள்ளியுள்ளது. இந்த சமனற்ற அபிவிருத்தி தர்க்க ரீதியில் எதிர்முரண் நிலையொன்றைக் கொண்டிருக்கிறது. ஒருபுறத்தில் உலகளாவிய மட்டத்தில் சர்வதேசமயமாக்கலை நோக்கிய ஒரு போக்கு வரவர அதிகமாகி வருகிறது. முன்னர் ஒரு போதும் இருந்திராத விதத்தில், உலக நிகழ்வுப்போக்குகள் எம் மீது தாக்கத்தினையும், செல்வாக்கினையும் செலுத்த தொடங்கியுள்ளன. மறுபுறத்தில், வல்லரசுகளின் மேலாதிக்க அந்தஸ்திலும் ஒரு நெருக்கடி தோன்றியிருக்கிறது. யுத்தத்துக்கு பிற்பட்ட உலகில் அமெரிக்காவும், ரஷ்யாவும் செலுத்தி வந்த மேலாதிக்கம்; கம்யூனிச இயக்கத்தின் மீது ரஷ்யா காட்டிவந்த மேலாதிக்கம்; தமது நாடுகளில் கம்யூனிஸ்டுகளும், மாக்சிஸ்டுகளும், எதிர்ப்பு இயக்கங்கள் மீது செலுத்தி வந்த மேலாதிக்கம் என்பன இப்பொழுது ஒரு நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கின்றன. தன்னாதிக்கம், தேசியவாதம் போன்ற உணர்வுகள் மேலும் மேலும் வலியுறுத்தப்பட்ட ஒரு நிகழ்வுப் போக்கின் விளைவாகவே இந்நெருக்கடி தோன்றியிருக்கிறது. எனவே உலகம் வரவர ஒன்றிணைக்கப்பட்டு வரும் வேளையில், உள்ளூர். தேசிய போக்குகள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன சம்பவங்கள் நாங்கள் எதிர்பார்த்ததை விடவும் கூடிய வேகத்தில் இடம் பெற்றதனாலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவையாக இருந்ததாலும் இந்த வேகத்துக்கு எம்மால் ஈடு கொடுக்க முடியவில்லை. மேலும், கீழே அடி மட்டத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதனை சரியாக பகுப்பாய்வு செய்யத்தவறியமையும் இதற்கொரு காரணமாகும். இவற்றை முறையாக உன்னிப்பாக பகுப்பாய்வு செய்வதற்கு தேவையான பூதக்கண்ணாடிகளும், தொலை நோக்கு கருவிகளும் எம்மிடம் இருக்கவில்லை. இதன் பின்விளைவாகவே சர்வதேச சோஷலிஸ இயக்கத்தின் முறிவு ஏற்பட்டுள்ளது என்று நான் நினைக்கிறேன்.

மாற்றங்களுக்கான உத்திகள் மற்றும் முழு மாக்சிய கொள்கையிலும் இது பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாகும். மாக்சிய கோட்பாட்டின் முதன்மை அம்சங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்ட இரு நிகழ்வுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளன. ஒரு புறத்தில் உலக முதலாளித்துவத்தின் ஒரு புதிய கட்டமாக ஏகாதிபத்தியவாதத்தின் எழுச்சி; இரண்டாவதாக, அப்போது சோஷலிஸத்தில் இடம்பெற்று வந்த நெருக்கடி; அதாவது சர்வதேச சமூக ஜனநாயக இயக்கத்தில் ஏற்பட்ட நெருக்கடி. இந்த இரு நிகழ்வுகளும் மீண்டும் நிகழும் காட்சியையே இப்பொழுது காண்கிறோம். உலக பொருளாதாரத்தில், அரசியலில், யுத்தத்துக்கு பிற்பட்ட கால முதலாளித்துவத்தில் ஓர் அடிப்படை மாற்றம்; இந்த மாற்றத்தின் விளைவாக உலகளாவிய ரீதியில் தொழில் பிரிவில் மாற்றங்கள் ஏற்பட்டு, அதனால் வர்க்க தொடர்புகளிலும் மாற்றங்கள் நிகழலாம். இவை இரண்டும் மார்க்சிய கோட்பாட்டிலும், சிந்தனையிலும், பகுப்பாய்விலும் பேரண்ட மட்டத்தில் எதிர்விளைவுகளை உருவாக்க வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அத்தகைய ஒரு பார்வை கோட்பாட்டாக்கம் இலங்கையில் மட்டுமன்றி, நானறிந்த வரையில் உலக மார்க்சிச எழுத்துக்களிலும் காணப்படவில்லை.

மார்க்சிசத்தின் நெருக்கடி

கேள்வி:

மீண்டும் கிழக்கு ஐரோப்பாவின் விஷயத்துக்கு வருவோம். உண்மையில் அங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது?

பதில்:

சோவியத் யூனியனிலும் கிழக்கைரோப்பாவிலும் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் குறித்த மார்க்சிஸ்டுகளின் கண்ணோட்டம் ஒரே மாதிரியானதாக இல்லை. 'ஒரு தனி நாட்டில் சோஸலிஸத்தை கட்டியெழுப்ப முடியாது' என்று ட்ரொட்ஸ்கி சொன்னது சரிதான் என்று ஒரு சாரார் கருதுகின்றனர். அது சரியாகவும் இருக்கலாம்; தவறாகவும் இருக்கலாம். இன்னொரு வகையில், ஸ்டாலின் செய்த அந்தனை தவறுகளையும் நியாயப்படுத்தக்கூடிய ஒரு நிலையை இம்மாற்றங்கள் தோற்றுவித்திருப்பதாக நான் நினைக்கிறேன், ஏனெனில், சோவியத் ஆட்சியாளர்கள் 1920 களில் செய்த அதே தெரிவினையே இப்பொழுது கோர்பசேவ் செய்ய வேண்டியிருக்கிறது. சோவியத் யூனியனில் சோஷலிஸத்தை பாதுகாத்து, புத்தாக்கம் செய்து, மீளமைப்பதற்காக ஐரோப்பாவை விட்டுக்கொடுக்கும் அபாய ஏதுவை அவர் சந்திக்க வேண்டியிருந்தது. அது ஒரு வகையில், ஒரு நாட்டில் சோஷலிஸத்தை கட்டியெழுப்புவதாகவே இருக்கிறது. 'அது எந்த நாட்டில்' என்ற கேள்வியை யாராவது கேட்டால் சங்கடம் தான்.

கிழக்கைரோப்பிய நாடுகளின் நெருக்கடியை, அந்நாடுகளில் சோஷலிஸ ஆட்சிகள் உருவான விதத்திலிருந்து பிரித்து தனித்து நோக்க முடியாது. இந்நாடுகளில் எவ்விதம் புரட்சிகள் ஏற்பட்டன என்பதை நாம் அறிவோம். பாஸிஸம் முறியடிக்கப்பட்ட, போது நட்பு நாடுகள், பாஸிஸ பேரரசில் தாம் விடுவித்த பகுதிகளில் முதலாளித்துவத்துக்கு புத்துயிரூட்டி மீளமைத்தனர். அதே வேளையில், சோவியத் யூனியன் தான் விடுவித்த பகுதிகளில், தனது சொந்த சமூக - பொருளாதார, அரசியல் மாதிரிகளை உருவாக்கியது. எனக்குத் தெரிந்தவரையில், *1945 - 1947* காலப்பகுதியில் கிழக்கைரோப்பாவில் ஸ்டாலினும் மற்றும் கம்யூனிஸ்டுகளும் ஜனநாயமான, நெகிழ்ச்சியுள்ள கொள்கையொன்றையே பின்பற்றினர். கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம் செலுத்திய கூட்டரசாங்கங்களாக அவை இருந்தன. ஐரோப்பாவில் 1945 ன் பின்னர் இடைக்கால ஆட்சி மாதிரிகளும், அரசுகளும் நிலவின. இந்த மக்கள் ஜனநாயக அமைப்புக்களை எவ்வாறு வரைவிலக்கணம் செய்வது என்பது குறித்து கலந்துரையாடல்கள் இடம் பெற்று வந்தன. மக்கள் ஜனநாயகம் என்பது, ஒரு வகை பாட்டாளிகளின் சர்வாதிகாரமா

கும் என்று ஒரு வரைவிலக்கணம் உறியது. இது தீவிர கொள்கைவாதிகளின் கருத்தாக இருந்தது. பல்வேறு யாக்கங்களும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் புது மாதிரியான ஒரு அரசு என்று இன்னொரு சாரார் கருதினர். மாவோசேதுங் 1930 லிம் புதிய ஜனநாயக அரசுக்கு வழங்கிய அதே வரைவிலக்கணத்தையே இது நினையாப்பிரகாரமாக ஒத்திருக்கிறது. ஸ்டாலின் கால சோவியத் யூனியன் தனது நகல் மாதிரிகளை பிரயோகிக்கும் தவறினை கிழக்கைரோப்பாவில் செய்தது. ஆனால், செம்பிடியுந்தம் இடம் பெறா திருந்திருந்தால் சில நல்ல விளைவுகள் எழுச்சியடைந் திருக்க கூடும். (அநேகமாக, தவிர்க்க முடியாத வகையில் செய்யப்பட்ட) தவறுகளுக்காக சரித்திரம் பழி வாங் கும் ஒரு நிகழ்வே இப்பொழுது கிழக்கைரோப்பாவில் இடம் பெற்று வருகிறது.

இப்பொழுது சோவியத் யூனியனிலும் கிழக்கை ரோப்பாவிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் தாராளமய மாக்கல் போக்கு, பதினைந்து வருடங்களுக்கு முன்னர் சாத்தியமாகி இருக்க முடியாது என்றே நான் நினைக் கிறேன். அவற்றை நான் முழுமனதுடன் ஆதரித்து வரவேற்கிறேன். ஆனால் 1975 வரையில் இத்தகைய மாற்றங்களை செய்திருக்க முடியாது. அதற்கான காரணம் வியட்நாம் யுத்தம். குருஷேவ் காலத்தில் நிலைமை தேசிய விடுதலை இயக்கங்களுக்கும், மூன்றா வது உலகில் புரட்சிக்காக போராடும் இயக்கங்களுக் காகவும் சாதகமானதாக இருக்கவில்லை. புதிதாக உருவாகிவரும் சோஷலிச நாடுகளின் நலன்களுக்கும் உகந்ததாக அது இருக்கவில்லை. ஸ்டாலினை மறுதலிக் கும் போக்கு 1956 ல் அவசியமாக இருந்தது என்றே நினைக்கிறேன். ஆனால், குருஷேவ் அதனை பிழையான வழியில் மேற்கொண்டார். ஒரு புறத்தில் அது பூர்த்தி யடையாததாக இருந்ததுடன் மறுபுறத்தில் அவசரக் கோலத்தில் செய்யப்பட்டதாகவும், உணர்ச்சிவசப்பட்ட தாகவும் இருந்தது.

1968 க்கு முன்னரும் 1968 சோவியத் தலையீட்டுக் குப் பின்னருமாக இருமுறை செக்கோஸ்லாவியாவில் இருந்திருக்கிறேன். டுப்செக்கின் கீழ் நடந்த விடுதலை மயமாக்கள் குறித்து நான் மகிழ்ந்திருந்தேன். சோவியத் தலையீடு என்னை ஆத்திரம் கொள்ளச்செய்திருந்தது. ஆனால் சேகுவேராவின் டயறியை வாசித்த போது அதிலிருந்த சில குறிப்புக்கள் என்னை சிந்திக்க வைத்தன. பிரேக் வானொலி பலமுறை தன்னை விமர்சித்திருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். ஆகவே உள்ளக சுதந்திரம் எனக்கு மகிழ்ச்சி அளித்த போதி லும் சர்வதேச ஒருமைப்பாட்டில் அது சில பின்விளைவு களை எடுத்து வந்திருப்பதை காணமுடிந்தது. தீவிர கொள்கைவாதிகள் சர்வதேச அம்சங்களிலேயே பிடிவாதமாக நின்றார்கள். வியட்நாம் மீது அமெரிக்க ஆக்கிரமிப்பு நிகழ்ந்து கொண்டிருந்த அவ்வேளையில், உலக அளவில் சக்திகளின் சமநிலையைப் பேணும் விதத்தில் ஸ்டாலினிஸ்ட் கொள்கைப்போக்கு அவசிய மானதாக இருந்தது. ஆனால், 1975 ல் வியட்நாம் வெற்றியை அடுத்து, கடந்த 15 ஆண்டுகளில் அமெரிக்க மேலாதிக்கத்தின் முதுகெலும்பு முறிந்திருக்கிறது. இந்தப் பின்னணியில், கிளாஸ்நொஸ்ட் மற்றும் பெரஸ்த்ரொய்கா என்பன சாத்தியமாக இருக்கிறது. இப்பொழுது சமயற்ற அபிவிருத்தி நிகழ்வுப் போக்கு இடம் பெற்று வருவதனால் விடுதலை இயக்கங்களின் முன்னேற்றத்துக்கு சோஷலிஸத்தின் தாயகமான நாடு களில் விடுதலையின் இரண்டாவது அலை அவசியமாக இருக்கின்றது. ஆகவே, பின்விளைவுகள் என்னவாக இருந்தாலும் சோஷலிஸ இயக்கம் மற்றும் மனித நாகரிகம் என்பவற்றின் வருங்கால நலன் கருதி சோவியத் யூனியனிலும் ஏனைய சோஷலிச நாடுகளி லும் சோஷலிஸத்தை ஜனநாயகமயமாக்கல் படி முறையை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல வேண்டி யிருக்கிறது.

**கேள்வி:**

**சோவியத் ரஷ்யாவில் தற்பொழுது இடம் பெற்று வரும் சீர்திருத்தங்கள் 1930 களின் நிகழ்வுகளுக்கு இணை யானவை என்று சமீபத்திய கருத்தரங்கொன்றில் நீங்கள் கருத்து வெளியிட்டீர்கள் அல்லவா?**

பதில்:

கொர்பசேவ் சோஷலிஸத்தை கைவிட்டு தெரிந் தோ தெரியாமலோ முதலாளித்துவத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாரா என்ற விவாதத்தின் பின்னணியில் தற்போதைய நிலைமையுடன் 1930 களின் மந்தத்தை வைத்து சில ஒப்பீடுகளை செய்திருந் தேன். 1914 ன் பின்னர் முதலாளித்துவத்தில் எவ்விதம் ஒரு நெருக்கடி ஏற்பட்டதோ, இப்பொழுது அதே மாதிரியாக சோஷலிஸத்தில் ஒரு நெருக்கடி கட்டம் இடம் பெற்று வருவதாக எனக்குத் தோன்றுகிறது. முன்னர் ஏற்பட்ட பொது நெருக்கடியையும் 1930 களின் மந்தத்தையும் முதலாளித்துவம் பல்வேறு வழிகளில் எதிர்கொண்டது. இந்த எதிர்விளைவு களில் ஒன்று பாஸிஸம்; மற்றையது புது ஒழுங்கு (New Deal). பெரு மந்தத்தை அவதானித்து வந்த மார்க்சிய கோட்பாட்டாளர்கள், ஒரு முறை என்ற விதத்தில் முதலாளித்துவம் முடிந்துவிட்டது என்று கருத்துத்தெரிவித்தனர். ஆனால், அவ்விதம் எதுவும் நடக்கவில்லை. தன்னை மீளமைத்துக் கொண்டதன் மூலம் அது ஒரு நெருக்கடி மிகுந்த கட்டத்தை சமாளித்துக் கொண்டது. எவ்வாறிருப்பினும், இந்த நெருக்கடியின் பின்னணியில் ஏகாதிபத்திய சங்கிலியின் பல கண்ணிகள் அறுந்துபோயின.

சோஷலிஸ உலகில் தற்பொழுது இடம்பெற்று வரும் நெருக்கடியில் சோஷலிஸத்தின் சில அங்கங்கள் உதிர்ந்து வருவதுடன், உற்பத்தி மாதிரிகளினதும், வர்க்க உறவுகளினதும் அடிப்படை இயல்பில் பல முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மறு வார்த்தைகளில் கூறுவாதாயின் சில நாடுகள் சோஷ லிஸமல்லாத - ஏன் சமூக விரோத வழிகளில் கூட - இறங்கத் தொடங்கியுள்ளன. முதலாளித்துவத்தின்

பொது நெருக்கடியின் போதும் இதே மாதிரியான நிகழ்வுகள் இடம் பெற்றன. ஆனால், ஓர் அமைப்பு என்ற முறையில் சோஷலிஸம் முற்றாக குலைந்து விடும் என்று நான் எண்ணவில்லை.

கேள்வி :

கம்யூனிசத்தினதும் சமூக ஜனநாயகத்தினதும் சேர்க்கை குறித்து, 'இடதுசாரி இயக்கத்தின் செல்வழி எது' என்ற உங்கள் கட்டுரைத் தொடரில் குறிப்பிட்டிருந்தீர்கள். கம்யூனிசத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையில் ஒரு சேர்க்கை அவசியம் என்று கோர்பசேவ்வும் வலியுறுத்தி வருகிறார்.

பதில் :

சோஷலிஸத்தின் பொதுவான நெருக்கடி மற்றும் கோர்பசேவ்வின் புதிய சிந்தனைகள் என்பவற்றின் பின்னணியில், முற்போக்கு இயக்கத்தின் பல பழைய தளைகள் இப்பொழுது அறுந்து வருகின்றன. பேர்லின் சுவர் இடிந்து விழுவதற்கு முன்னர் பல கோட்பாட்டு, தத்துவார்த்த சுவர்கள் இடிந்து விழ்ந்து விட்டன. அராஜகத்துக்கும் மார்க்சிசத்தும் இடையில், கிஸ்தவத்துக்கும் புரசிக்கும் இடையில் என்று பல சுவர்கள் இப்பொழுது ஆட்டம் காணத்தொடங்கியுள்ளன.

முதலாவது உலகப் போருக்கு சோஷலிஸக் கட்சிகள் காட்டிய பதிற்குறிகளையடுத்தே சர்வதேச சோஷலிஸ இயக்கத்தில் பிளவு ஏற்பட்டது என்பதனை நாங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சமூக ஜனநாயகம் மற்றும் போல்ஷெவிசம், லெனினிசம் என்பவற்றுக்கிடையில் இந்த பிளவு ஏற்பட்டது. இது அதிர்ச்சியூட்டுவதாக இருந்ததுடன், நாட்டாற்றில் கைவிடும் ஒரு நடவடிக்கையாகவும் கருதப்பட்டது. கம்யூனிஸ்டுகளும் சமூக ஜனநாயகவாதிகளும் ஓர் அமைப்பில் தொடர்ந்து இருக்க முடியாதென்பது உணரப்பட்டது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் இடம்பெற்ற யுத்தங்களைப்போலவே முதலாளித்துவங்களுக்கிடையில் நடை பெற்ற இந்த யுத்தம் மேற்சொன்ன பிளவுக்கு வழி கோலியது. ரஷ்யா - சீனா, சீனா - வியட்நாம், வியட்நாம் - கம்பூச்சியா என்று சோஷலிஸ்டுகளுக்கிடையில் மூண்ட சண்டைகள் அதிகார பூர்வமான கம்யூனிசத்தின் மதிப்பைக் கெடுத்துள்ளதுடன், அது பெற்றிருந்த நற்பெயருக்கும் களங்கம் விளைவித்துள்ளன. அந்த வகையில் பார்க்கும் போது கம்யூனிசத்துக்கும் சமூக ஜனநாயகத்துக்கும் இடையிலான இந்தப் பிளவு அர்த்தமற்றதாகும். இந்த அமைப்பு ரீதியான பிளவுக்கான காரணங்கள் இப்பொழுது நிலவவில்லை. கம்யூனிச இயக்கத்தின் வரலாற்றில், முன்னர் திரிபுவாத கொள்கைகள் என்றும் திருத்தல்வாத கொள்கைகள் என்றும் ஒதுக்கப்பட்டிருந்த சமூக ஜனநாயக கருத்துக்கள் இப்பொழுது அதிகரித்த அளவில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. கிழக்கைரோப்பாவில் கம்யூனிசத்துக்கும், சமூக ஜனநாயகத்துக்கும் இடையில் ஒரு சேர்க்கை இடம் பெற்று வருகிறது. ஹங்கேரிய கம்யூனிஸ்ட் கட்சி - இப்பொழுது சோஷலிஸ கட்சி - இந்த முயற்சியை மேற்கொண்டு வருகிறது. முன்னர் ஐரோப்பிய கம்யூனிஸ்டுகள் - அதாவது இத்தாலிய, ஸ்பானிய கம்யூனிஸ்டுகள் - இதற்கான முயற்சிகளை செய்தார்கள். எங்களுக்கு இப்பொழுது தேவையான சேர்க்கை இதுவென்றே நான் நினைக்கிறேன். இச்சீர்திருத்தங்களை நோக்கியே கம்யூனிஸ்டுகள் சென்று கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி :

1914 ல் கம்யூனிஸ்டுகளுக்கும் சமூக ஜனநாயகவாதிகளுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டது என்று கூறினீர்கள். இப்பொழுது கிழக்கைரோப்பாவில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? அதில் தேசியவாதம் வகிக்கும் பங்கு என்ன?

பதில் :

தேசியவாதம் என்பது முதலாளித்துவத்தில் வேரூன்றியிருக்கும் ஒரு நிகழ்வுப் போக்கு என்றும், முதலாளித்துவத்தின் இடத்தில் சோஷலிஸம் அமரும் பட்சத்தில் அதன் அடித்தளம் அகற்றப்பட்டுவிடும் என்றும் பொதுவாக கூறப்படுகிறது. ஆனால், 70 வருட கால சோஷலிஸத்துக்குப்பின்னர் அஸர்பைஜானிலும், லிதுவேனியாவிலும் எழுச்சியடைந்த நிலைமைகள் எமது ஆழ்ந்த கவனிப்பை வேண்டி நிற்கின்றன. 'ஸ்டாலினிச' சோஷலிஸ பாணியின் விளைவாகவே இது ஏற்பட்டுள்ளது என்று ஒருவர் வாதிக்க முடியும். அப்படியாயின், யூகோஸ்லாவியாவில் மூர்க்கத்துடன் எழுச்சியடைந்து வரும் தேசியவாதங்களை விளக்குவது எப்படி? முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு ஏற்படும் பரிணாம மாற்றத்திலும் கூட தேசியவாதத்தை ஒழித்துவிட முடியாது. சில முதலாளித்துவ நாடுகள் சோஷலிஸ நாடுகளை விடவும் நல்ல முறையில் இப்பிரச்சினையை கையாண்டிருப்பதனை நீங்கள் காண்பீர்கள். அடிச்சரடாக ஓடும் சமூக - பொருளாதார அமைப்பு எதுவாக இருப்பினும், அரசியல் நெருக்கடிகளை சமாளிப்பதற்கும், மோதல்களை தீர்த்து வைப்பதற்குமான முறைமைகளை கண்டறியும் தேவை இறுதியில் முக்கியம் பெறுகிறது.

கேள்வி :

இந்த தேசியவாத உணர்வுகள் சில வேளைகளில் வெறித்தனமாக மாறுவதுண்டு. இந்நிலைமை முன்னோக்கிய பயணத்துக்குப் பதிலாக வந்த வழியில் மீண்டும் திரும்பிச்செல்லும் ஒரு சூழ்நிலையை உருவாக்க மாட்டாதா? சில நாடுகளுக்கிடையே போர்கள் கூட மூளக் கூடும். இதன் விளைவாக, முதலாவது உலக மகாயுத்தத்துக்கு முன்னர் நிலவிய நிலைமைக்கு கூட நாம் இட்டுச் செல்லப்படக்கூடும். இது பற்றி என்ன கூறுவீர்கள் ?

பதில் :

ஆம். நிச்சயமாக அப்படி நடக்க முடியும். ஐரோப்

பாவின் மீள் இணைவினை அடுத்து பெருமளவுக்கு பதற்ற நிலை தோன்றி. வன்முறை வெடிப்பதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது. அரசுகளுக்கிடையில், பெரும்பான்மை / சிறுபான்மை சமூகங்களுக்கிடையில் ஒன்றுடனொன்று போட்டியிடும் இனக் குழுக்களுக்கிடையில் என்று இவை தோன்ற முடியும். அரசுகளுக்குள்ளே கூட அத்தகைய மோதல்கள் ஏற்படலாம். பொதுவாக, மீள் இணைவு நிகழும், மீள் இணக்கம் ஏற்படும் காலகட்டங்கள், அநேகமாக போர்களும் போராட்டங்களும் வெடித்துக்கிளம்பும் கால கட்டங்களாக இருப்பதுண்டு. சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையை (பால்கல்கன் நாடுகள் போல) துண்டாகும் போக்கு பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். இப்பொழுது கிழக்கைரோப்பா ஒன்றுபடும் நிலை உருவாகியுள்ளது. ஜேர்மனிகளின் இணைப்பு சாத்தியமானால் இவற்றை எவ்விதம் தொடர்புபடுத்தி பார்ப்பது என்று எனக்கு விளங்கவில்லை. ஆனால், 1992 ம் ஆண்டு முக்கியத்துவம் மிக்க ஓர் ஆண்டாக இருக்கக்கூடிய ஒரு நிலையை இப்பொழுது நான் காண்கிறேன். ஒன்றுபட்ட ஐராப்பா எந்தவிதமான மாதிரிகளை, எத்தகைய உள்ளக அமைப்புக்களைக் கொண்டிருக்கும் என்பதிலேயே இது தங்கியிருக்கிறது. முதலில் திட்டமிடப்பட்டது போல அது ஐரோப்பிய பொதுச்சந்தை மட்டுமா? அல்லது அது கிழக்கைரோப்பிய நாடுகளையும் உள்ளடக்கி இருக்குமா ? தங்கியிருக்கும் சூழவுள்ள நாடுகள் என்ற அடிப்படையில் அவை இணைக்கப்படுமா ? அதன் விளைவான சமமற்ற அபிவிருத்தி, தேசியவாத. இனப் போராட்டங்களை, மோதல்களை உருவாக்குமா ? இவை மிக முக்கியமான கேள்விகள். பிரதான சீர் திருத்த நிகழ்வுப்போக்கில், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள் இருக்கும் கம்யூனிஸ்டுகள் இந்த போர்க்குணம் கொண்ட தேசியவாதத்திலிருந்து ஒதுங்கி இருந்திருக்கிறார்கள். அரசியல் தத்துவத்தைப் பொறுத்த வரையில், இந்த வகையிலேயே நான் என்னை இனம் காண்கிறேன்.

சோவியத் யூனியனின் பொருளாதார, சமூக அபிவிருத்திகளின் ஒரு கட்டத்தில், சில புதிய சக்திகள், சமூக குழுக்கள் எழுச்சியடைந்து வரும் என்றும், அதன் விளைவாக ஜனநாயகப்படுத்தல் மற்றும் திறந்த ஓர் அமைப்புக்கான உந்துதல் வந்து, அதனை அவசியப் படுத்தி நிற்கும் என்றும் ஐசக்டியூட்செர் முன்கூட்டியே கணித்துக்கூறியிருந்தார். கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் இதனை நான் குறிப்பிட்டிருந்தேன். முதலாளித்துவ அமைப்பைப் பொறுத்த வரையிலும் கூட இது பொருந்துவதாக இருப்பதை நான் காண்கிறேன். தென் கொரியாவின் அனுபவம் இதைக் காட்டுகிறது. கைத்தொழில் அபிவிருத்தியின் ஒரு மட்டத்தில், அதிகளவு ஜனநாயகமயமாக்கலுக்கு வழிவிட்ட முன்னைய அரசியல் அமைப்புடன் முரண்பட்டு நிற்கிற சில அரசியல், சமூக முரண்பாடுகள் அங்கு தோற்றம் பெறுகின்றன.

## தென் ஆசியா

கேள்வி :

வரும் தசாப்தத்தில் தென்னாசியாவில் எத்தகைய போக்குகள் காணப்படும் ?

பதில் :

வருங்காலம் குறித்த கணிப்புக்களை உருவாக்கும் முயற்சியில் நாங்கள் ஒரு அம்சத்தை நன்றாக மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில், அத்தகைய கணிப்புக்களைச் செய்யும் நமது ஆற்றல் மாறுபட்ட அளவில் இருக்கிறது. சரித்திரம் அதிவிரைவில் முன்னோக்கிச் செல்வதே இதற்கு காரணம். வாய்ப்புக்கள் பல விதங்களில், பல வகைகளில் காணப்படுகின்றன. மாற்றங்களுக்கான தனியொரு திசைவழி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏனென்றால், நாங்கள் இப்பொழுது வரலாற்றின் திருப்புமுனையொன்றில் நின்றிருக்கிறோம்.

தென்னாசியாவைப் பொறுத்த வரையில் இரண்டு விஷயங்களை சொல்ல விரும்புகிறேன். பெனாசிர் பூட்டோவும் வி. பி. சிங்கும் மனப்பூர்வமாக ஜனநாயகத்தில் ஈடுபாடு கொண்டவர்களாக – இது தென்னாசியாவைப் பொறுத்தவரையில் ஒரு புதிய விஷயம் - இருக்கிறார்கள். இவர்களிருவருக்கும் இடையில் ஒரு கூட்டு உருவாக முடிந்தால் அது நல்ல பலன்களைத் தரமுடியும் என்று நான் நினைக்கிறேன். இலங்கை, தன்னை அத்தகைய அமைவொன்றில் நிலை நிறுத்திக் கொள்ள முயல வேண்டும். இலங்கையின் இடது சாரிகளைப் பொறுத்தவரையில், பொருளாதார உத்தியொன்றைக்கண்டறியும் முயற்சியில் அவர்கள் மேற்கு வங்க கம்யூனிஸ்ட் (மாக்சிஸ்ட்) அரசாங்கத்தின் உத்திகளையும் உபாயங்களையும் உன்னிப்பாக அவதானித்தல் நல்லது என்பது என் கருத்தாகும். அந்த மாநில அரசை நியாயபூர்வமாகவும், கண்ணியமாகவும் நடத்திச் செல்வதறகு வேண்டிய முதலீட்டினை தக்க வைத்துக்கொள்ளவும், கவர்ந்தெடுக்கவும் அவர்களால் முடிந்திருக்கிறது. பஞ்சாயத்துக்கள் மூலம் ஒரு வகையான பங்கேற்கும் முறையும் அங்கு வளர்ச்சி கண்டுள்ளது. கட்சி நல்ல வளர்ச்சி கண்டு, வேரூன்றி இருக்கிறது. நாங்கள் இங்கு ஐரோப்பிய கம்யூனிசம் குறித்து பேசி வந்திருக்கிறோம். ஆனால் மேற்கு வங்க அரசின் பரீட்சார்த்த முயற்சிகள் குறித்து எவரும் போதிய கவனம் செலுத்தியதாக தெரியவில்லை. இலங்கையில் வாழும் எமக்கு மேற்குவங்க அனுபவம் அதிக முக்கியத்துவம் மிக்கது என்பதே எனது கருத்தாகும்.

## சோஷலிஸ கோட்பாடு

**கேள்வி :**

**கிழக்கைரோப்பாவில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள்,**

சோஷலிஸம் மற்றும் சோஷலிஸ கோட்பாடு என்பவற்றின் எதிர்காலத்தில் எந்த வகையான தாக்கங்களை எடுத்து வரும் ?

பதில்:

ஏனைய முறைமைகள், தத்துவங்கள் அனைத்தையும் மேவிய வகையில் தேசியவாதம் புத்தூக்கமும், புத்துணர்ச்சியும் கண்டு வரும் இந்நாட்களில் முக்கியமான விடயமொன்றை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது. இங்கு குறிப்பிட்டுக் கூறக் கூடிய உலக வரலாற்றுரீதியான ஒரு விதிவிலக்கு இருக்கிறது, முறையானமதம் குறிப்பாக கிறிஸ்தவம், இஸ்லாம் என்பவற்றையே இங்கு குறிப்பிடுகிறேன். அதிலும் குறிப்பாக கிறிஸ்தவ தேவாலயம்; உற்பத்தி மாதிரிகளில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களுக்கூடாகவும் தேவாலயம் உயிர் வாழ்ந்து வந்திருக்கிறது. இனவாத, தேசியவாத எழுச்சிகள் தோன்றிய காலகட்டங்களில் பல்தேசிய அமைப்பொழுங்கொன்றை பேணிக்கொள்வதில் அது வெற்றி கண்டு வந்திருக்கிறது. பல்வேறு வகுப்பினரையும் ஒன்றாக பிணைத்தெடுக்கும் பணியையும் நன்றாகவே நிறைவு செய்திருக்கிறது. சமூக அமைப்பின் எல்லா மட்டங்களிலும் தன்னை நிலை நிறுத்திக்கொள்வதிலும், ஈடு கொடுக்கும் ஆற்றலை வளர்த்துக்கொள்வதிலும் அது முன்னின்றது. உலக கம்யூனிசத்துடன் இடம் பெற்ற கோட்பாட்டு மோதலில் உண்மையில் வெற்றியடைந்தது ஐக்கிய அமெரிக்காவல்ல; கிறிஸ்தவ தேவாலயமும் - முக்கியமாக தற்போதைய பாப் ஆண்டவருமே - வெற்றியாளர்கள் ஆவார்கள் என்று நான் துணிந்து கூறுவேன். மறுபுறத்தில், அஸர்பைஜானில் இடம் பெற்றுவரும் நிகழ்வுகள் ஐரோப்பாவில் கிறிஸ்தவமத ஸ்தாபனத்தின் செல்வாக்கின் அளவுக்கு இல்லாவிட்டாலும் கூட பிறிதொரு முனையில் இஸ்லாம் கண்டுவரும் வெற்றிகளையே எமக்கு உணர்த்துகின்றன.

சோஷலிஸத்தின் எதிர்காலத்தைப் பொறுத்தவரையில், நம்பிக்கையூட்டும் ஒரு காட்சி, சீர்திருத்தப்பட்ட கம்யூனிசம் சீனாவில் வெற்றியடைவதற்குள்ள சாத்தியப்பாடாகும். கிழக்கைரோப்பாவில் சோஷலிஸத்தின் பின்னோக்கிய பயணம் இரு காரணிகளின் விளைவினால் உருவாகியிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஒன்று கிறிஸ்தவ தேவாலயத்தின் வரலாற்று ரீதியான செல்வாக்கு; அடுத்தது ஐக்கிய அமெரிக்காவில் பிரசன்னமாகியிருக்கும் ஐரோப்பாவிலிருந்து குடிபெயர்ந்த சமூகங்கள். ஆனால், இப்பொழுது இந்த இரு காரணிகளும் சீனாவில் காணப்படவில்லை. அதனால், சோஷலிஸத்தின் பின்னோக்கிய பயணமும், கிழக்கைரோப்பாவில் போன்று பூர்ஷ்வா ஜனநாயகமும் சீனாவில் நிகழ்வதற்கு வாய்ப்பிருக்க முடியாது. அதிர்ஷ்ட சக்கரம் நிற்கும் இடத்தைப் பொறுத்து, ஒரு வேளை சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியில் சூஎன்லாய் கொள்கை ஆதிக்கம் பெறக்கூடும். மாவோ சேதுங்கக்குப் பின்னர் சூ என்லாய் ஆட்சிக்கு வந்திருந்தால் உலக சோஷலிஸ அமைப்பில் இடம் பெற்றவை முற்றிலும் வேறுவிதமான மாற்றங்களாக இருந்திருக்கும் என்று என்னால் கூறமுடியும். சீன கம்யூனிஸ்ட் கட்சியில் சூ என்லாய் அல்லது ஸாவோ ஸியாங் போக்கு வெற்றியடையுமானால், அது கோர்பசேவ்வுக்கு பாரிய அளவு பலத்தினைக்கொடுக்கும். அத்துடன், சோஷலிஸத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியில் நம்பிக்கை மிகுந்த தீர்வொன்று கிடைப்பதற்கும் வழிகோலும்.

லக்ஸம்பேர்க், புகாரின், ட்ரொஸ்கி ஆகியோர் உலக பொருளாதாரத்துக்கு வெவ்வேறு அளவுகளில் முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஆகவே, இப்போழுது ஏற்பட்டுள்ள பொது நெருக்கடிக்கு அவர்கள் மீது குற்றம் சுமத்த முடியாது. ஆனால், கம்யூனிசத்துக்கான போராட்டம் மிக மிக நீண்டது என்பதனை முதலில் தெளிவாக கண்டுணர்ந்தவரும், அதனை உரத்துக் கூறியவரும் மாவோசேதுங் தான். இந்தப் புரட்சி பல தசாப்தங்களுக்கு - ஏன் பல நூற்றாண்டுகளுக்கு கூட - நீடிக்கக் கூடியது என்பதனை அவர் சரியாகவே கூறியிருந்தார்.

வர்க்கங்களும் வர்க்கப் போராட்டங்களும் தமது முக்கியத்துவத்தை நீண்ட நெடுங்காலத்துக்கு வைத்திருக்கின்றன. கலாசார புரட்சியை பரிந்துரை செய்த விஷயத்தில் மாவோ தவறிழைத்து விட்டார். ஆனால், நோயை இனங்கண்டு கொண்டதில் ஒரு தத்துவஞானியாகவும், அரசியல்வாதியாகவும் அவர் சரியாகவே இயங்கியிருக்கிறார். ஆனால், மனோபாவம், முறைமை என்ற அம்சங்களில் லெனின் மிகப் பொருத்தமாக தோற்றமளிக்கிறார். சோஷலிஸத்தின் நெருக்கடியினால் கூட லெனினிய மனோபாவம் மற்றும் முறைமை என்பவற்றில் குறை காண முடியாது. அதனால், மார்க்சிய சோஷலிஸம் அல்லது பொது சோஷலிஸம் கிழக்கைரோப்பாவில் மீண்டும் மலர்ச்சி கண்டுவரும் வாய்ப்பு இல்லையென்று ஒரேயடியாக நான் கூற மாட்டேன்.

நாங்கள் முற்றிலும் நம்பிக்கையிழந்தவர்களாக மாறத் தேவையில்லை. ஏனென்றால், அநேகமாக சோஷலிஸத்துக்கு நெருக்கடி நேரும் சந்தர்ப்பங்களில் கோட்பாட்டு பாய்ச்சல்கள் இடம் பெறுவதுண்டு. இரண்டாவது சர்வதேசியம் வீழ்ச்சியடைந்த ஒரு பின்னணியிலேயே லெனினிசம் முழு மலர்ச்சியுடன் எழுச்சி கண்டது. ஆகவே, உலக சோஷலிஸத்தில் தோன்றியுள்ள இந்த பொது நெருக்கடி, முக்கியமான சில கோட்பாட்டு முன்னேற்றங்களைக் கொண்ட சாதகமான ஒரு பக்கத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கக் கூடும். சிலர் செய்து வருவதைப்போல தோல்விகளை வெற்றிகளாக சித்தரித்துக்காட்டுவதன் மூலம் இதனைச்சாதித்து விடலாம் என்று நான் நினைக்கவில்லை. சில தோழர்களும், சில மார்க்சிஸ்டுகளும் சய இரண்டைவிட சய மூன்று பெரியது என நினைக்கிறார்கள் என்று லெனின் சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. சய அடையாளம்

ஒன்று இருப்பதே நாங்கள் ஒரு பகுதியை இழந்து விட்டோம் என்பதை காட்டுகிறது என்பதனை எவரும் உணரத்தலைப்பட வேண்டும். இந்த அங்கிகாரம் அடிப்படையானது. இந்த பொது நெருக்கடியின் பின்னணியில், மாக்சிஸ்டுகள் புரட்சிக்கான உத்திகளின் தாக்கங்களை நோக்க வேண்டும். கிழக்கு ஐரோப்பாவில் அரச அதிகாரத்தின் வர்க்க இயல்பு மற்றும் உற்பத்தி உறவுகள் போன்வற்றின் குணாம்சங்களில் (ருமேனியா தவிர்ந்த ஏனைய நாடுகளில்) அமைதியான மாற்றங்கள் இடம்பெற முடியுமாயின், அத்தகைய விதத்தில் முதலாளித்துவ நாடுகளில் சோஷலிஸத்தை நோக்கிய ஒரு நிலை மாற்றம் நிகழ்வது சாத்தியமாக இருக்குமா? அல்லது புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் இது சாத்தியமாக இருந்த போதிலும், முதலாளித்துவ நாடுகளைப்பொறுத்த வரையில் அமைதியான நிலைமாற்றம் மிகக்கடினமான ஒன்றாக இருக்குமா? அல்லது (நான் முன்னர் குறிப்பிட்ட காரணிகளான தேவாலயம் மற்றும் அமெரிக்காவில் வாழும் குடிபெயர்ந்த சமூகங்கள் போன்ற) ஐரோப்பாவுக்கேயுரிய விசேடித்த நிலைமைகளின் கீழ் மட்டும் நிகழும் ஓர் அற்புதமா? இவையனைத்தும் உன்னிப்பாக நோக்கப்படுதல் வேண்டும். சோஷலிஸத்தை கொண்டு வருவதற்கான எமது சொந்த உத்திகளின் பின்னணியில், கிழக்கைரோப்பாவில் என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதனை மறுவழியில் செலுத்தும் சாத்தியம் உண்டா என்பதனை நாங்கள் ஆராய்ந்து பார்த்தல் அவசியமாகும்.

சமீப வருடங்களில் - குறிப்பாக கடந்த ஆண்டில் - ஐரோப்பாவில் இடம் பெற்ற நிகழ்வுகள் உலகளாவிய அரசியலில் மட்டுமன்றி, அறிவின் பல்வேறு துறைகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதனை நான் காண்கிறேன். கிழக்கைரோப்பிய சம்பவங்கள் பல கேள்விகளை எழுப்பியுள்ளன. உதாரணமாக, அரசியல், சமூகவியல் துறையில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிகள் நலிவுற்று அழிவடையும் நிலைக்கு எப்படி தள்ளப்பட்டன? அதற்கும் பல்வேறு சமூக சக்திகளுக்கும் இடையிலான உறவு என்ன? அந்த உறவு எவ்விதம் மாற்றமடைந்தது? வெகுஜன தொடர்புத் துறையில் காணப்படும் பிரச்சினைகளையும் என்னால் உணர்ந்து கொள்ள முடியும். ஆளும் கட்சிகள் தமது மக்களுடன் தாக்கமான முறையில் தொடர்புகளை தொடர்ச்சியாக பேணும் விஷயத்தில் தோல்வி கண்டுள்ளன. அதே வேளையில், மேற்கத்தைய தொடர்பு சாதனங்களின் முயற்சிகள் வெற்றியடைந்துள்ளன.

வரலாற்றுரீதியான பொருள்முதல்வாதம் குறித்து மாறுபட்ட கேள்வியொன்றை எழுப்ப நான் விரும்புகிறேன். வழமையாக முதலாளித்துவத்தை விடவும் நன்கு முன்னேறிய சமூக உருவாக்கம் ஒன்றாகவும், உற்பத்தி முறையொன்றாகவும் சோஷலிஸம் பற்றி நாங்கள் குறிப்பிட்டு வந்துள்ளோம். முதலாளித்துவத்தைப்பற்றி நாங்கள் பேசும் போது, முதலாளித்துவத்தை மீள அமைத்தல், முதலாளித்துவத்துக்கு திரும்பி வருதல் போன்றவற்றை ஓரடி பின்னோக்கிச் செல்லும் ஓர் உணர்வுடன் பேசி வருகிறோம். குறித்த ஒரு காரணத்துக்காக நான் எனக்குள்ளேயே இது குறித்து கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளேன். நான் சரியாக விளங்கிக் கொண்டிருக்கும் பட்சத்தில், இரு முக்கிய காரணங்களுக்காக மானிய முறையை விடவும் முதலாளித்துவம் அதிசிறந்த உற்பத்தி முறையாக இருப்பதாக மார்க்ஸ் கருதினார் என்று எனக்குத் தோன்றுகிறது. 1. சுதந்திரமான ஊழியம் – நிலத்துடனான தொடர்புகளிலிருந்து விடுபட்ட ஊழியம்; 2. ஊழியத்தின் உயர் அளவு சமூக விளைதிறன் அம்சம்.

இந்த இரு குறிகாட்டிகளையும் நாம் பிரயோகித்தால், கிழக்கைரோப்பாவிலும் - ஏன் சோவியத் யூனியனிலும் கூட - (இது குறித்து கருத்துக் கூறக் கூடிய அளவுக்கு எனக்குத் தெரியாது) இப்பொழுது இருந்து வரும் சோஷலிஸம் முதலாளித்துவத்திலும் பார்க்க பின்தங்கியதாகவே தெரிகிறது. புரட்சிக்கும் பிற்பட்ட சமூகங்களில் ஊழியம் மீதான கட்டுப்பாடுகள், உண்மையில் செயற்படும் சோஷலிஸத்தில் விட முதலாளித்துவத்தில் ஊழியம் சுதந்திரமானது என்பதனை காட்டுவனவாக இருக்கின்றன. அநேகமாக ஊழியத்தின் விளைதிறனும் இதே விதத்திலே இருக்க முடியும். எனவே, அரச சோஷலிஸம், முதலாளித்துவத்துக்கு முற்பட்ட சில பொருளாதார குணாம்சங்களைக் கொண்டதாக சிலருக்கு தோற்றமளிக்க முடியும். அரச சோஷலிஸம் கப்பத்தை அடிப்படையாக கொண்ட ஒரு முறை என்று சமீர் அமீன் வர்ணித்திருந்தது நினைவுக்கு வருகிறது. ஆசிய மற்றும் மானிய முறை உற்பத்தி முறைகளைக் குறிக்க அவர் இப்பதத்தினை பிரயோகித்தார். அரச சோஷலிஸமென்பது கப்பத்தை அடிப்படையாக கொண்ட மாதிரியிலிருந்து மாறுபட்டதா என்ற கேள்வி எழுகிறது. அந்த வகையில், இப்போதுள்ள சோஷலிஸம் - அரச சோஷலிஸம் - பூர்வ முதலாளித்துவ உற்பத்தி முறையொன்றா? முதலாளித்துவத்தின் எழுச்சி அச்சமூகங்களில் நிகழ்ந்த ஒரு அடி முன்னேற்றமாகுமா?

முதலாளித்துவ சமூகங்களில் நிகழ்ந்து வருவதிலும் பார்க்க உயர் அளவில் தற்போதைய சோஷலிஸ சமூகங்களில் அந்நியமாதல் இடம் பெற்றுவருகிறது என்பது தெரிந்த ஒரு விடயமாகும். முதலாளித்துவத்தில் சமூகம் மற்றும் அரசியல் என்பன ஒழுங்கமைந்துள்ள முறை காரணமாக, அம்மக்கள், கிழக்கைரோப்பிய மக்கள் உணரும் அளவுக்கு அந்நியமாதலை உணர்வதில்லை. இது, முதலாளித்துவத்தின் அரசியல் சமூக அமைப்பு. சோஷலிஸ அமைப்பினை விடவும் வெற்றிகரமான முறையில் முதலாளித்துவ உயர் அரசியல் அமைப்பு செயற்படும் விதம் என்பன குறித்த ஆழமான பகுப்பாய்வுகளை வேண்டி நிற்கிறது. முதலாளித்துவம், அதற்குள்ளேயே ஒரு இருபக்க தொடர்பு முறையை அமைத்துக்கொண்டிருக்கிறது. சோஷலிஸத்திலோவெனில், இன்னமும் பூர்வ முதலா

# ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில்மயமாக்கல்

கொட்பிரே குணதிலக

பொருளியல் நோக்கு, பெப்ரவரி 1990

( பணிப்பாளர், மார்க் நிறுவனம் )

வெளி உலகுடனான எமது உறவுகள், நாம் '90 களில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் பொருளாதார நிர்ப்பந்தங்களிலேயே பெருமளவுக்கு தங்கியிருக்கும். இலங்கைக்கான முதல் முன்னுரிமை அதன் ஊழியர் படையை உறிஞ்சிக்கொள்ளும் ஆற்றலாகும். அநேகமாக, 60 களிலிருந்து இப்பிரச்சினை தொடர்ச்சியாக எம்மை அலைக்கழித்து வந்திருக்கிறது. மொத்த ஊழியர் படையில் 18 - 20 சதவீதமானோர் வேலையற்றோராக இருக்கும் ஒரு நிலையை தொடர்ந்து நாம் அனுபவித்து வந்துள்ளோம். இத்தகைய ஒரு சூழ்நிலையில், வரும் தசாப்தத்தில் இலங்கை உருவாக்கி, பயின்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் குறித்து கொட்பிரே குணதிலக எழுதுகிறார்.

ஏற்கனவே திரண்டுவந்திருக்கும் வேலையற்றோர் அத்துடன் வருடாவருடம் புதிதாக வந்து சேர்ந்து கொள்வோர் ஆகிய அனைவரையும் உறிஞ்சிக் கொள்ளும் திறனைப்பெற பொருளாதாரம் எவ்வாறு வளர முடியும்? வருடாந்தம் கிட்டத்தட்ட 150,000 பேர் ஊழியர் படையில் சேர்ந்து கொள்கிறார்கள். சமூக பொருளாதார ஸ்திரப்பாடு, பொருளாதார ரீதியில் நின்று பிடிக்கக்கூடிய ஆற்றல் என்பவற்றின் அடிப்படையில் நாங்கள் அபிவிருத்தி காண வேண்டுமாயின், இளைஞர்களுக்கு உற்பத்தி வழிகளில் வேலை வாய்ப்புக்களை வழங்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தை கணிசமான ஒரு மட்டத்துக்கு குறைத்து விடக்கூடிய உத்தியொன்றை முதலில் பின்பற்ற வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தின் சகிக்கக்கூடிய குறைந்த ஒரு மட்டம் எது என்பது குறித்து சர்ச்சைகள் எழலாம்.

உதாரணமாக, இப்பொழுது 20 சதவீதமாக இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை '90 களின் முடிவில் 5 சதவீதமாக - இதனை சகித்துக் கொள்ளக்

---

ளித்துவ, முடியாட்சி அமைப்பு வாரிசு முறை காணப்பட்டு வருகிறது. கிம் இல் சுங்கும் அவரது மகனும் இதற்கு சிறந்த உதாரணம்.

தனது உற்பத்தி மாதிரி குறித்த பகுப்பாய்வில் பிற்கால மார்க்ஸ் அந்நியமாதலை இடம் பெறச் செய்தார். இளைஞரான மார்க்ஸ் அந்நியமாதலை ஒரு தத்துவசாஸ்திர வகையாக கண்டார். கிழக்கைரோப்பாவில் அந்நியமாதல் அற்புதம், அதன் சமூக உருவாக்கத்தில் காணப்பட்ட உற்பத்தி மாதிரிகள் குறித்த கேள்விகளை எழுப்புகிறது. அந்நியமாதலுக்கும் அந்த உற்பத்தி மாதிரிக்கும் இடையில் நிலவிய தொடர்புஎன்ன ? அந்நியமாதல் நிகழ்வும், அதற்கான கிழக்கைரோப்பாவின் எதிர்விளைவுகளும் சமூக உருவாக்கம் மற்றும் உற்பத்தி மாதிரிகள் குறித்து என்ன தெரிவிக்கின்றன? ஒரு வேளை, முதலாளித்துவம் குறித்து மார்க்ஸ் கூறியது தவறாக இருக்கலாம்.

சர்வதேசிய ரீதியிலும் சரி, தேசிய ரீதியிலும் சரி எமது பாதையில் பெயர்ப்பலகைகளை நாங்கள் இழந்து விட்டோம். இனக்கலவரங்கள்; அதன் பின்விளைவாக எழுச்சி கண்ட ஜே. வி. பி. அலை என்பன இலங்கையின் இடது சாரி அரசியலை முற்றாக நிலைகுலையச் செய்துள்ளன. பழைய கூட்டுக்கள் முறிவடைந்துள்ளதுடன், பரிச்சயமில்லாத பிராந்திய மொன்றுக்குகள் நாங்கள் நுழைந்திருக்கிறோம். தென் ஆபிரிக்கா, மத்திய அமெரிக்கா, பலஸ்தீன் ஆகிய இடங்களில் இருக்கும் புரட்சிவாதிகளை நான் சில சமயம் பொறாமைக் கண்ணுடன் பார்ப்பதுண்டு. அவர்களது தேசிய போராட்டங்களின் இயல்பு, அடிப்படையில் அவ்வளவு தூரம் மாற்றமடையாதிருப்பதனால், உலகளாவிய மட்டத்தில் நிகழும் மாற்றங்களுக்கு அவர்கள் எளிதில் ஈடுகொடுக்க கூடியதாக இருக்கிறது. ஆனால், இங்கு எம்மிடமோ தேசிய அளவுமானிகளோ சர்வதேச அளவுமானிகளோ இல்லை. நாங்கள் எமது சொந்தக் காலில் நின்று சிந்தித்து உடன் முடிவெடுக்க வேண்டிய நிலையைத் தோற்றுவித்திருப்பதனால் ஒரு வகையில் இது ஒரு சவாலாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். நவீனயுகத்தின் முரண்பாடுகள் அனைத்தும் மற்றும் பழங்காலத்தின் சில முரண்பாடுகளும் இன்றைய இலங்கையில் காணப்படுகின்றன. மாறி வரும் உலகின் பின்புலத்தில் நின்று, அவற்றைப்பற்றி சிந்தித்து, சரியான எம்மால் முடியுமானால், சோஷலிஸ சிந்தனைக்கு எம்மையறியாமலேயே நாம் பங்களிப்புச் செய்தவர்களாவோம்.

நிகோஸ் பொலன்ஸாஸ் மற்றும் லூயி அல் தூஸர் ஆகியோர் மேதைகள் என்ற முறையில், சோஷலிஸத்துக்கும், சோஷலிஸ இயக்கத்துக்கும் என்ன நடந்து வருகிறது என்பதனை முன் கூட்டியே உணர்ந்திருந்தார்கள். ஆகவே, அவர்களுக்கு ஏற்பட்ட கதியையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், நாங்கள் கோர்பசேவுக்கு அவரது முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் அதே வேளையில், கிராம்சியின் நோக்குகளையும், எண்ணோட்டங்களையும் வைத்திருக்க வேண்டும். அந்த வகையில், இலங்கையில் சோஷலிஸத்துக்கான மாதிரியுருக்களை கிராம்சியும் கோர்பசேவும் வழங்குகிறார்கள்.

கூடிய ஒரு மட்டம் என்று கூற லாம் - குறைத்துக் கொள்வதற்கு நாங்கள் மதிப்பீடுகளைச் செய்ய வேண்டும். அந்த இலக்கை அடை வதற்கு 7-8 சதவீத அளவுக்கு வளர்ச்சி ஏற்பட வேண்டும். குறைந்த விகிதத்தில் வளர்ச்சி கண்டு, ஊழியர் படையை உறிஞ்சிக் கொள்ளக்கூடிய உத்தியை எம்மால் உருவாக்க முடியாது.

எந்த மாதிரியான வளர்ச்சி இந்த நிலைக்கு எம்மை இட்டுச் செல்ல முடியும்? இதற்கு ஒரிரு விடைகளே இருப்பதாக நான் நினைக்கிறேன். இந்த விடைகள், தவிர்க்க முடியாத வகையில், எமது பொருளாதாரத்தின் இயல்பு மற்றும் வெளியுலகுடன் நாம் தொடர்புகளை வைதிருக்கும் வழிமுறை என்பவற்றிலிருந்தே வருகின்றன. நமது விவசாய வளர்ச்சியில் ஏறக்குறைய நாங்கள் உச்சமட்ட எல்லையை இப்பொழுது தொட்டிருப்பதில், இந்த வளர்ச்சி அவசியமாக கைத்தொழிலிருந்தே வருதல் வேண்டும். எமது காணிகளை உச்ச மட்டத்துக்கு நாங்கள் அபிவிருத்தி செய்திருக்கிறோம். மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மிகச்சிறு அளவு நிலமே எஞ்சியிருக்கிறது. எம்மால் நிச்சயமாக விவசாயத்தில் விளைதிறனைப் பெருக்க முடியும். ஆனால், விளைதிறன் பெருக்கப்படும் போது புதிதாக வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதில்லை; ஏற்கனவே வாய்ப்பு பெற்றிருப்பவர்களின் வருமானம் உயர்ந்து செல்லும் ஒரு நிகழ்வுப் போக்கே இடம் பெறுகிறது. ஆகவே, நாட்டுக்குத் தேவைப்படும் வேலை வாய்ப்புக்களை வழங்குவதில் விவசாயத்துறைக்கு இருக்கும் ஆற்றல் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கிறது. தேவையான வேலைவாய்ப்புக்களில் மூன்றில் ஒரு பகுதியை அல்லது அரைவாசியை அது நிச்சயமாக வழங்க முடியும். மிகுதி வேலை வாய்ப்புக்கள் கைத்தொழில் மற்றும் சேவைப்பிரிவுகளிலிருந்து வந்தாக வேண்டும். இதற்கு கைத்தொழில் துரித வேகத்தில் வளர்ச்சி காணுதல் அவசியம். கடந்த காலத்தில் 5 இலிருந்து 6 சதவீதம் வரையில் வளர்ச்சி எய்தப்பட்டு வந்திருக்கிறது; ஆனால், நாங்கள் 12 சதவீதமாக வளர்ச்சி காண வேண்டியவர்களாக இருக்கிறோம். நாங்கள் வெளிநோக்கிய நிலையில் இருக்க வேண்டும் என்பது குறித்து எந்த சந்தேகமுமில்லை. எமது பொருளாதாரம் பெருமளவுக்கு உலகச்சந்தைக்கென்று உற்பத்திகளைச் செய்ய வேண்டும். உலகச் சந்தைகளில் போட்டி போடக்கூடிய ஓர் உத்தியின் அடிப்படையில் எமது கைத்தொழில்மயமாக்கல் இடம்பெற வேண்டும்.

உண்மையில், நாம் வளர்ச்சி காண வேண்டுமாயின், எமது பிரச்சினைகளை வெற்றிகரமாக தீர்த்துக்கொள்ள வேண்டுமாயின் எங்கள் முன் வேறு மாற்று வழியொன்றுமில்லை. வெளியில் சந்தைகளுடன் உச்சமட்டத்தில் தொடர்பு கொள்வதே உள்ள ஒரே வழி. ஒரு சிலரின் கைகளில் செல்வத்தைக் குவிக்கும் அல்லது ஏற்றத்தாழ்வினை எடுத்து வரும் முதலாளித்துவ உத்தியை நாங்கள் பின்பற்ற வேண்டும் என்பது இதற்கு அர்த்தமல்ல. செல்வக்குவிப்பு அல்லது அமத்துவம் என்பவற்றுடன் கைகோர்த்துக் கொண்டு திறந்த பொருளாதாரம் செல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. தென் கொரியா, தாய்வான் போன்ற திறந்த பொருளாதாரங்கள் வளர்ச்சி கண்டிருப்பதை நாம் நன்கு அறிவோம். இந்நாடுகளின் வருமானப்பகிர்வு இலங்கையை விட மிகச்சிறந்த ஒரு முறையிலேயே இடம்பெற்று வருகிறது. மறுபுறத்தில், ''திறந்த பொருளாதாரம்'' குறித்த எமது அனுபவம் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கச் செய்திருக்கிறது. அதன் விளைவாக வறுமை பெருகியுள்ளது என்று நான் கூறமாட்டேன். இரண்டும் வெவ்வேறு விஷயங்கள். 1977 க்கு முற்பட்ட காலத்தில் 1985/86 லும்பார்க்க வறியோரின் வீதாசாரம் உயர்வாக தெரிகிறது. அதனால் வறுமை பெருகியிருப்பதாக நான் நினைக்கவில்லை; ஆனால் ஏற்றத்தாழ்வு அதிகரித்திருக்கிறது.

திறந்த பொருளாதாரத்துடன் சேர்ந்து சமனின்மை ஏன் அதிகரிக்க வேண்டும் என்பதற்கு எந்தக்காரணமுமில்லை. வளர்ச்சியடையும் கைத்தொழிலின் வகையிலேயே இது தங்கியிருக்கிறது. உதாரணமாக அதிக தொழில் செறிவு கொண்ட கைத்தொழில்கள் இருந்தால், அந்தக் கைத்தொழிலின் பிரதிபலன்கள், அதிகளவில் தொழிலாளரை நோக்கியே செல்வதனை நீங்கள் காண்பீர்கள். தென் கொரியாவில் வருமானப்பகிர்வு, சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டு வரும் வழியில் செல்லவில்லை பெருமளவில் தொழில் செறிவு கொண்ட கைத்தொழில்மயமாக்கல் அங்கு இடம் பெற்றதே இதற்கான காரணமாகும். அது வெளி நோக்கிய நிலையில் இருந்தமையாலேயே தொழில் செறிவு மிக்கதாக மாறியது. தொழிலாளர் விஷயத்தில், ஒப்பீட்டுரீதியான அனுகூலம் தென் கொரியாவின் பக்கம் இருந்தது. இதன் காரணமாக அந்நாடு உலகச் சந்தைகளில் போட்டியிடக்கூடிய நிலையில் இருந்தது. வேலையற்றோருக்கு தொழில்கள் வழங்கப்பட்ட போது, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தது. அதன் விளைவாக வருமானப்பகிர்வு நல்ல முறையில் இடம் பெற்றது. எனவே, திறந்த பொருளாதாரமொன்றில் செல்வக்குவிப்போ அல்லது வளர்ந்து வரும் சமூக ஏற்றத்தாழ்வுகளோ ஏற்பட வேண்டுமென்ற எந்த அவசியமுமில்லை. திட்டமிடுதலிலும், அனைத்தும் அடங்கிய அபி

விருத்தி நிகழ்வுப் போக்கு எந்த வகையில் செயற்படுகிறது என்பதிலுமே இது தங்கியிருக்கிறது. ஏற்றத்தாழ்வுகள், திறந்த பொருளாதாரத்தின் தவிர்க்க முடியாத விளைவுகள் என்று கூற முடியாது என்பதனையே இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## கிழக்கு ஐரோப்பா

தொண்ணூறுகளில் எய்தப்பட வேண்டிய வளர்ச்சி மற்றும் சாத்தியமான போக்குகள் என்பவற்றை உள்ளடக்கி ஓரிரு வருடங்களுக்கு முன்னர் எறியங்கள் தயாரிக்கப்பட்டன. ஆனால், இப்பொழுது கிழக்கைரோப்பாவில் இடம் பெற்றுவரும் மாற்றங்களின் விளைவாக, இவை பொருத்தமற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றன. உலக பொருளாதாரத்தில் நிகழ்ந்துவரும் மாற்றங்கள் இலங்கைக்கும் அதே போல தென்னாசியாவுக்கும் பாரியவிளைவுகளை எடுத்துவரக் கூடியதாக இருக்கும்.

தென்னாசியா விசேஷ உறவுகள் எதுவுமின்றி துண்டிக்கப்பட்ட நிலையில் இருப்பது போலவே தோன்றுகிறது. இது ஏன்? பல காரணிகள் உண்டு. தென்னாசியாவைப் பொறுத்த வரையில் முக்கியத்துவம் பெறும் முதல் காரணி மலிவான ஊழியமாகும். உயர் வேதனங்களை நோக்கி முழு கிழக்காசியாவும் நகர்ந்து கொண்டிருக்கிறது. அதே வேளையில், தென்னாசியா கல்வியறிவு பெற்ற மனித மூலதனத்தை அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இவ்விஷயத்தில் நாங்கள் சிறப்பு அனுகூல நிலையொன்றில் இருக்கிறோம். இந்தப் பிராந்தியத்தில் மட்டுமன்றி, ஏனைய பிராந்தியங்களிலும் ஏன் வளர்முக நாடுகளிலும் கூட நன்கு கல்விகற்ற மனித மூலதனத்தை நாங்கள் கொண்டிருக்கிறோம். ஆகவே, உலகின் ஏனைய பகுதிகளில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் கேள்வியை நிறைவு செய்யக்கூடிய கவர்ச்சிகரமான அடித்தளமொன்று எம்மிடம் இருக்கிறது.

கிழக்கைரோப்பிய பொருளாதாரங்கள் திறந்துவிடப்பட்டமை இருவகையான பின்விளைவுகளை எடுத்து வரலாம். கிழக்கைரோப்பா, வளர்முக நாடுகளிலும் பார்க்க, மூலதன மிகை காணப்படும் நாடுகளிலிருந்து மூலதனத்தைக் கவர முடியும். கிழக்கைரோப்பா வேகமாக வளர்ச்சியடையும் என்பதனையே அது காட்டுகிறது. இந்தப்பின்னணியில் முழு ஐரோப்பாவும் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் பார்க்க கூடிய அளவு வேகத்தில் வளர்ச்சி காண முடியும். வளர்ச்சி கண்டிருக்கும் ஏனைய பொருளாதாரங்களுடன் கிழக்கைரோப்பாவும் இணைவதே இதற்கான காரணமாகும். இந்நிலை ஒரு பொருளாதார எழுச்சிக்கு வழிவிட்டு, அதன் விளைவாக உலக கேள்வி உயர்ந்து செல்லும். இந்நிலைமையிலிருந்து தென்னரைக்கோளம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தச் சூழலில் பல்வேறு போக்குகளும் நிலவி வருவதனை நான் காண்கிறேன்

உலக பொருளாதாரத்தில் இடம்பெற்றுவரும் அடிப்படை மாற்றங்கள் மிகச் சாதகமான பின்விளைவுகளை எடுத்துவர வல்லனவாகும். கிழக்கைரோப்பா பெருமளவு மூலதனத்தைக் கவரப் போகிறது என்ற விஷயம் குறித்து நாங்கள் அதிருப்தியடைய வேண்டிய அவசியம் இல்லை. கிழக்கைரோப்பாவுக்குள்ளும் கிழக்கைரோப்பிய பொருளாதாரங்களுக்குள்ளும் செல்லும் மிகை மூலதனம் மேலதிக கேள்வியை உருவாக்கி, எமக்குப் பல சந்தைகளை திறந்துவிட முடியும்.

## அமைப்புரீதியான சீர்திருத்தம்

அபிவிருத்தி உத்திகள், அடிப்படை அமைப்புரீதியான மாற்றங்களில் கவனஞ் செலுத்துதல் வேண்டும். சந்தைச் சக்திகள் மட்டும் போதுமானவை என்று நான் நினைக்கவில்லை. கொள்கை வகுப்போரும், அரசியல் உயர் மட்டத்தினரும் தமது சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றை நேரடியாக எதிர்கொள்ளக்கூடிய நிலையில் இருக்க வேண்டும் என்பதனையே இது காட்டுகிறது. இலங்கையைப் பொறுத்த வரையில், முதலில், பாரிய கைத்தொழில்மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டமொன்றைக் கொண்ட பொருளாதார அமைப்பொன்று தேவை. பின்னர் அதன் வழியில் எதிர்ப்படவுள்ள தடங்கல்களை பரிசிலனை செய்ய வேண்டும். பொருளாதார, சமூக இரு வழிகளிலும் தடங்கல்கள் வரக்கூடும். அத்தகைய நிகழ்ச்சித்திட்டமொன்றின் வெற்றிக்கு முழு ஊழியர்படையும் பயிற்றுவிக்கப்படுதல் வேண்டும். வறுமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதனையே இது காட்டுகிறது. வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் வறுமை ஒழிப்புத்திட்டங்கள் ஓர் அவசியத் தேவை என்று நான் நினைக்கிறேன். வளர்ச்சியும் வேண்டும்; சமத்துவமும் வேண்டும். 'கடந்த 40 வருட காலமாக இடம் பெற்று வந்த ஏதோ ஒரு வகையான அபிவிருத்தி காரணமாகவே நாங்கள் இப்பொழுது இந்த பாரிய நெருக்கடியில் சிக்குண்டிருக்கிறோம். எனினும், அனைத்தையும் எதிர்மறை கண்ணோட்டத்திலேயே நோக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நாங்கள் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியுள்ளோம். அது, உயர் அளவிலான சமத்துவத்தை எடுத்துவர வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

யதார்த்தங்களுக்கு நாங்கள் எப்படி முகங்கொடுக்கப்போகின்றோம் என்பதே இங்குள்ள கடைசிப்பிரச்சினையாகும். ஒரு குடும்பத்துக்கு ஓரளவுக்கு வளங்

கள் இருக்கும் போது, அந்த அளவை மிஞ்சிய விதத்தில் அக்குடும்பம் வாழ முற்பட்டால் எப்படியும் அது கட்டாயமாக ஒரு நெருக்கடியை சந்தித்தே ஆக வேண்டும். அதனால் கடன் வாங்க முடியும்; ஆனால், இறுதியில் அதனிடம் இருக்கும் வளங்களின் மட்டத்துடன் அது இணங்கிப் போக வேண்டும். உருவாகியுள்ள இந்த நிலையை நாடு இப்பொழுது தவிர்க்க முடியாதுள்ளது. இறுதியில், தன்வசம் இருக்கும் மூலவள மட்டத்துக்கேற்ப அனுசரித்துப் போக வேண்டிய நிலை உருவாகும். வேதனை மிகுந்த சில சீராக்கங்களைச் செய்ய வேண்டிய நிலை, பங்கீடு குறித்த பிரச்சினைகள் உண்டு. வறியோர் மீது அதிகளவு சுமையையும், செல்வந்தர் மீது குறைவான சுமையையும் பகிரும் விதத்தில் இந்த சீராக்கம் இடம் பெற முடியும். அப்பொழுது சமூகத்தில் கொந்தளிப்பு நிலை தோன்றி அது அராஜகத்துக்கு இட்டுச் செல்லும். என்றாலும், எம் வசம் இருக்கும் மூலவளங்களுக்கேற்ப சீராக்கங்களை செய்து கொள்வது ஓர் அத்தியாவசிய தேவையாகும். இந்த சீராக்கத்தினை நாங்கள் எந்த விதத்தில் செய்து கொள்கிறோம். அதிக சமத்துவத்துடனா அல்லது பெரிய அளவு ஏற்றத்தாழ்வுகளுடனா என்பதனைப் பொறுத்து நாங்கள் சமூக அராஜகத்தை நோக்கி செல்கிறோமா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். ஏற்றுமதிகளை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் நாங்கள் உலக பொருளாதாரத்துக்கேற்ப சீராக்கங்களைச் செய்து கொள்ள வேண்டும். அவ்விதம் நாங்கள் செய்யாவிட்டால் எமது மூலவளங்கள பெருக முடியாது; மிகத் தாழ்ந்த மட்டத்திலேயே அவை இருக்கும். அப்பொழுது 1970-77 காலத்தில் நிலவிய நிலைமைக்கு நாங்கள் மீண்டும் செல்ல வேண்டி நேரிடும். அத்தகைய உயர் அளவில் ஒழுங்குபடுத்தப்பட்ட பொருளாதாரமொன்றில் அனைத்துவித ஏற்றத்தாழ்வுகளும் காணப்பட முடியும். அந்த ஏற்றத்தாழ்வுகள் பெருமளவுக்கு பொருளாதார ரீதியாக வன்றி, அரசியல் அதிகாரத்தை வைத்திருப்போரினால் அரசியல் ரீதியாக நிர்ணயிக்கப்படுகின்றன. எங்களுக்குள்ள மிக மோசமான மாற்றுவழி அது மட்டுமே. எக்காரணம் கொண்டும் அதனை நாங்கள் நாட முடியாது.

சரியான கலவை

வறுமை மற்றும் வேலையில்லாத்திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளை அணுகுவதற்கு எதிர்வரும் பத்தாண்டுகள் முடியும் வரையில் இருக்க முடியாது. வளர்ச்சி ஏற்படும் போது வேலையில்லாத் திண்டாட்டம் தானாகவே ஒழிந்து போகும்; வறுமை குறையும் என்று எங்களால் கூறிக் கொண்டிருக்க முடியாது. அப்பிரச்சினைகளை நாங்கள் இப்பொழுதே கையாள வேண்டும். இவ்வழியில் சில முரண்பாடுகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதனையே இது காட்டுகிறது. இதனை மேற்கொள்ளும் போது, உண்மையில் வளர்ச்சியை எடுத்து வருவதற்கு முயற்சி செய்பவர்களுக்கான ஊக்குவிப்புக்கள் குறைவடைய வாய்ப்பிருக்கிறது. மக்கள் தொடர்ச்சியாக ஆடம்பர வாழ்க்கை வாழ முடியாது. எமது நுகர்வில் - குறிப்பாக உயர் வருமானபிரிவினரைப் பொறுத்தளவில் - கட்டுப்பாடு அவசியம். சமத்துவம் மற்றும் வளர்ச்சி என்பவற்றை எத்தகைய அரசு, சந்தை கலவையொன்றில் கொண்டு வருவது? இதுவே நாங்கள் எழுப்பி, விடை காண வேண்டிய முக்கியமான பிரச்சினை. இதற்கு எளிதான விடைகளில்லை. பொருளாதாரத்தை திறந்துவிட்டு, சந்தைச் சக்திகள் சுதந்தரமாக செயற்பட இடமளிப்பதே மிகச்சிறந்த வழியென்று சிலர் நினைக்கக் கூடும். திறந்த பொருளாதாரம் மோசமானது என்றும், மாறாக நாங்கள் உள் நோக்கிய வழியில் செல்ல வேண்டும் என்றும் வேறு சிலர் எண்ணலாம். இவையிரண்டுக்கும் இடையில் சரியான விடைகளை நாங்கள் கண்டுகொள்ள முடியாது. இதில் ஒன்று தீவிரமான ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிகோலி, வளர்ச்சியையும் கூட பாதிக்க இடமிருக்கிறது. சமூக ஸ்திரத்தன்மை குலையும் போது மூலதனம் வெளியேறுதல், ஊழல், ஏற்றுமதிகளுக்கு குறைவாக விலையிடல், இறக்குமதிகளுக்கு கூடுதலாக விலையிடுதல் போன்ற தீய விளைவுகள் ஏற்படலாம். ஏற்றத்தாழ்வுகள் கொண்ட சந்தைப் பொருளாதாரம் அது தான். அதற்கு எதிரான நிலை மற்றையது; வளர்ச்சியற்ற நிலை, தடங்கல்கள், அரசியல் ஒடுக்குமுறை என்பவற்றைக் கொண்ட முறை. எமது கொள்கை வகுப்போர், இந்த இரு அதீத நிலைகளிலிருந்து சரியான கலவையை, பொருத்தமான விடைகளை காண வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

ஓரளவுக்கு சர்வாதிகாரம் போன்ற அரசாங்கங்களின் கீழ் தென் கொரியா போன்ற நாடுகளில் பொருளாதாரங்கல் தீவிரமாக வளர்ச்சி கண்ட போதிலும் இதனைப் பொதுமைப்படுத்திக் கூறுவது கடினமாகும். இலங்கையில், பொருளாதார அபிவிருத்தியை எடுத்து வருவதற்காக அரசியல் சுதந்திரத்தை தியாகம் செய்வது முடியாத காரியம். அப்பொழுது அராஜகமும், அரசியல் ஸ்திரமின்மையும் கிளர்ச்சிகளும் எழுச்சியடைய முடியும். இராணுவ ஆட்சி அல்லது அரசியல் ஒடுக்குமுறை ஆட்சியொன்றின் கீழ் துரித வளர்ச்சி காண முடியும் என்று நான் எண்ணவில்லை. ஆகவே, ஏதோ ஒரு வகையில் ஒரு புதிய மாதிரியை நாங்கள் உருவாக்க வேண்டும். எம் முன் உள்ள சவால் அதுவாகும். மாற்று

வழிகள் தெளிவாக தெரிகின்றன ஜனநாயகம் – வளர்ச்சி மற்றும் திறந்த பொருளாதாரம் – சமத்துவம் என்ற கலவையை தெரிவு செய்வதுதான் நம்முன் உள்ள ஒரேவழி.

## வேதன மட்டங்கள்

ஊழியம் தொடர்பாக எம்மிடம் திடமான கொள்கையொன்று இருக்க வேண்டும். பணவீக்கத்துக்கு ஈடாக வேதன மட்டங்களை நிர்ணயிக்கும், கூட்டுப் பேரம் பேசும் வேதனங்கள் கொள்கை ஆணைக்குழு முறையொன்றுடன் இது தொடர்பட்டிருத்தல் அவசியம். ஸ்கன்டிநேவிய நாடுகளின் அனுபவம் இதுதான்.

ஆனால், இங்குள்ள அரசியல் முறை – குறிப்பாக அரசியல் கட்சி முறை – ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. பல கட்சி முறையொன்றின் ஒழுகல் நெறிகளுக்கேற்ப நாம் எம்மை சீர் செய்து கொள்ளவில்லை. அடிக்கடி சொல்லப்பட்டு வந்துள்ள ஒரு விஷயத்தையே நான் மீண்டும் சொல்கிறேன். அநேகமாக அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கங்கள் அனைத்துமே எதிர்க்கட்சி ஒன்று இருப்பதனை விரும்பவில்லை. அதாவது, எதிர்க்கட்சிகள் ஒன்றில் ஒழிக்கப்பட வேண்டும்; அல்லது அதிகாரமற்றதாக செய்யப்பட வேண்டுமென்றே அரசாங்கங்கள் நினைக்கின்றன. எதிர்க்கட்சி, ஜனநாயக அமைப்பின் அத்தியாவசிய அங்கங்களில் ஒன்று என்ற படிப்பினையை நாங்கள் இன்னமும் சரியாக உணரவில்லை

ஜனநாயகம் கோரி கிழக்கைரோப்பாவில் இடம் பெற்ற பேரளவு எழுச்சி அண்மையில் நடந்த முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். சோஷலிஸத்தின் வளர்ச்சிக்காக ஜனநாயக முறையொன்றைப் பேணி வரும் அவசியம் சோஷலிஸத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று என்ற உண்மையை இப்பொழுது மார்க்சிய கட்சிகளும் உணர்ந்துள்ளன. இது, பல கட்சி ஜனநாயக முறையொன்றையே கோடிட்டுக் காட்டுகிறது. இலங்கையில் இயங்கும் மாக்சிஸ்ட் கட்சிகள் மீது தான் குற்றம் சுமத்தவில்லை. ஏனென்றால், மார்க்சிஸ்ட் கட்சிகள் இதனைச் செய்யவில்லை. பல கட்சி முறையென்பது, எந்த வகையிலும் தொடர்ந்து முரண்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் அமைப்பு என்று எதிர்க்கட்சி அல்லது அரசாங்கம் எண்ணுவது போல தெரிகிறது. அந்த நிலை மாற வேண்டும். முழு அமைப்புமே மாறவேண்டும் என்று நான் கூறுவேன். அநேகமாக அந்நிலை வரும்; ஒவ்வொரு கட்சிக்குள்ளிருந்தும் வரும். அரசியல் கட்சிகளுக்குள் உள்ளக சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். புதிய ஜனநாயக அமைப்பு மற்றும் புதிய பல கட்சி முறை என்பவற்றின் தேவையை நன்குணர்ந்துள்ள இளம் அரசியல்வாதிகளிடமிருந்து இந்த மாற்றம் வர வேண்டும்.

சில இளம் அரசியல்வாதிகள் கட்சி அரசியலின் முழுக் குணாம்சம் குறித்தும் கேள்வி எழுப்பி வந்துள்ளனர். ஏனென்றால். அது இங்கு இயங்கும் முறையில் ஆளும் கட்சியே அனைத்தையும் பெற்றுக் கொள்கிறது. இதன் விளைவாக, பாரபட்சம் காட்டும் நிலை தோன்றுகிறது. இந்நிலையை தவிர்ப்பது எப்படி? உண்மையில், மாற்று அரசாங்க நிலையொன்றில் எதிர்க்கட்சி இருக்கும் அதே வேளையில், பொறுப்பு மிகுந்த தீர்மானமெடுக்கும் பங்கொன்றினை அது வகிக்கச் செய்யும் நிலையை உருவாக்குவது எப்படி? கூட்டு அரசாங்கங்களைப் பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை. எதிர்க்கட்சியும் ஒரு பங்கினை வகிக்கும் வேறுவிதமான அமைப்பொன்று குறித்தே நான் குறிப்பிடுகிறேன். இது சுவிஸ் முறைக்கு ஒத்ததாகும்

இலங்கை '90 களில் முன்னோக்கி பயணம் செய்ய வேண்டுமானால், '80 களில் நாம் விட்ட தவறுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டுமானால், பல இனங்களைக் கொண்ட பல கலாசாரங்களைச் கொண்ட சமூகமொன்றை நாங்கள் கட்டியெழுப்ப வேண்டும். மதத்தலைவர்கள், பிரஜைகள் குழுக்கள் என்ற முழு அமைப்பும் இதனை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். இவ்விலக்கினை எய்தும் நோக்கிலேயே நமது நடவடிக்கைகளையும், செயல் திட்டங்களையும் வகுத்துக்கொள்ளுதல் அவசியமாகும்.

பொறுப்பும் அதிகாரமும் பகிர்ந்து கொள்ளப்படும் விதத்தில் எமது அமைப்பு வடிவமைக்கப்படுதல் அவசியம். அதிகளவில் பங்கேற்பு முறை இடம் பெற வேண்டும். இப்பொழுதுதே அது மேற் கொள்ளப்படுமானால் அபிவிருத்திக்கு தேவைப்படும் சுய ஒழுங்கு வந்துவிடும். மேலும் பன்முகப்படுத்தல், பாரியளவு பங்குபற்றல் என்பவற்றையே இது குறிக்கிறது. இதனை நான் பாரம்பரிய முறையில் நோக்கவில்லை. இதற்கென்று ஒரு முறைமை வகுக்கப்படுதல் வேண்டும். உதாரணமாக, இளைஞர்களை யௌவனப் பருவத்தில் இருப்போரை இதற்குள் கொண்டு வருவது எப்படி? தீர்மானம் எடுக்கும் விஷயத்தை எடுத்துக் கொண்டால், அதற்கு எத்தகைய முறைமைகள் எமக்குத் தேவை? இவை தானாகவே நடந்துவிடுவதில்லை. நாங்கள் சரியான கட்டுமானத்தை உருவாக்காவிட்டால் பங்கேற்றல் என்பது பொருத்தமற்றதாக போய்விடும். சிலர் இளைஞர் பாராளுமன்றம் ஒன்று குறித்துப் பேசுகிறார்கள். இது எத்தகைய நிறுவனம் என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இது போன்ற நிறுவனங்களை நாங்கள் வளர்த்தெடுக்க வேண்டும். அதிகளவு புதுமைகளை கண்டறிய வேண்டும்.

# நட்புறவு பாலங்கள்

பிரட்மன் வீரக்கோன்

வெளிநாட்டுக்கொள்கை பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நாட்டின் உள்நாட்டு நலன்களை பிரதிபலிப்பதாகவே இருக்கிறது. சுதந்திரத்தையும், பிராந்திய ஒருமைப்பாட்டையும், இறைமையையும் பேணிக் காப்பது முதல் முன்னுரிமையாகும். பின்னர் பொருளாதார மேம்பாட்டுடனும், வளர்ச்சியுடனும் தொடர்பு கொண்ட நலன்கள் கவனிக்கப்படுதல் வேண்டும். ஜனநாயக பாரம்பரியம், சமூக மதிப்புக்கள் மற்றும் உறுதிப்பாடு என்பன வெளிநாட்டு உறவுகளை நிர்ணயிக்கும் முக்கியமான அம்சங்கள். கட்டுரையாளர் ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் தொடர்பான ஆலோசகர்.

1990 களில் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் வெளியுலகம் எத்தகையது? எண்பதுகளில் அவதானித்த போக்குகளை அடிப்படையாக கொண்டு வருங்காலத்தை கணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். இன்றைய உலகில் இடம் பெற்றுவரும் அரசியல், பொருளாதார, சமூக மீளொழுங்குபடுத்தலின் பின்னணியில் வைத்து நாம் இவற்றை நோக்க முடியும்.

அரசியல் அரங்கிலேவெனில், கெடுபிடியுத்தம் முடிவடைந்து பலம்பொருந்திய வல்லரசுகளுக்கிடையிலான மோதல் நிலை நின்று போயிருக்கிறது. ஆயுதக்குவிப்பு மற்றும் வல்லரசுகளுக்கிடையிலான அதிகரித்த தொடர்பு, வியாபாரம் என்பவற்றில் இது எதிரொலிகளை ஏற்படுத்த வல்லது. வடக்குக்கும் கிழக்குக்கும் இடையிலான உறவுகளின் முழு இயப்புகளினும் அது தாக்கங்களை எடுத்து வர முடியும். இதன் விளைவாக '90 களில் வடக்கை நோக்கியிருக்க வேண்டிய ஒரு போக்கு நிலவ முடியும். காரணம் வடக்கு முக்கியத்துவம் பெற்றிருப்பதாகும். தெற்கைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. கிழக்கைரோப்பிய நாடுகள் வார்ஸா உடன்படிக்கையிலிருந்து விலகிச் சென்று தாமாகவே அணிசேரா நாடுகளாக மாற முடியும். மேற்கைரோப்பாவையும் கிழக்கைரோப்பாவையும் உள்ளடக்கி புதிய ஒரு ஐரோப்பிய அணி உருவாகலாம். இதன் விளைவாக பலம்பொருந்திய ஐரோப்பாவைக் கொண்ட மேற்குலகொன்று எழுச்சியடைய வாய்ப்பிருக்கிறது. பின் பசுபிக் விளிம்புக் கோட்பாடு எழுச்சி கண்டு இரு கொரியாக்கள் ஜப்பான், தாய்வான், சீனா அவுஸ்திரேலியா, நியுசிலந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகள் ஒன்றுபட்டு இணையும் ஒரு காட்சி தோன்றக்கூடும்.

ஆக, இந்தப் பின்னணியில் இலங்கை அதற்கான வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துக் கொள்வது எப்படி? இந்தசூழலொன்றில் அதன் முதன்மை நோக்கங்கள் எவை? நாங்கள் '90 களில் நுழையும் இவ்வேளையில் எம்முன் இருக்கும் முக்கியமான பிரச்சினை இது. வடக்குக்கும் தெற்குக்கும் உதவி தொடர்பான உறவுகளில் மேற்சொன்ன மாற்றங்கள் தாக்கங்களை எடுத்துவரும். இப்பொழுது '' கம்யூனிச பூச்சாண்டிக்கு '' இடமில்லை. இந்த '' அபாயத்துக்கு '' வளர்முக நாடுகள் இரையாக கூடும்; அதனால் அவற்றுக்கு உதவி வழங்க வேண்டியுள்ளது என்ற அணுகுமுறை இப்பொழுது அவசியமில்லை ஆகவே அப்பொழுது இந்நாடுகள் வடக்கிலிருந்து உதவியையும், முதலீட்டினையும் பெறுவதற்கு வேறு வழிகளை நாட வேண்டியிருக்கிறது. (குறிப்பாக இனப்பிரச்சினைகளின் எழுச்சி, வறுமைப்பெருக்கம் போன்ற) தமது சொந்தச் சமூகங்களில் மேலைத்தேச நாடுகள் அதிகளவு கவனஞ் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இப்பொழுதே இதற்கான அடையாளங்கள் தெரியத் தொடங்கியிருக்கின்றன. இதனால் வறிய நாடுகளுக்கு உதவும் அவற்றின் ஆற்றல் குறைவடையக்கூடும்.

இவ்விதமாக வளர்ச்சி கண்டு வரும் புதிய சர்வதேச சூழ்நிலையில், நாங்கள் அதிமதிநுட்பமாக, புதிய அணிகளைக் கொண்ட மையங்கள் மீது கவனஞ் செலுத்த வேண்டியிருக்கிறது. பாரம்பரிய மையங்களை விட்டுவிட்டு, இனிமேல் உதவி, முதலீடு மற்றும் சந்தைகள் என்பவற்றுக்காக இப்புதிய கூட்டுக்களையே நாங்கள் நாட வேண்டியிருக்கும்.

இந்தப் புதிய தசாப்தத்தில், உலகின் பல்வேறு பாகங்களிலும் வாழும் இலங்கையர் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் செய்து வரும் குடிபெயர்ந்த இலங்கையர் மீது நாங்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இலங்கை உருவாக்கிக் கொள்ள வேண்டிய பிம்பம், இவர்கள் மூலமாகவே வெளியுலகுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். அவர்களை நாங்கள் சென்றடைவது எப்படி? இச் செய்தியை எடுத்துச் செல்வதற்கு வேண்டிய சாதனங்களை அவர்களுக்கு வழங்குவது எப்படி? அந்த நாடுகளில் இயங்கும் குரலெழுப்பும் குழுக்கள் மற்றும் தொடர்பு சாதனங்களைச் சேர்ந்தோர் என்போருடன் தொடர்புகளை ஸ்தாபித்துக் கொள்ளும்

குழுக்களாக இவர்கள் செயற்பட முடியும். ஆக, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் எங்களுக்கு எதிராகவன்றி எங்கள் சார்பாக எங்களுடன் இணைந்த வகையில் பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலையை கட்டியெழுப்புவது '90 களில் எமது முதன்மை நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது.

மேற்சொன்ன அமைவின் பின்னணியில், எமது உத்தி, எமது வெளிநாட்டுக் கொள்கை எதுவாக இருக்க வேண்டும்? சில விரிவான தெரிவுகள் எம்முன் உண்டு. முடியுமான உச்ச மட்டத்தில் முதலீடு, உதவி, வியாபாரம் என்பவற்றைப் பெற்றுக் கொள்வது ஒன்று. இதற்காக அனைவருடனும் நாங்கள் நட்புறவு பாராட்ட வேண்டும். கடந்த காலத்தில், உலகம் இரு வல்லரசுகளுக்கிடையில் பிரிவுபட்டிருந்த போது அணிசேராமையே இதற்கான வழியாக இருந்தது. இப்பொழுது ஒருவகையில் அணிசேராமை பொருத்தமற்றிருக்கும் இன்றைய சூழ்நிலையில் நாங்கள் எத்தகைய பங்கினை ஆற்றுவது? சர்வதேச ரீதியில் எமது நிலைப்பாட்டை நாங்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

சர்வதேச மன்றங்களில் எமது வாக்கினை நாம் பாவிப்பது எங்ஙனம்? இந்த விடயத்தில் நாங்கள், கிட்டும் உதவியில் தங்கியிருந்து அதன்படி தீர்மானங்களை எடுக்க கூடாது. உதவி உறவுகளிலிருந்து அப்பால் செல்ல வேண்டும், உதவி உறவுகள் எமது சுதந்திரத்தை கட்டுப்படுத்தக் கூடியவை, பனாமா, கிரனாடா படையெடுப்புக்களின் போது நடந்த சம்பவங்கள் நல்ல உதாரணங்கள். அதனால், நாங்கள் பெருமளவில் உதவியில் தங்கியிருக்கும் நிலையை தவிர்த்து, வர்த்தகத்தில் தங்கியிருக்கும் நிலையை கட்டியெழுப்பிக்கொள்ள வேண்டும்.

மற்றொரு விஷயம், பெரிய வல்லரசுகளை ஒன்றுக்கு எதிராக மற்றதை தூண்டிவிடும் விளையாட்டும் இனிமேல் வெற்றிகாணப்போவதில்லை என்பது. அதுமட்டுமல்லாமல் ஒரு சிறிய நாடு பெரிய வல்லரசொன்றினால் ஆக்கிரமிக்கப்படும் போது, விசேஷ உறவுகள் காரணமாக அதில் வேறொரு நாடு தலையிடும் என்று இனி நம்பிக்கொண்டிருப்பதற்கும் சாத்தியங்கள் இல்லை. பனாமாவில் நடந்தது இதனை தெளிவாக்குகிறது. எதிர்காலத்தில் நமது நடவடிக்கைகள் அனைத்தும் சர்வ ஜாக்கிரதையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனையே இது காட்டுகிறது. இனி இலகு வழி ஒன்றுமில்லை; உங்களுக்கு உதவுவதற்கு யாரும் வரப்போவதில்லை; அதனால் உதவி கோரி குரலெழுப்ப வேண்டிய அவசியம் வராதவிதத்தில் நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். எங்களுக்கு உதவி புரியக் கூடிய பல பிராந்திய நண்பர்களையும் நாங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். தொண்ணூறுகளில் அத்திசையை நோக்கி நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். குறிப்பாக, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடன் நாங்கள் விசேஷ உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

முன்னைய கருத்தில், பிரதான பிரிவுகள் எதனுடனும் சேராதிருந்தமையே அணிசேராமை என்று கருதப்பட்டது. அந்தப் பிரிவுகளெல்லாம் அடிபட்டுப் போயிருக்கிற இன்றைய நிலையில், அணி சேராமையின் பொருள் என்ன? அணி சேரா இயக்கம் இப்பொழுது இப்பிரச்சினையை எதிர் கொள்கிறது என நான் நினைக்கிறேன்.

எந்த ஒரு நாட்டினதும் வெளிநாட்டுக் கொள்கையின் முதன்மையான குறிக்கோள் சுதந்திரம் இறைமை, தன்னாதிக்கம் என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்வதாகும். குறிப்பாக, பெரிய காவில் இராணுவ பலம் எதுவுமில்லாத சிறிய நாடுகள் நண்பர் மற்றும் அயலவர்களுடன் உறவுகளை எவ்வாறு பேணுவது என்ற விஷயத்தில் மிக்க கரிசனையுடன் செயற்படுதல் அவசியம். அதனால், '90 களில் எமது 'இந்தியக் கொள்கை' அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப்போகிறது. இப்பொழுது சமத்துவமற்ற ஓர் ஏற்பாடு என்று கருதப்படும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தவிர்த்து இந்தியாவுடன் நட்புறவு ஒப்பந்தமொன்றை நாங்கள் ஏற்படுத்திக் கொள்வது எப்படி? நாம் இந்தியாவுடன் நட்புறவு உடன்படிக்கையொன்றை வைத்துக்கொண்டால், அடுத்த பிரதான நாடான பாகிஸ்தானுடன் எமது உறவு எவ்விதம் அமையும்? வரும் தசாப்தத்தில் நாங்கள் சந்திக்க வேண்டியிருக்கும் பிரதான பிரச்சினைகள் இவை.

குறிப்பாக சந்தைவசதிகள் போன்றவற்றை வழங்குவதில் இந்தியா பேரளவு ஆற்றல்களைக் கொண்டிருக்கிறது. இந்தவாய்ப்புக்களை வியாபாரம் மற்றும் கூட்டு முயற்சிகள் என்பவற்றுக்கூடாக முழு அளவில் நாங்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய விதத்தில் இந்தியாவுடன் உறவுகளைக் கட்டியெழுப்புவது மிக முக்கியமானது என எண்ணுகிறேன்.

இலங்கையைப் பொறுத்தவரையில் '90 கள் மீளமைப்புக்களைச் செய்யும் ஒரு தசாப்தமாக இருக்கிறது. வெளிநாட்டுக்கொள்கைக்கும் இது பொருந்தும். எமது சமூக, பொருளாதார, அரசியல் நலன்களை சர்வதேச ரீதியில் வென்றெடுக்கும் வகையில் எமது உத்தி அமைய வேண்டும்.

எமது இளம் சந்ததியினரிடையே சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வை தூண்டுவதும் ஒரு வழியாக இருக்கும். மீளமைப்புக்கான எமது முழு முயற்சிகளினதும் ஒரு பகுதியாக இது அமையும்.

# 1990 களின் தசாப்தம்
# தேசத்தை கட்டியெழுப்பும் கடும்பணி

ஹெக்டர் அபேவர்தன

கட்டுரையாளர் லங்கா சமசமாஜ கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர். இரண்டாவது உலகப் போர் இடம் பெற்ற வருடங்களில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் கட்சி ஒடுக்கப்பட்ட பொழுது தலைமறைவாகிய அவர் பல வருடங்களை இந்தியாவில் செலவிட்டார். சுதந்திரத்துக்குப்பின்னரும் சிலகாலம் இந்தியாவில் இடதுசாரி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். நாடு திரும்பிய பின்னர் கட்சியின் முக்கிய கோட்பாட்டாளர்களில் ஒருவராக விளங்கினார். 1970 - 1975 காலத்தில் மக்கள் வங்கியின் தலைவராக செயலாற்றிய அவர், வங்கியின் ஆராய்ச்சிப்பகுதியை உருவாக்கியதிலும், ''பொருளியல் நோக்கு'' உள்ளிட்ட வெளியீடுகளைத் துவக்கவைத்ததிலும் முக்கிய பங்கினை வகித்தார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடி நிலையை சரியாக விளங்கிக்கொண்டே அடுத்துவரும் தசாதம் குறித்து நாங்கள் கண்ணோட்டமிட முயல வேண்டும். கடந்தகால அரசியல் தோல்விகள், அவற்றுக்கான காரணங்கள் என்பவற்றுடன் இன்று இயக்கத்தில் இருக்கும் பொருளாதார காரணிகளையும் நாம் கவனத்தில் எடுத்தல் அவசியமாகும்.

சரித்திரம் ஒரு போதும் பின்னோக்கிப் போவதில்லை; அது தொடர்ந்து முன்னோக்கியே செல்கிறது என்று பொதுவாக கூறப்படுவதுண்டு. ஆனால், இலங்கையில் ஒரு விசித்திரமான நிலை காணப்படுகிறது. சுதந்திரம் கிடைத்த கால கட்டத்தில், தேசத்தை கட்டியெழுப்பும் பணியை நாங்கள் தொடங்கியிருக்க வேண்டும். சரித்திரம் குறித்த சரியான புரிந்துணர்வொன்று எமக்கு இருந்திருப்பின், 1948 க்கு முன்னர் உண்மையில் தேசம் என்று எதுவும் இருக்கவில்லை என்பதை நாம் உணர்ந்திருப்போம். உத்தியோகபூர்வமாக நாட்டை ஒருமைப்படுத்திய பிரிட்டிஷ் நிர்வாக அரசொன்றே இங்கு இருந்து வந்தது.

உண்மையில் அரசு என்பது தேசியத்தின் ஒரு நிறுவனமாகும். பண்டங்களின் உற்பத்தியும் பரிமாற்றமும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும் போதும், வணிகம் வரையறுக்கப்பட்டதாக இருக்கும் போதும் ஒரே மொழியைப்பேசும், ஒரே மதத்தைப்பின்பற்றும் மக்கள் குழுக்களிடையே கூட மிகப்பலவீனமான வரையறைகளே இருக்கின்றன; அல்லது அறவே வரையறைகள் இருப்பதில்லை.

அதனால் போக்குவரத்து அமைப்பினை அபிவிருத்தி செய்யாது 25,000 சதுர மைல் பரப்பளவு கொண்ட பாரிய நிலப்பரப்பொன்றை ஐக்கியப்படுத்தி வைத்திருக்க முடியும் என்று எண்ணுவது வீண் கற்பனை என்றே நான் நினைக்கிறேன். பிரிட்டிஷ் காலத்துக்கு முன்பு உண்மையில் இலங்கை என்று ஒன்று இருக்கவில்லை. 'நாடெங்கிலும் சிறுசிறு இராச்சியங்களே காணப்பட்டன. அந்த நிலைமைகளின் கீழ் வேறு அரசியல் அமைப்பு எதுவும் சாத்தியமாக இருக்கவில்லை.

இந்த உண்மைகளை நாங்கள் 1948 ல் சரிவர உணர்ந்து கொள்ளவில்லை. நாட்டில் இருந்த பல்வேறு இன, மத, சாதிக்குழுக்களை ஐக்கியப்படுத்தி. தேசமொன்றை கட்டியெழுப்ப வேண்டிய பணி அப்பொழுது எமக்கிருந்தது. நிலைமையை சரியாக நாங்கள் விளங்கிக் கொள்ளாதிருந்தமையால் அப்பொழுது அப்பணியில் எம்மால் இறங்க முடியவில்லை. அதற்கு மாறாக, பிரிட்டிஷ்காரர்கள் எங்களுக்கு தேசமொன்றை விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று நாம் நினைத்தோம்.

தாய்மொழி மூலமான கல்விக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுத்ததும் ஒருவகையில் பாதகமானதாக அமைந்தது. இதன் விளைவாக புதிய தலைமுறையினர் நவீன கல்வியினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை இழந்தனர். அது மட்டுமன்றி, தம்மைச் சுற்றியுள்ள உலகில் என்ன நடக்கிறது என்பதையும் கூட அவர்களால் சரிவர புரிந்து கொள்ள முடியவில்லை. வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத அளவில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் என்பவற்றில் ஏற்பட்டுவந்த புதிய முன்னேற்றங்களிலிருந்து இந்த தலைமுறையினர் வெகு தொலைவில் ஒதுங்கி நின்றனர்.

### உலக முதலாளித்துவம்

உலக முதலாளித்துவத்தின் சர்வதேச மயமாக்கல் நிகழ்வுப் போக்கு ஏற்கனவே இடம் பெற்று விட்டது. இன்று உலகில் எந்த ஒரு பாகமும் இந்த நிகழ்வுப் போக்கிலிருந்து தன்னைப்பிரித்து வேறுபடுத்திக்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. வியட்னாமின் தற்போதைய அனுபவத்தை இதற்கொரு சிறந்த உதாரணமாக காட்ட முடியும். உலகின் பலம் வாய்ந்த ஏகாதிபத்திய சக்திகளை முறியடித்த நாடு வியட்னாம்; அந்நாடு வலுமிக்க மாக்சிச இயக்கமொன்றைக் கொண்டிருந்த

துடன், அம்மக்கள் வருங்காலத்துக்காக தங்கள் நிகழ் காலங்களைத்தியாகம் செய்தார்கள். அந்நாட்டுக்குள்ளேயே உருவாக்கப்பட்ட மூலதனமொன்றைக் கொண்டு ஓரளவுக்கு தொழில் வளர்ச்சி கொண்ட பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக வியட்னாம் மக்கள் பல வருடங்கள் போராடினார்கள். ஆனால், இவை யாவற்றுக்கும் மத்தியில் இவர்கள் சில வருடங்களுக்கு முன்னர் பட்டினிச்சாவு நிலைமையை எதிர்கொண்டார்கள். இன்று வியட்னாம் அதன் அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது. அத்துடன் சர்வதேச மூலதனத்துடன் சமரசம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. சோவியத் யூனியன் மற்றும் கிழக்கைரோப்பிய நாடுகளின் அனுபவமும் இதுவே.

இன்று திறந்த பொருளாதாரமொன்று அவசியமாக இருக்கின்றது. ஆனால், இலங்கையில் திறந்த பொருளாதாரம் என்ற பெயரில் இடம்பெறும் நிகழ்வின் விளைவாக, எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்பக் கூடிய அளவுக்கு மூலதனமும் தொழில்நுட்பமும் இறக்குமதி செய்யப்படவில்லை. எமது பொருளாதார அபிவிருத்தி இடம்பெற வேண்டிய செல்வழி மற்றும் வேகம் என்பவற்றை நிர்ணயிப்பதில் முதலாளித்துவ சந்தையில் எம்மால் தங்கியிருக்க முடியாது. சர்வதேச மூலதனம் பலமான பேரம்பேசும் நிலையில் இருப்பதனால், நாம் அதனுடன் ஏதோ ஒரு வகையில் சமரசம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது ஆனால் இந்த சமரசத்தை எங்களுக்கு ஓரளவுக்கு அனுகூலமானதாக மாற்றிக்கொள்வது அவ்வளவு கஷ்டமானதல்ல.

எமது தேசத்தின் செல்வம் எமது நிலத்திலும் எமது நீர்ப்பரப்பிலும் இருக்கிறது என்பதனை அங்கீகரிப்பதன் அடிப்படையிலேயே இந்த சமரசம் இடம்பெற வேண்டும். தொழில்நுட்பத்தில் புதிய முன்னேற்றங்களை எய்துவதற்கு நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். விவசாயத்தைப் பன்முகப்படுத்தி, விளைச்சலைப் பெருக்கி உலகச்சந்தைகளில் நுழைவதற்கும். அதற்குத் தேவையான மூலதனத்தைக் கண்டறிவதற்கும் உடன் முயல வேண்டும். வேளாண்மை மற்றும் கடற்றொழில் போன்ற துறைகளில் விஞ்ஞானத்தைப்பிரயோகிப்பதன் மூலம் மட்டுமே இதனை எய்த முடியும்.

சுயதேவைப்பூர்த்தி என்பது ஒரு யதார்த்தமான குறிக்கோள் என்று நான் நினைக்கவில்லை. குறிப்பாக, நவீன உலகில் அது சாத்தியமானதல்ல. சுயதேவைப்பூர்த்தி ஒருபோதும் ஒரு மாக்சிய கருதுகோளாக இருந்ததில்லை. அது ஆரம்பகால முதலாளித்துவத்தின் நோக்கமாக இருந்தது.

புடவைக் கைத்தொழில் போன்ற சில உள்ளூர் கைத்தொழில் வகையறாக்கள் பாதுகாக்கப்பட்ட சந்தையொன்றில் இயங்க முடியும். அதேபோல அவ்வளவு தூரத்துக்கு இயந்திரமயப்படுத்தப்படாத கைத்தொழில்கள் பாதுகாக்கப்பட்ட நிலைமையின் கீழ் செழித்தோங்க முடியும். ஆனால், இப்பொழுது நாம் வாழும் உலகில் மனித உழைப்பினைப் பிரயோகிப்பதனால் மட்டும் உற்பத்தி நிகழ்வதில்லை. அறிவியலையும், தொழில்நுட்பத்தினையும் நேரடியாக பிரயோகிப்பதனால் மட்டுமே உற்பத்தித்திறன் கிடைக்கிறது. இத்தகைய ஒரு சூழ்நிலையில், அறிவியல் ஆற்றல் எம்மிடம் இல்லாவிட்டால் உற்பத்தியில் வெளியுலகுடன் நாம் போட்டியிட முடியாது.

குறிப்பிட்ட ஒரு கைத்தொழிலில் உற்பத்திச்செலவு வேறு இடங்களில் காணப்படும் அதே பொருளின் உற்பத்திச் செலவுடன் நேரடி தொடர்பு கொண்டதாக இருந்தல் வேண்டும். அதனால், எமது நாட்டில் ஊழியத்தின் உற்பத்தி ஆற்றல் ஏனைய நாடுகளின் மட்டத்தைவிட குறைவானதாக இருப்பின் எமது உற்பத்தி மிகைகள் குறைவானவையாகவே இருக்கும். இன்று கைத்தொழில்கள் பாரிய அளவிலான முதலீடுகளை வேண்டி நிற்கின்றன. எமது விவசாயத்திலிருந்து இந்த அளவு தொகையை நாம் திரட்ட முடியாது.

இது பல்தேசிய கம்பனிகள் குறித்த பிரச்சினைக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. உற்பத்தியின் பல்வேறு பிரிவுகளில் பல்தேசிய கம்பனிகளின் பங்கு குறித்து ஒரு தப்பபிப்பிராயம் நிலவி வருவதாக நான் நினைக்கிறேன். மாற்றீடாக எம்மால் பொருட்களை உற்பத்தி செய்யக் கூடிய துறைகளில், பல் தேசிய கம்பனிகளுக்கு எமது சந்தைகளில் நுழைவதற்கு வாய்ப்பளிப்பது எமக்கே நாம் செய்து கொள்ளும் ஒரு துரோகச்செயலாகும். அத்தகைய பிரிவுகளில் பல் தேசிய கம்பனிகளின் ஊடுறுவலை நாங்கள் தடுத்து நிறுத்த வேண்டும். ஆனால், பல நூற்றாண்டு காலமாக வெற்றுநிலமாக இருந்து வந்ததும் அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு தேவையான உணவினையேனும் உற்பத்தி செய்ய முடியாதிருந்ததுமான மொனராகலை போன்ற ஓரிடத்தைப் பொறுத்த வரையில், பாரிய அளவிலான மூலதன முதலீடும், சரியான பயிர்களின் தெரிவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த முடியும். மொனராகலையில் இடம்பெறும் சீனி உற்பத்தியை உயர் தொழில்நுட்பத்தின் பாவனை குறித்த மிகச்சிறந்த உதாரணமாக காட்ட முடியாது. ஆனால், அம்மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் முதன்முத

லாக விரிவான அளவில் ஒரு பயிர் விளைவிக்கப்படுகிறது என்பதனையும், அது பெருந்தொகையான மக்களுக்கு வாழ்க்கை வருமானத்தை கொடுத்து வருகிறது என்பதனையும் நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

பல்தேசிய சம்பனிகளுக்கு மாற்றீடாக ஏதாவது இருப்பின் நாம் அதனை நாட முடியும். ஆனால் அத்தகைய மாற்றீடொன்று இருப்பதாக நான் நினைக்கவில்லை. வெளிநாட்டு மூலதனத்தை இங்கு கவர்ந்திழுப்பதற்கும், வேலையற்றிருக்கும் பெருந்தொகையானோருக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நாங்கள் சில ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டித்தான் இருக்கிறது.

இவையெல்லாம் சோஷலிசத்துக்கு வெகுதூரம் அப்பாற்பட்டவை. ஆனல், அடுத்து வரும் பத்து அல்லது இருபது வருடங்களுக்கு நாங்கள் சோஷலிசத்தைப்பற்றி நினைக்க முடியாது. குணாம்ச மாற்றமொன்றைப்பற்றி நினைப்பதற்கு நாம் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆனால், வேறு சில மாற்றீடுகள் இருக்க முடியும். கிழக்கை ரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் இடம் பெற்று வரும் மாற்றங்கள் எத்தகைய விளைவுகளை எடுத்து வரும் என்பது குறித்து எமக்கு சொல்ல முடியாது. அந்நாடுகளின் உற்பத்திப்பெருக்கமும், மூலதனத் திரட்சியும் – தமது கருத்தியல் கண்ணோட்டங்களை அந்நாடுகள் தொடர்ந்து பேணி வரும் பட்சத்தில் - எம் நாடுகளுக்கு பேருதவியா இருக்கும்.

முதலாளித்துவ நாடுகளில் இடம் பெற்ற மிகை உற்பத்திக்கு ஒரு பரிகாரமாகவே மார்க்ஸ் சோஷலிசம் குறித்து பேசினார் என்பதனை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும். பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு வழியாக அவர் சோஷலிசத்தைப்பற்றி பேசவில்லை. ஆனால் தொடரான பல நிகழ்வுகள், ஒரு புறத்தில் எமது நாடுகளில் முதலாளித்துவம் வளர்ச்சி காண முடியாத ஒரு நிலையையும், மறுபுறத்தில், தற்போதைய நிலைமைகளுக்கு எதிராக போராடுவதற்கு சோஷலிசத்தின் பெயரிலன்றி வேறெந்த வகையிலும் மக்களை ஒன்று திரட்ட முடியாத ஒரு நிலையையும் தோற்றுவித்துள்ளன. ஆகவே சோஷலிசம் இன்னமும் ஒரு கோட்பாட்டு ரீதியான சுலோகமாகவே இருக்கிறது. சோஷலிசம் குறித்த நம்பிக்கை இல்லாது, தற்போதைய நிலைமைகளுக்கு எதிரான போராட்டத்தில் மக்களை நடத்திச் செல்லுதல் கஷ்டமானதாகவே இருக்கும். ஆனால், நாளையே சோஷலிச சமூகமொன்றை கட்டியெழுப்புவோம் என்ற வாக்குறுதியை வழங்கும் தவற்றினை நாம் விடக்கூடாது.

எம்மைப்பற்றியும், எமது வரலாற்றைப்பற்றியும், எம்மைச் சுற்றியுள்ள உலகம் பற்றியும் நின்று நிதானித்து சற்று உள்நோக்கிப்பார்ப்பதற்கு இப்பொழுது காலம் வந்திருக்கிறது. எமது பார்வையின் எல்லைகளை மேலும் விரிவாக்கி, எமது ஆளுமைகளை ஒரு பரந்த தளத்தில் வளர்த்துக்கொள்வதற்கு உரிய தருணம் இதுவே. உற்பத்திப் பெருக்கத்தில் நாம் கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

சார்க் பிராந்திய நாடுகளுடன் நாங்கள் கலந்தாலோசித்து, தொடர்புகளை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். மேலும் பிராந்தியத்தில் இயங்கும் அரசு சாரா அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து, உற்பத்தி, சந்தைப்படுத்தல், உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற விஷயங்களில் எம்மால் கூட்டாக சிந்திக்க முடியாதா என்பதனைப் பரிசீலித்துப்பார்க்க வேண்டும். சுய தேவைகள், தேச நலன், மனித உரிமைகள் போன்ற விஷயங்களில் கவனஞ் செலுத்தாதபட்சத்தில் '90 களில் வளர்முக நாடுகளுக்கு எந்தவித சுபிட்சமும் கிட்டப்போவதில்லை

இன்று அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு பணி மக்களின் விழிப்புணர்வை தூண்டுவதாகும். நெருக்கடிகள் சூழ்ந்திருக்கும் இக்காலகட்டத்தில், நீதி நியாயத்துடன் கூடிய உற்பத்தி, வளர்ச்சி மற்றும் நாட்டு நலன் என்பவற்றின் பெயரால் அரசியல் கட்சிகள் மாற்றுக் கொள்கைகளை மக்கள் முன் வைத்தல் அவசியம்.

தேச நலனை கருத்தில்கொண்டு நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டிய தருணம் வந்திருக்கிறது. எங்கள் பிரச்சினைகளை நாங்கள் தீர்த்துக் கொள்ளாது ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் வெளிநாட்டு, முதலாளித்துவ சக்திகள் எம்மை அழித்து விடும். வெறும் அரச தொழில் முயற்சியான சோஷலிசம் ஒன்றைப்பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருந்த காலகட்டம் முடிவுக்கு வந்துவிட்டது என்றே நான் நினைக்கிறேன். சமூக மேம்பாட்டையும், பொது நலனையும் முக்கிய குறிக்கோளாக கொண்டதும், தனியார் தொழில் முயற்சிக்கு இடமளிக்கக் கூடியதுமான சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டியதே இன்று எம்முன்னிருக்கும் பணியாகும்.

(14 ம் பக்கத் தொடர்ச்சி

கிறது. ஏனென்றால், மூலதனம், தொழில்நுட்பம், சந்தைகள், மூலப்பொருட்கள் போன்ற அனைத்துமே இந்த கம்பனிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இன்றைய யதார்த்த நிலை இதுதான்.

# உர மானியமும் அரிசி இறக்குமதிகளும்

ஆரிய அபேசிங்க

இலங்கையில் 1962 தொடக்கம் உரம் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த மானியம் 1989 டிசம்பர் 31ஆந் திகதியன்று அரசாங்கத்தினால் வாபஸ் பெறப்பட்டது. முதலில், நெல் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கே மானியம் வழங்கப்பட்டது. பின்னர் இது விரிவு பெற்று 1972 அளவில் பொது உரமானியமாக மாற்றமடைந்தது. உர இறக்குமதியில் 80% ஐ பொதுத்துறையும் 20% ஐ தனியார் துறையும் பெற்றிருக்கின்றன. இறக்குமதி செய்யப்படும் உரம் கொழும்பிலும், கொழும்பைச் சூழவும் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் கலவை செய்யப்படுகிறது. 1983 ல் இருந்து தேசிய உரச் செயலகமே உரமானியத்தை நிர்வகித்து, வழங்கி வந்திருக்கிறது. உரத்தைப் பொறுத்த வரையில் விலைக்கட்டுப்பாடு என்று ஒன்றில்லை. ஆனால், இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும் செயலகம் நிர்ணயிக்கும் விலைகளிலேயே பல்வேறு உரக் வகைகளையும் விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது. இலங்கையில் நுகரப்படும் மொத்த உரத்தில் 50% ஐ உரக் கூட்டுத்தாபனமும், 30%ஐ மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் இறக்குமதி செய்கின்றன. தனியார் துறை இறக்குமதியாளர்கள் (நிர்ணயிக்கப்பட்ட விலைகளில்) உரவிற்பனையில் இப்பொதுத்துறை அமைப்புக்களுடன் போட்டியிட்டு வருகின்றனர்.

உர மானியம் வாபஸ் பெறப்படும் வரையில் இறக்குமதி செய்யப்பட்ட ஆறு வகை உரங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வந்தது. ட்ரிப்பில் சுப்பர் பொஸ்பேட் (TSP), ரொக் பொஸ்பேட் (RP) ம்யுரேட் ஒப் பொட்டாஷ் (MOP), என். பி. கே. மற்றும் அம்மோனியம் சல்பேட் என்பவையே இந்த உர வகைகள். இலங்கையில் பயன்படுத்தப்பட்ட மொத்த உரத்தில் இவை 90% க்கும் அதிகமாக இருந்தன. மானியத்துக்கான நிதிச்செலவு கணிசமான அளவில் குறைக்கப்பட்டதற்கு மத்தியிலும், உர விலைகள் 1983 மே மாதத்திலிருந்து உண்மை நியதிகளில் வீழ்ச்சியடைந்து வந்த போதிலும், பெயரளவு நியதிகளில் நிலையாக இருந்து வந்திருக்கின்றன. இரு காரணிகளின் நிமித்தம் இது சாத்தியமாகி இருக்கக்கூடும்:

1. அரச உர உற்பத்திக்கூட்டுத் தாபனத்தின் (இப்பொழுது மூடப்பட்டுள்ள) சபுகஸ்கந்த உற்பத்தித் தொழிற்சாலையின் செலவு கூடிய உள்ளூர் யூரியா உற்பத்திக்குப் பதிலாக, 1985 ல் இத் தொழிற்சாலை மூடப்பட்டதனையடுத்து மலிவான இறக்குமதிகள் வந்தன. அதன் பின்னர் அனைத்து உர வகைகளும் இறக்குமதி செய்யப்பட்டன.

2. சர்வதேச ரீதியில் உர விலைகள் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தன. மதிப்பிடப்பட்ட உர மானியச் செலவு 1981 ல் 120 கோடி ரூபாவாக இருந்து 1987 ல் 50 கோடி ரூபாவாக வீழ்ச்சியடைந்தது. இது 1988 ல் 60 கோடி ரூபாவாகவும், 1989 ல் 100 கோடி ரூபாவாகவும் இருந்தது. மானியம் காரணமாக நுகர்வோர் மட்டத்தில் உர விலைகளில் ஏற்பட்ட குறைவு (மானியம் இல்லாதிருந்தால் நிலவியிருக்கும் விலையில் இந்தக் குறைவின் பங்கு) 1980 களின் ஆரம்பத்தில் 40 - 45% ஆக இருந்து, 1987 ல் 25% ஆக குறைந்திருந்தது. 1989 ல் இது 30% வரையில் இருந்தது.

பல்வேறு உரங்களைக் கொண்ட கலவையாக உரம் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதில் ஒவ்வொரு கலவையும் குறிப்பிட்ட ஒரு பயிருக்குப் பொருத்தக்கூடியது. இதற்கான ஒரே விதிவிலக்கு நெல்லுக்கு யூரியா நேரடிப் பாவனையும், தேயிலைக்கு அம்மோனியம் சல்பேட் உபயோகமுமாகும். கலவைகளில் சேர்க்கப்பட்டிருக்கும் உர வகைகள் குறித்த தரவுகளை, கலவை

அட்டவணை 1
பயிர்வாரியாக உர மானியம்
( மொத்த மானியத்தில் % )

| வருடம் | நெல் | தேயிலை | இறப்பர் | தேங்காய் | ஏனையவை | மொத்தம் ( ரூ. பத்து இலட்சம் ) |
|---|---|---|---|---|---|---|
| 1983 | 63 | 16 | 03 | 05 | 13 | 705 |
| 1984 | 60 | 19 | 03 | 06 | 12 | 1037 |
| 1985 | 61 | 18 | 03 | 06 | 12 | 748 |
| 1986 | 61 | 16 | 04 | 05 | 14 | 613 |
| 1987 | 61 | 16 | 04 | 05 | 14 | 500 |
| 1989 | 62 | 16 | 04 | 04 | 15 | 1000 |
| 1990 (East) | 64 | 16 | 04 | 03 | 16 | Nil |

களின் விற்பனை விவரங்களுடன் சேர்த்துப்பார்த்தால், பயிர் வாரியாக உரம் எவ்வாறு பகிரப்பட்டிருக்கிறது. உர மானியத்தை வெவ்வேறு பயிர்கள் எவ்விதம் பகிர்ந்து கொள்கின்றன போன்ற விவரங்களைப் பெற முடியும். மானியத்தில் 60% க்கு கூடுதலான பகுதியை நெல் விவசாயிகள் பெறுகின்றனர் என்றும், தேயிலை பயிரிடுவோர் 17% ஐ மட்டுமே பெறுகிறார்கள் என்றும் அத்தகைய கணிப்பொன்று தெரிவிக்கிறது. இறப்பர் 4% ஐயும் தெங்குப்பயிர் 5 சதவீதத்தையும் பெற்றுக் கொள்ளும் அதே வேளையில், மரக்கறி வகைகளிலிருந்து கொக்கோ, கோப்பி, சராம்பு, மிளகு போன்ற களப் பயிர்களும் ஏற்றுமதிப் பயிர்களும் மிகுதி 14% ஐ பெறுகின்றன.

### விளைதிறன்

இலங்கையின் அரிசி உற்பத்தியில் உர மானியம் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. மானியம் இல்லாதிருந்தால் கிடைத்திருக்கும் உற்பத்தி மட்டத்திலும் பார்க்க 1983 ல் 20% கூடுதல் உற்பத்தி கிடைத்தது என்பதனையும், இது 1986 ல் 10% கூடுதலாக இருந்தது என்றும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. 1986ல் இது குறைவடைந்ததற்கு காரணம் மானிய விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். ஆனால், அரிசியுடன் ஒப்பிடும் போது, மரப்பயிர்த்துறையில் உர மானியத்தின் சாதகமான விளைவுகள் அவ்வளவு தூரம் உணரப்படவில்லை.

(அ) உற்பத்திச் செலவுகளில் இதன் தாக்கம் அற்பமானதாகவே இருந்தது. தெங்கு உற்பத்தியைப் பொறுத்தளவில், மானியம், உற்பத்திச் செலவை 1 சதவீதத்துக்கு குறைவாகவே குறைவடைய வகை செய்தது.

(ஆ) மரப்பயிர்த் துறையில் உரப் பாவனையின்மானிய விலைத்தாக்கம் இன்னமும் தெளிவற்றதாகவே இருக்கிறது. தேயிலையைப் பொறுத்தவரையில், உரப் பாவனை அதன் குறுங்கால விலைத் தளம்பல்களுக்கேற்ப கணிசமான அளவில் மாற்றமடையவில்லை, உர விலைகள் 50% க்கும் கூடுதலாக உயர்ந்ததனை அடுத்து 1980 - 1981 ல் தேயிலைத் துறையில் உரப்பாவனை 5% ஆல் மட்டுமே வீழ்ச்சி கண்டிருந்தது. மறுபுறத்தில், தேயிலை விலைகள் 100% (1982 - 1984) அதிகரித்தபோது உரப்பாவனை 40% ஆல் மட்டுமே அதிகரித்திருந்தது.

தேயிலை உற்பத்தித்துறையில் 60% க்கும் கூடுதலான உற்பத்தியை அரசாங்கத்துறையே உற்பத்தி செய்கிறது. விவசாய விஞ்ஞான முறைப்படி சிபார்சு செய்யப்படும் உரப்பாவனை அளவினை இத்துறை முறைப்படி உபயோகித்து வருவதே, மேற்சொன்ன விதத்தில் எதிர்விளைவுகள் ஏற்படாமைக்குரிய காரணமாக இருக்கலாம். தனியார் துறையோவெனில், உர விலைகளிலும் பார்க்க திரவத்தன்மை நிலைகளை அனுசரித்தே உர உபயோகத்தை மேற்கொண்டு வருகிறது. இந்நிலை உண்மையாயின், உரப்பாவனையை ஊக்குவிப்பதற்கு மானியத்தைக் காட்டிலும் போதிய கடன் வசதிகளே பொருத்தமான உபகரணமாக இருக்கும் என்பதை இது காட்டுகிறது.

இறப்பரை பொறுத்தவரையில், உச்சமட்ட விளைச்சலை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் - குறிப்பாக நடுகைக்குப் பின்னர் 1 முதல் 5 வருடங்களுக்கு - உரம் உபயோகிக்கப்படுதல் வேண்டும். பாலெடுத்தல் 7 வருடங்களில் தொடங்கிய பின்னர் போதிய உரம் உபயோகிக்கப்பட்டால் விளைச்சல் 25% அதிகரிக்கும். நெல், தேயிலை போன்ற பயிர்களில் போல இறப்பரில் உரப்பாவனையின்

அட்டவணை 2

நெல்லுக்கான உர மானியமும் அதன் தாக்கமும்

| | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|
| மானியம் ( ரூ. பத்து இலட்சம் ) | 444 | 622 | 456 | 393 | 305 |
| உற்பத்தி செய்யப்பட்ட மேலதிக அரிசி ( '000 தொன்கள் ) | 290 | 310 | 225 | 160 | – |
| மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட அரிசியுடன் உரத்தின் சிக்கன விலைப்பெறுமதியையும் சேர்த்து உற்பத்திச் செலவுகள் ( ரூ. பத்து இலட்சம் ) | 1569 | 1764 | 1306 | 951 | – |
| எல்லை விலைகளில் மேலதிக அரிசி உற்பத்தி ( ரூ. பத்து இலட்சம் ) | 1456 | 1512 | 1418 | 731 | – |
| பொருளாதாரத்துக்கான நட்டம் (உர மானியம் காரணமாக அரிசி உற்பத்தியில் இடப்பட்ட மேலதிக மூலவளங்களுக்கும் எல்லை விலையில் மதிப்பிடப்பட்ட மேலதிக அரிசி உற்பத்திக்கும் இடையிலான வித்தியாசம்). | 113 | 252 | 158 | 220 | – |

தாக்கம் உடனடியாக தெரிவதில்லை. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இறப்பரில் 70% ஐ தனியார் துறையினரே உற்பத்தி செய்து வருகின்றனர். வாழமையாக வே இவர்கள் உரப் பாவனையில் தயக்கம் காட்டி வருகின்றனர்.

மறுபுறத்தில், மிகுதி 30% ஐ பொதுத்துறையைச் சேர்ந்த மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும், இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் உற்பத்தி செய்கின்றன. முறைப்படி சிபார்சு செய்யப்படும் உர அளவுகளை இவை உபயோகித்து வருவதனால் தனியார் துறையிலும் பார்க்க அதிகளவு விளைச்சலைப் பெற்று வருகின்றன.

இலங்கையில் பிரதான பயிர்களில் உர உபயோகம் 1975 இலிருந்து 1987 வரையில் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. இவ்விதமாக, மானியத்தில் 12-14% ஐ பெற்றுவரும் சிறு விவசாய பயிர்கள் தவிர, நெற்துறையே விலை மானியத்தின் கூடிய அனுகூலத்தைப் பெற்று வந்திருக்கிறது. உர மானியம் காரணமாக 1986 ல் விவசாயிகள் 10% மேலதிக நிலப்பரப்பை நெல் உற்பத்திக்குள் எடுத்து வந்தார்கள். குறிப்பாக இது மகாவலி பிரதேசத்தில் இருந்தே வந்தது. இந்த மேலதிக 10% நிலப்பரப்பில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்காக உரம், விதைகள், ஊழியம்; உழவு இயந்திரச் சேவைகள், கடன் மற்றும் களஞ்சிய வசதி போன்ற உற்பத்தி உள்ளீடுகளில் 95.1 கோடி ரூபா செலவிடப்பட்டது. ஆனால், இதன் விளைவாக பெறப்பட்ட 160,000 தொன் மேலதிக அரிசியை சர்வதேசச் சந்தையில் 73.1 கோடி ரூபாவுக்கு கொள்வனவு செய்யக் கூடியதாக இருந்திருக்கும். இந் நடவடிக்கையின் விளைவாக 22 கோடி ரூபா பெறுமதியான மூல வளங்கள் விரயம் செய்யப்பட்டுள்ளன.

உர மானியம் வழங்கப்பட்டு வந்தபோது இரு முக்கிய பிரச்சினைகள் காணப்பட்டன.

(அ) நீர்க்கட்டணங்கள் மானியப் படுத்தப்பட்டிருந்தமையாலும், உள்நாட்டுஅரிசிவிலை சர்வதேச விலையிலும் பார்க்க உயர்வாக இருந்தமையாலும் அரிசியிலிருந்து வேறு பயிர்களுக்கு பன்முகப் படுத்துவது அரசாங்கத்துக்கு கடினமானதாக இருந்தது.

(ஆ) காணித்துண்டின் அளவும் பண்ணையின் அளவும் தொடர்புபட்டவை. குத்தகைக்காரரையும், பயிர் பயிர்த்து கொள்வோரையும், மறைமுக குத்தகை முறையையும் கொண்டிருக்கும் செல்வந்த விவசாயிகளுக்கே மானியத்தில் கூடுதலான பகுதிசென்றிருக்கும் என்பதனையே இது காட்டுகிறது.

உர் மானியம் வாபஸ் பெறப்படுவதனை நியாயப்படுத்தும் பொருட்டு உர மானியத்துக்கெதிராக முன்வைக்கப்பட்ட தர்க்கங்கள்!

1. திறமை அத்துடன் (அல்லது) சமத்துவம் என்ற அடிப்படையில் அதனை நியாயப்படுத்த முடியாது
2. செல்வந்த விவசாயிகளுக்கே அது நன்மையளிக்கிறது.
3. இலங்கையின் பயிர்ச்செய்கை மாதிரிகளில், மானியம், செலவு கூடிய சிதைவுகளை எடுத்து வருகிறது.
4. விவசாயத்துறையில் பயிர்களை பன்முகப்படுத்தும் அரசாங்கத்தின் நோக்குக்கு அது தடையாக இருந்து வருகிறது.
5. மரப்பயிர் உற்பத்தியில் அது எந்தவித தெளிவான தாக்கங்களையும் எடுத்து வரவில்லை.

உர மானியம் வாபஸ் பெறப்பட்டதன் தாக்கங்கள்

1. இந்த மானியத்தில் 60% வரையில் பெற்று வந்த நெற் பயிர்த் துறையே அதிகளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான விவசாயிகள் உயர் விளைச்சல் தரும் நெல்லினங்களை பயன்படுத்தி வருவதனால்; அவை அதிகளவில் செயற்கை உர வகைகளை வேண்டி நிற்கின்றன. இதில் இயற்கை உர வகைகள் குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே உபயோகிக்க முடியும். சில குறிப்பிட்ட உள்ளூர் உர வகைகள் போதியளவில் கிடைப்பதில்லை அத்துடன் இறக்குமதி செய்யப்படும் அசேதன உர வகைகளுக்கு

அட்டவணை 3

பயிர்வாரியாக உரப்பாவனை : 1975 – 1987

( '000 மெட்ரிக்தொன்கள் )

| பயிர் | 1975 | 1976 | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நெல் | 97.9 | 72.4 | 128.7 | 136.1 | 130.4 | 189.9 | 155.6 | 167.1 | 162.1 | 186.8 | 202.5 | 232.6 | 245.0 |
| தேயிலை | 106.7 | 95.3 | 80.1 | 115.5 | 105.2 | 109.9 | 103.3 | 102.6 | 115.5 | 137.4 | 149.5 | 128.9 | 136.3 |
| இறப்பர் | 20.3 | 13.0 | 12.4 | 20.9 | 23.2 | 22.0 | 16.8 | 16.5 | 18.5 | 23.4 | 24.2 | 26.3 | 24.7 |
| தென்னை | 40.6 | 30.7 | 29.1 | 42.6 | 49.6 | 55.8 | 37.7 | 30.3 | 35.7 | 49.9 | 41.0 | 31.4 | 42.2 |
| ஏனையன | 50.8 | 52.9 | 53.2 | 64.9 | 64.0 | 52.9 | 62.9 | 73.4 | 73.3 | 75.8 | 77.9 | 94.5 | |
| மொத்தம் | 316.3 | 264.3 | 303.5 | 380.0 | 372.4 | 439.6 | 366.3 | 379.4 | 405.2 | 470.8 | 493.4 | 497.1 | 512.7 |

அட்டவணை 4

நெல்லுக்கான உரமானிய விநியோகம்

| | மொத்த நிலப்பரப்பு ('000) | விதைக்கப்பட்டது | உரத்துக்கான செலவு (ஹெக்.ரூ.) | காணித்துண்டின் சராசரி அளவு | பண்ணை அலகுகளின் எண்ணிக்கை ('000) (%) | மானியத்தின் பங்கு (%) | ஒரு விவசாயிக்கான மானியம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| ஈர வலயம் | | | | | | | |
| மழை நீர் | 170 | 19 | 1165 | 0.45 | 205 | 32 | 330 |
| நீர்ப்பாசனம் | 110 | 12 | 1285 | 0.50 | 120 | 19 | 405 |
| உலர் வலயம் | | | | | | | |
| மழை நீர் | 120 | 14 | 1110 | 0.80 | 100 | 15 | 450 |
| நீர்ப்பாசனம் | 495 | 55 | 1230 | 1.40 | 220 | 34 | 970 |
| மொத்தம் | 895 | 100 | 1205 | — | 645 | 100 | 580 |

அவை பிரதியிடாகவும் இருக்க முடியாது. நெல் உற்பத்தியில் உரத்தின் செலவு 100% உயர்ந்துள்ளது. இதன் விளைவாக தாராளமயப்படுத்தப்பட்ட திறந்த சந்தையில் ஒரு கொத்து நெல்லுக்கான நுகர்வோர் மட்ட விலை உயர்ந்து செல்லும். உயர் உர விலைகளுடன் அரிசி கொத்து ஒன்றின் விலை 25 ரூபா வரையில் உயரலாம். விவசாயிகள் தமது நெல்லுக்கு உயர் எல்லைகளைப் பெறுவதனையடுத்து, நெல்லில் அதேயளவு உர உபயோகத்தை விவசாயிகள் மேற்கொள்வதற்கு உதவியிருக்க முடியும். கொத்து ஒன்று ரூ. 10 என்ற விகிதத்தில் மலியான அரிசி இறக்குமதி செய்யப்படுவதனையடுத்து நுகர்வோர் பயனடையும் அதே வேளையில், விலை வீழ்ச்சி காரணமாக நெல் உற்பத்தி சிக்கனமற்றதாக இருப்பதனை விவசாயிகள் காண்பார்கள்.

2. பெரும் போகத்திலும் கூட, நெல் உற்பத்தியிலிருந்து வேறு பணப்பயிர்களுக்கு ஒரு மாற்றம் ஏற்படுவதனால், பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணியைச் செலவழித்து அரசாங்கம் பெருமளவு அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை தோன்றும்.

3. கிராமத்துறையில் வறுமை மற்றும் நிலமற்ற தன்மை என்பவற்றின் விளைவாக, மறைமுக குத்தகை முறைக்கூடாக செல்வந்த விவசாயிகளின் பிடி நில உடைமையில் இறுக்கமடையும்

4. சனத்தொகையின் உணவு உட்கொள்ளலை சமநிலைப்படுத்துவதற்கு உத்திகள் கைக்கொள்ளப்படாவிட்டால் போஷாக்கின்மை பரவும்.

5. தேயிலை கிலோ ஒன்றுக்கான உற்பத்திச் செலவு 4 ரூபாவினால் மட்டுமே அதிகரிக்கும். ஏற்றுமதிச் சந்தைகளில் எமது போட்டி நிலையை இது ஓரளவுக்கு பலவீனப்படுத்தும்.

6. செலவுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பொருட்டு உரப்பாவனையில் உடனடியாக பங்கீட்டு முறை இடம்பெறும். இது நீண்ட காலத்தில் உற்பத்தித்திறனில் பாதிப்புக்களை எடுத்து வரும்

இலங்கையில் 1962 ல் இருந்து உரம் மானிய விலைகளில் வழங்கப்பட்டு வந்திருக்கிறது என்பதனை இந்த பகுப்பாய்வு தெளிவாக காட்டுகிறது. விவசாயிகளை நவீன நெல் உற்பத்தி நுணுக்கங்களை பிரயோகிக்க தூண்டுவதற்கே இம்முறை பின்பற்றப்பட்டது. இதில் 60 சதவீதமான மானியம் நெல் உற்பத்தித்துறைக்கே சென்றது. மரப்பயிர்களுக்கு 40% சென்றது; இதில் மூன்றில் இரண்டு பங்கு தேயிலைக்கும், 10% தென்னைக்கும் மிகுதி ஏனைய பயிர்களுக்கும் வழங்கப்பட்டது. புது நுட்பங்கள் பின்பற்றப்பட்டதுடன், சந்தைக் கட்டுப்பாடுகள் காரணமாக நெல்

அட்டவணை 5

தேயிலை : ஒரு கிலோ கிராம் தேயிலை உற்பத்தியில் உரப்பாவனை

| | 1975 | 1980 | 1985 | 1987 |
|---|---|---|---|---|
| சராசரி ஏற்றுமதி அலகு விலை | 9.08 | 33.41 | 60.62 | 52.97 |
| கொழும்பு ஏல மொத்த விலை | 6.90 | 18.33 | 39.01 | 39.30 |
| கொழும்பு ஏல நிகர விலை | 6.04 | 17.73 | 35.39 | 38.06 |
| உற்பத்திச் செலவு | 6.73 | 15.45 | 35.61 | 38.39 |
| உரச்செலவு | 0.78 | 0.79 | 2.56 | [illegible] |
| உற்பத்தியாளர் செலவு | 0.69 | 2.28 | -0.10 | 0.33 |

விலை செயற்கையாக குறைந்த மட்டத்தில் வைக்கப்படிருந்தமையாலும் இது ஆரம்பத்தில் நியாயப்படுத்தப்பட்டது. 1962 க்கு பின்னர் இலங்கையின் நெற்துறை நன்கு வளர்ச்சி கண்டு வந்திருக்கிறது. பாரிய செலவில் அரசாங்கம் உருவாக்கிக் கொடுத்துள்ள நீர்ப்பாசன வசதிகளை அது பெற்றுக்கொள்ளத் தொடங்கியிருக்கிறது. உற்பத்தி உயர் விளைச்சல் தரும் இனங்களுக்கு மாறியுள்ளது. இப்பயிர்கள் மீதான மானியத்தின் தாக்கம் பொருட்படுத்தக்கூடிய அளவில் இருக்கவில்லை. தேயிலையைப் பொறுத்த வரையில் இரு அரச நிறுவனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும், இலங்கை பெருந்தோட்ட கூட்டுத்தாபனமுமே நன்மையடைந்தன. உரப்பாவனை, விலை மட்டங்களுக்கேற்ப அவ்வளவு தூரம் மாற்றமடைவதில்லை என்பதனை வெளிக்கள ஆய்வுகள் காட்டியுள்ளன. உர மானியம் தேயிலை வெளியீட்டில் மிகச் சிறு அளவு தாக்கத்தினையே கொண்டுள்ளது என்பதனை இது காட்டுகிறது.

சிறு விவசாயிகளுக்கு உதவி வழங்கப்பட வேண்டுமானால் 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' போன்ற திட்டங்கள், விவசாயிகள் அமைப்பு, தாராள மயப்படுத்தப்பட்ட நெல் விலைச் சந்தை போன்ற வழிகளுக்கூடாகவே அது வழங்கப்பட வேண்டும். கிராமியக் கொடுகடன் திட்டத்தில் ஒரு மீள் சிந்தனை ஏற்பட வேண்டியதனை இது சுட்டிக்காட்டுகிறது. அத்துடன், விவசாய அபிவிருத்திக்காக தனியான வங்கியொன்று நிறுவப்பட வேண்டிய அவசியத்தையும் தெளிவுபடுத்துகின்றது,

( 6 ம் பக்கத் தொடர்ச்சி )

கிழக்காசியாவின் 'ட்ரகன்' என சொல்லப்படும் நாடுகளுக்கிடையில் தலைவர் என்ற அந்தஸ்தை பெறுவதற்காக ஸ்திரம், தெளிவான கொள்கை, வர்த்தகம் என்பவற்றை ஒன்றிணைத்து செற்பட்ட சாதனையாளர்களான தென்கொரியா, சிங்கப்பூர், தாய்வான், ஹொங்கொங் ஆகிய நாடுகளிலிருநது கற்க வேண்டும்.

இந்நாடுகளின் வெற்றிக்கு அடிப்படையாக இருந்த மூன்று தேவைகள் அதாவது, ஸ்திரம், தெளிவான கொள்கை, வர்த்தகம்; இவற்றில் முந்தைய இரண்டையும் பரீட்சிப்பதில் கடந்த மாதங்களில் நாம் வெற்றிப்பாதையின் வெகுதூரத்தை கடந்துள்ளோம். தேசிய பாதுகாப்பு, பொருளாதார வலிமை என்பன முறையாக மீளமைப்பு செய்யப்பட்டு, தூரநோக்குடைய கொள்கைச் சீர்திருத்தங்கள் என்றுமில்லாதவாறு வேகத்துடனும் உறுதிப்பாட்டுடனும் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை முடிவுகளில் சனசக்தி மற்றும் புதிய கைத்தொழில் சீர்திருத்தக் கொள்கை என்பன குறிப்பிடத்தக்கவை. இத்திட்டங்கள் இரண்டும் ஒருங்கிணைந்து, பொருளாதார ஏணியின் கீழ்படியில் இருக்கும் தனிநபர் தொடக்கம் பரந்த அபிலாஷகளுடன் செற்படும் வர்த்தகர் வரையான பிரிவினருக்கு பயனுள்ள வாய்ப்புக்களை வழங்கும். இவற்றின் வளர்ச்சி சாதனைகளின் உச்ச கட்டத்திற்கு உந்திச்செல்லும்.

தனிநபரின்கௌரவம், மதிப்பு மீதான நம்பிக்கையே இந்த உபாயத்தின் அடிப்படையாகும். எனினும் இந்த விடயம் தொடர்பான எமது இறுதி வெற்றியின் அளவு அல்லது பின்னடைவு நாடளாவிய அளவில் தனிநபர்களை ஒருங்கிணைக்கும், திரட்டும், ஊக்குவிக்கும் சக்தியின் ஒரு பகுதியாகும். பயனுள்ள பங்களிப்பாகட்டும் அல்லது கூட்டு முயற்சிகளின் ஒரு அசைஅாவினதாகட்டும் எவரும் வித்திபாசமானவர்களாக செயற்படலாம், படமுடியும் என்பதை அங்கீகரிப்பது அவசியம். ஈடுபாடின்மை முன்னெடுத்துச்செல்லும் வலிமையின்மை போன்ற குறைபாடுகளன்றி இலங்கை வளங்களின் சட்டுப்பாட்டினால் நுன்பப்படவில்லை என்பதை அதிகாரிகள் உணரத்தலைப்பட வேண்டும். அதிமுக்கியமாக குறைகளை நிவர்த்தி செய்வதையும், திறமையின் தரத்தையுயர்த்துவதையும், அரச திட்டங்களின் அமுல் நடத்தையும் அவர்கள் தமது குறிக்கோளாக ஏற்க வேண்டும். அதேசமயம் வர்த்தகர்களும், தொழில் நிபுணர்களும் நிறுவன அமைப்புகளின் சவாலை ஏற்று உயர்வுக்கான தேடுதலில் இணைந்து கொள்வதுடன் இலங்கையை சுகாதார, சமூக சேவைகளில் உலகின் தலைமை நிலையில் அமர்த்தும், பொருளாதாரத்தை கட்டியெழுப்பும், நிர்வகிக்கும் பணிகளில் அதிக பொறுப்புகளை ஏற்க வேண்டும், இறுதியாக, இலங்கை எங்கும் தனிநபர்கள் சனசக்தி மூலமாவது, ஒருங்கிணைந்து, பொருளுற்பத்தி அதிகரிப்பிற்கும் வளர்ச்சி அபிவிருத்தி இவைகளின் வலுவடைதலுக்கும் உதவ வேண்டும்.

முன்கூறியது போல, தெரிவு எமதே; சோம்பலாக அமர்ந்து கொண்டு உலகம் பல்சாதனைகளை நெருங்குவதை பார்த்துக் கொண்டிக்கலாம்; அல்லது நடைமுறைகளில் தீவிரப்பங்கேற்கலாம். நாம் பிந்தியதை தெரிவு செய்வோமெனின்-நாம் அதையே தெரிவு செய்வோம் என நம்புகிறேன் – எமது வெற்றி இறுதியாக தனியார் சாதனைகளில் தங்கியிருக்கும். அரச திட்டத்தை நெறிப்படுத்தி, நடைமுறைப்படுத்த உதவலாம். எனினும், இறுதிவெற்றி அல்லது தோல்வி தனிநபர் முயற்சியையே சார்ந்திருக்கிறது.

33796

# நிகழ்ச்சிக்குறிப்பேடு

ஜனவரி 1990

01. கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 1990 ஜனவரியில் 937.7 புள்ளிகளாக இருந்ததென தொகை மதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களம் அறிவித்தது. இது 1989 ஜனவரியில் 786.05 புள்ளிகளாகவும், டிசம்பரில் 915.3 புள்ளிகளாகவும் இருந்தது. கடந்த 12 மாதங்களுக்குமான சராசரி 830 புள்ளிகளாகும். இதில் மாதாந்தம் 7.2% சராசரி அதிகரிப்பு பதியப்பட்டிருக்கிறது.

04. நிதியமைச்சின் கீழ் இயங்கிய மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவும், வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டியும் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சு அறிவித்தது. இனி, இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் தொடர்புபடுத்தல் போன்ற அலுவல்களுக்கு இவ்வமைப்பு பொறுப்பாக இருக்குமென்று அமைச்சு அறிவித்தது.

08. சவூதி அரேபியாவில் உழைக்கும் இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பும் பணம் இவ்வருட முடிவில் 1500 கோடி ரூபாவாக இருக்கும் என்று அந்நாட்டுக்கான இலங்கையின் தூதுவர் தெரிவித்தார் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர் அனுப்பும் அந்நியச் செலாவணி, தேயிலை மற்றும் தைத்த ஆடைகள் போன்ற பாரம்பரிய ஏற்றுமதிகளிலிருந்து கிடைக்கும் அளவுகளையும் மிஞ்சிவிட்டது.

இறப்பர் சிறுபற்றுநிலங்கள் புனருத்தாரணத்திட்டச் சித்திட்டத்தில் இரண்டாவது கட்டம் இப்பொழுது உலக வங்கியின் அனுசரணையுடன் இடம்பெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மீள் நடுகைக்கென ஒரு ஹெக்டயார் காணிக்கு 49.400 ரூபா (12 சதவீத வட்டியில்) வழங்கப்படும் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

11. ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 25 இலட்சம் ரூபா என்ற விகிதத்தில், 1990 வரவு செலவுத் திட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டச் செலவினமாக அரசாங்கம் 56 கோடியே 25 இலட்சம் ரூபாவை ஒதுக்கியிருக்கிறது. தொழில் வாய்ப்புக்களையும், வருமானங்களையும் பெருக்கும் செய்திட்டங்களுக்கும், 1989 ல் தொடங்கிய செய்திட்டங்களை நிறைவு செய்வதற்கும் இச்செலவுகளில் முன்னுரிமை அளிக்கப்படும்.

11. விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சின் கொள்கை தீர்மானமொன்றுக்கிணங்க, இவ்வாண்டில் அனைத்து விதை உருளைக்கிழங்கு இறக்குமதிகளும் நிறுத்தப்படும். தேவையில் 30 சதவீதம் மட்டுமே இப்பொழுது உள்ளூரில் உற்பத்திசெய்யப்படுகிறது.

12. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகம் கடந்த வருடம் யுனிசெப் மற்றும் அமைப்புக்களிலிருந்து பெற்ற நிதிகளைக் கொண்டு 855,000 ரூபா பெறுமதியான உதவியை வழங்கியுள்ளது. ஆகக் கூடிய தொகையான 260.000 ரூபா - நொராட் உதவி - பூநகரியில் பெண்களுக்கான வருமான உருவாக்கத் திட்டங்களுக்கென்று வழங்கப்பட்டது

16. நெஸ்பிரே, அங்கர் போன்ற முழு ஆடைப்பால் மா தயாரிப்புக்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மகாராஜா நிறுவனத்தின் துணை நிறுவனமான ஜோன்ஸ் ஓவர்சீஸ் லிமிட், அங்கர் முழு ஆடைப்பால்மா (400 கிறாம்) விலையை ரூ. 47.90 இலிருந்து ரூ. 50 ஆக - ரூ. 2.10 ஆல் - அதிகரித்துள்ளது. பன்னலையில் தொழிற்சாலை வைத்திருக்கும் நெஸ்லே நிறுவனம் நெஸ்பிரே (400 கிறாம்) விலையை ரூ. 1.60 ஆல் அதிகரித்துள்ளது.

19. இலங்கையில் இயங்கும் வங்கிகள் வதிவிடப் பிரஜைகளல்லாதோருக்கு விசேஷ கணக்குகளை திறப்பதற்கு அனுமதியளிக்கும் வகையில் வங்கித் தொழில் சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வைப்புக்களைக் கவரும் நோக்கிலேயே இது மேற்கொள்ளப்படுகிறது. கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர்கள் மறைத்து வைக்கப்படும்.

முறிவடைந்த நிதிக்கம்பனிகளின் பணிப்பாளர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து அரசாங்கம் இப்பொழுது சட்டமா அதிபரை கலந்தாலோசித்து வருவதாக வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார். நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒன்பது நிதிக் கம்பனிகளின் விவரங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

20. சிமெந்து உற்பத்திக்கு தேவையான முக்கிய உள்ளீடுகளில் ஒன்றான செங்கல் சிட்டத்தில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதனால் நாட்டின் சிமெந்து உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த மூலப்பொருள் வழமையாக வெளிநாட்டு வழங்குனர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் மூலம் கொள்வனவு செய்யப்படுகிறது. உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சிறு அளவு தேசிய தேவையை நிறைவு செய்யப் போதியதல்ல.

தலைமை தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாக பதிவு பெற்றது.

உலக வரலாற்றின் புதியதோர்
காலகட்டத்தில் நாங்கள் நுழைந்துள்ளோம்
என்பதனை என்னால் உறுதியாக கூற
முடியும்.

கம்யூனிசத்தின் நெருக்கடி, சோஷலிசத்தின் எதிர்காலம்

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பிரிவு வெளியீடு

பிரதி விலை: ரூ. 10/-
வருட சந்தா: ரூ. 120/-

உரிய முறையில் 'பொருளியல் நோக்கின்' பெயரை
குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள்
காட்டவோ மீளப்பிரசுரிக்கவோ முடியும்.

Printed by Sumathi Publishers, No. 445/1, Sirimavo Bandaranayake Mawatha, Colombo 14.